பக்கங்கள்: 16
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 02 | வள்ளுவர் ஆண்டு 2049 | ஆடி 28 திங்கட்கிழமை 13.08.2018 | கதிர் 281

**இனி இது ரகசியம் அல்ல!**

இந்தியாவின் சர்ச்சைக்குரிய அரசியல்வாதியான சுப்பிரமணியன் சுவாமி புதுடில்லியில் ஏற்பாடு செய்துள்ள ஒரு நிகழ்வில் பங்கு பற்றுவதற்காக அடுத்த மாதம் இந்தியாவுக்குச் செல்கின்றார் இலங்கையின் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ என்ற

பக்கம் 03 »



# அந்நியரிடமிருந்து நாட்டை பாதுகாக்க தமிழரின் ஆதரவை நாடவுள்ளது தெற்கு

## முல்லைத்தீவில் வைத்து வடக்கு முதல்வர் அபாயச் சங்கு

முல்லைத்தீவு, ஓக.13

“எம்மை அடக்கி ஆளவேண்டும் என்று இன்று எண்ணும் பெரும்பான்மைச் சமூகத்தினர் மிக விரைவில் எம்மையும் தமது சகோதரர்களாக அணைத்துக் கொண்டு வெளிநாட்டுச் சக்திகளிடமிருந்து இலங்கையையும் அதன் உள்ளக வளங்களையும் பாதுகாப்பதற்குச் சேர்ந்து போராடவேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படப்போகின்றது.”

- இவ்வாறு நேற்று எச்சரிக்கை விடுத்தார் வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன்.

பக்கம் 14 »

## மயிலிட்டித்துறை புனரமைப்புக்கு அடிக்கல் நடவுள்ளார் ஜனாதிபதி

### 22 ஆம் திகதி யாழ். வருகிறார்



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன எதிர்வரும் ஓகஸ்ட் 22 ஆம் திகதி யாழ்ப்பாணம் வருகிறார். அவர் மயிலிட்டித் துறைமுகத்தின் அபிவிருத்திப் பணிகளுக்கான அடிக்கல் நாட்டும் நிகழ்வில் பங்கேற்றவுள்ளார்.

இது தொடர்பான முன்னேற்பாடுகளைக் கவனிப்பதற்காக மீன்பிடி அமைச்சர் காமினி விஜித விஜேமுனி சொய்ஸா நேற்று யாழ்ப்பாணம் வந்தார்.

மயிலிட்டித்துறைமுகம் 1990 ஆம் ஆண்டுக்கு முன்னர் இலங்கையில் மொத்த மீன்பிடியில், மூன்றில் ஒரு பங்கைத்தன்னகத்தே கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## முல்லையில் சட்டவிரோத மீன்பிடி நிறுத்தப்படுமென அமைச்சர் உறுதி

### போராட்டத்தைக் கைவிட்டனர் மீனவர்கள்



முல்லைத்தீவு,ஓக.13

முல்லைத்தீவில் சட்டவிரோத மீன்பிடித் தொழில்களை உடனடியாக நிறுத்துவதற்கு அரசு நடவடிக்கை எடுக்கும் என நேற்று அங்கு சென்ற மீன்பிடி அமைச்சர் காமினி விஜித விஜயமுனி சொய்ஸா உறுதியளித்தார்.

இதனையடுத்து முல்லைத்தீவு மாவட்ட மீன்பிடித் திணைக்களத்துக்கு முன்பாக மீனவர்கள் மேற் கொண்டுவந்த போராட்டம் கைவிடப்பட்டுள்ளது.

சட்டவிரோத மீன்பிடித் தொழில்களைத் தடுத்து நிறுத்தி மீன்பிடித் தொழிலைச் சுதந்திரமாக மேற்கொள்ள நடவடிக்கை எடுக்குமாறு கோரி கடந்த 2 ஆம்

பக்கம் 14 »

## பொலிஸ் கண்காணிப்பையும் தாண்டி உடுப்பிட்டியில் அதிகாலை கொள்ளை

### வயோதிபத் தம்பதிகளுக்கு வாள்வெட்டு

யாழ்ப்பாணம், ஓக.13

பொலிஸார் ஆவா குழுக்களையும் கொள்ளைக் கும்பல்களையும் பிடிக்கத் துண்டுப் பிரசுரங்கள் விநியோகித்து வீதி வீதியாகத் தேடி அலைந்து திரிய உடுப்பிட்டிப் பகுதியில் நேற்று மீண்டும் கொள்ளைச் சம்பவம் அரங்கேறியுள்ளது.

கடந்த ஒரு சில மாதங்களுள் குறிப்பிட்ட சிறு பகுதியினுள் நடைபெற்ற ஆறாவது கொள்ளைச் சம்பவம் இதுவாகும். ஆட்களற்ற வீடுகள், தனித்திருக்கும் வயோதிபக் குடும்பங்களை இலக்கு வைத்து இந்தக் கொள்ளைகள் அரங்கேற்றப்பட்டு வருகின்றன.

பக்கம் 14 »

## ஓய்வுபெற்ற தளபதிகளுடன் மைத்திரி இரகசியச் சந்திப்பு!

கொழும்பு, ஓக.13

தமிழீழ விடுதலைப் புலிகளுடனான 30 வருடகால யுத்தம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டதை, முறையாக ஆவணப் படுத்தவேண்டுமென ஆர்வம் காட்டி வரும் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, இது தொடர்பில் ஓய்வுபெற்ற படைத்தளபதிகளை இரகசியமாகச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் எனத் தகவல் வெளியாகியுள்ளது.

கடந்த திங்கட்கிழமை இந்தச்

பக்கம் 14 »

## கூட்டு அரசின் ஆட்சி 2025வரை தொடரும்

### அமைச்சர் மனோ நம்பிக்கை

கொழும்பு,ஓக.13

தற்போதுள்ள கூட்டு அரசு எதிர்வரும் 2025ஆம் ஆண்டுவரை தொடரும். ஆட்சி மாற்றம் தொடர்பாகத் தற்போது கவனம் செலுத்த தேவையில்லை.

இவ்வாறு நம்பிக்கை வெளியிட்டார் அமைச்சர் மனோ கணேசன். தேசிய சகவாழ்வு, நல்லிணக்கம் மற்றும் அரச கரும மொழிகள் அமைச்சின் ஏற்பாட்டில் இறக்குவானையில்

பக்கம் 03 »

## ரயில்வே ஊழியர்களின் போராட்டம் முடிவுக்கு

கொழும்பு, ஓக 13

ரயில் சாரதிகள் மற்றும் காப்பாளர்கள் தொழிற்சங்கம் கடந்த 5 நாள்களாக முன்னெடுத்த தொடர் புறக்கணிப்புப் போராட்டம் முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

பக்கம் 03 »

## மைத்திரியின் இரகசியச் சந்திப்பு; தெரியாது என்கிறது இராணுவம்

கொழும்பு, ஓக.13

நடைபெற்று முடிந்த போரை முறையாக ஆவணப்படுத்துவது தொடர்பில் கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஓய்வு பெற்ற படைத் தளபதிகளை இரகசியமாகச் சந்தித்துள்ளார் என வெளியாகியுள்ள செய்தி தொடர்பில்,

பக்கம் 03 »

## அவசரகாலச் சட்டம் மீண்டும் வருகிறதா?

கொழும்பு, ஓக 13

இலங்கையில் மீண்டும் அவசரகாலச் சட்டத்தை நடைமுறைப்படுத்துமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இந்தக் கோரிக்கையை ஜனாதிபதியிடம், சில அமைச்சர்கள் விடுத்துள்ளனர் எனக் கொழும்பு அரசின் உள் மட்டத் தகவல்கள் கூறுகின்றன.

பக்கம் 14 »

## இலங்கைக்கு அதிக நிதியை வழங்கவுள்ளது அமெரிக்கா

வாஷிங்டன்,ஓக.13

இலங்கைபோன்றநாடுகளுக்கு அதிகளவு பாதுகாப்புநிதியைஅளிப்பதற்கு வழி செய்யும், 2019ஆம் நிதியாண்டுக்கான 700 பில்லியன் டொலருக்கும் அதிகமான பாதுகாப்பு நிதி ஒதுக்கீட்டுச்சட்டத்தில்அமெரிக்க அதிபர் டொனால்ட் ட்ரம்ப் கையெழுத்திடவுள்ளார்.

சீனா, ரஷ்யாவுக்குப் போட்டியாக, அமெரிக்காவின் இராணுவ பலத்தை

பக்கம் 14 »

# கொழும்புக்கு வருகிறது பாகிஸ்தான் போர்க்கப்பல்!



கொழும்பு, ஓக. 13

பாகிஸ்தான் கடல் பாதுகாப்புப் படையின் போர்க் கப்பலான 'காஷ்மீர்', நான்கு நாள்கள் விஜயமாக இன்று கொழும்புத் துறைமுகத்தை வந்தடையவுள் ளது.

இன்று தொடக்கம், எதிர்வரும் 16 ஆம் திகதி வரை இந்தக் கப்பல் கொழும்பு துறைமுகத்தில் தரித்து நிற்கும்.

94 மீற்றர் நீளமான இந்தப் போர்க்கப்பல், நவீன போர்த்தளபாடங்கள் மற்றும் கண்காணிப்பு, தொலைத்தொடர்பு கருவிகளைக் கொண்டது.

இலங்கை, பாகிஸ்தான் இடையிலான இராஜ தந்திர,இராணுவ உறவுகளின் நெருக்கத்தின் ஒரு கட்டமாக இந்தப் பயணம் இடம்பெறவுள்ளதாக பாகிஸ்தான் தூதரகம் தெரிவித்துள்ளது.

# பிரதமரின் முறையற்ற பொருளாதார கொள்கையே வீழ்ச்சிக்கான காரணம் என்கிறார் பந்துல குணவர்தன

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க வின் முறையற்ற பொருளாதார கொள்கையின் காரணமாகவே இன்று நாடு பெரும் பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது என கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் குறிப்பிடுகையில் –

எரிபொருள்களின் விலையேற் றத்தின் காரணமாக தனியார் பேருந்து சங்கத்தினர் போராட்டத்தை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர். தற்போது ரயில்வே போராட்டம் தற் காலிகமாக முடிவிற்கு கொண்டு வரப்பட்டுள்ளது. இதனை தொடர்ந்து தனியார் போக்குவரத்து ஊழியரின் போராட்டம் ஆரம்பிக்கப்படவுள்ளது. இவ்வாறு ஒரு பிரச்சினை முடிவுக்கு கொண்டு வரப்படும் பொழுது பிறி தொரு பிரச்சினை தோற்றம் பெறு மாயின் அது நடுத்தர மக்களின் வாழ்க்கையை பெரிதும் பாதிப்பு டைய செய்யும்.



ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தமது அரசின் குறைப்பாடுகளை நிவர்த்தி செய்வதை விடுத்து கடந்த அரசின் மீது குற்றம் சுமத்துகின்றார். கடந்த அரசு போராட்டங்களை துப் பாக்கி முனையில் தீர்த்தது நாங்கள் அவ்வாறு செயற்படவில்லை என்று குறிப்பிட்டுள்ளார். ஆம் கடந்த அர சில் ஒரு போராட்டம் ஒரு நாளிற்கு மேல் தொடரவில்லை ஒரு சில தரப் பினருக்காக பெரும்பாலான மக் களை கடந்த அரசு அசௌகரியங்க ளுக்குட் படுத்தவில்லை. மக்களின் நலன் கருதி அரசு சில சந்தர்ப்பங் களில் சர்வாதிகார செயற்பாடுகளை பின்பற்றுவது தவறொன்றும் கிடை யாது. மக்களும் அதனையே எதிர் பார்ப்பார்கள்.

இன்று ரயில்வே போராட்டத்தில் அரசு ஜனநாயக கொள்கையை பின்பற்றி 10 கோடி ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளது. மறுபுறம் எரிபொருள் அதிகரிப்பு தொடர்பில் தோன்றவுள்ள போராட்டத்திலும் பாரிய விளைவுகளை எதிர் கொள் ளும். பிரதமர் ரணில் விக்கிர மசிங்கவின் முறையற்ற பொருளா தார கொள்கையின் காரணமாகவே இன்று நாடு பெரும் பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது.

2015 ஆம் ஆண்டு மக்கள் செய்த தவறின் வெகுமதியினையே இன்று அனுபவித்து வருகின்ற னர். அரசின் மூன்று வருட முறை யற்ற நிர்வாகத்தின் காரணமாக விரக்தியடைந்துள்ள மக்கள் 2020 ஆம் ஆண்டு அரசை வீழ்த்துவார் கள் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# ஒன்பது ஆடுகளைக் கொன்று ருசித்த கட்டாக்காலி நாய்கள்!





கிளிநொச்சி கண் டாவளை பிரதேச செயலகப் பிரிவுக் குட்பட்ட கோரக்கன் காட்டு என்ற பகுதி யில் நேற்று காலை கட்டாக்காலி நாய் கள் வாழ்வாதாரத் துக்காக வழங்கப்பட்ட ஒன்பது ஆடுகளை கடித்துக் கொன்றுள்ளன.

கட்டாக்காலி நாய்கள் ஒன்பது ஆடுகளை கடித்துக் கொன்று இரையாக்கியுள்ளன. ஒன் பது ஆடுகலின் பெறுமதி சுமார் ஒரு லட்சத்து எண்பதாயிரம் ரூபாவுக்கு மேல் வரும் என்று கால்நடை வளர்ப்பவர்கள் தெரிவிக்கிறார்கள்.

இதேபோன்று கடந்த காலங்களில் சுமார் 40க்கும் மேற்பட்ட ஆடுகளை இந்த கட்டாக்காலி நாய்கள் கொன்று இரையாக்கியுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

இது தொடர்பாக பொலிஸாரிடமும் கால்நடை வைத்திய அதிகாரிகளிடமும் தெரியப்படுத்தி யதில் எந்த பயனும் கிடைக்கவில்லை என கால்நடை வளர்ப்பவர்கள் விசனம் தெரிவிக்கி றார்கள்.

# நாட்டில் தற்போது ஆட்சியில் இருப்பது சர்வாதிகார அரசு என்கிறார் மஹிந்த

நாட்டில் தற்போது ஆட்சியில் இருப்பது சர்வாதிகார அரசு என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இந்த நிலையில் அரசுக்கு எதிராக எதிர்வரும் செப்டெம்பர் 5ஆம் திகதி பெரும் ஆர்ப்பாட்டம் நடத்தப்படும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

காலியில் அண்மையில் நடைபெற்ற நிகழ்வொன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு –

பணிப்புறக்கணிப்பில் ஈடு பட்டுள்ள ரயில்வே ஊழியர் களுக்கு பொலிஸார் அழுத்தம் கொடுக்கின்றனர். பொலிஸாரின் தலையீட்டிலேயே தற்போது அனைத்தும் நடைபெறுகிறது.

விசேட நீதிமன்றங்களை ஏற்படுத்தி, அமைச்சர்களுக்கு தேவையான வகையில் வழக்கு கள் விசாரிக்கப்படுகின்றன. நீதித் துறையில் சுயாதீனம் இல்லை. ஜனநாயகம் இல்லை. வாழ்க்கை



செலவுகள் அதிகரித்துள்ளன.

தாங்கிக் கொள்ள முடியாத அளவில் வரி அறவிடப்படுகிறது. அபராதம் விதிக்கப்படுகிறது. பிணை வழங்காது சிறையில் அடைக்கின்றனர். நாடாளுமன்ற உறுப்பினர்கள் நிறைவேற்று அதி காரத்தை அவமதிக்கின்றனர்.

150 ஆண்டுகளாக பொலி ஸார் சிறப்பாக பணியாற்றினர். இராணுவத்திற்கு பொலிஸ் அதி காரங்களை வழங்கியுள்ளனர். மக்களுக்கு சுதந்திரம் இல்லை. இது சர்வாதிகார அரசு எனவும் மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள் ளார்.

# வவுனியாவில் சடலம் ஒன்றின் எச்சங்கள் மீட்பு!

வவுனியா சமணங்குளம் சுடுகாட்டிலிருந்து சடலம் ஒன்றின் எச்சங்கள் நேற்று பொலிஸாரினால் மீட்கப் பட்டுள்ளன.

வவுனியா சமணங்குளம் சுடுகாட்டில் உடல் ஒன்றை தகனம் செய்யச் சென்ற





வர்கள் வழங்கிய தகவலின் அடிப்படையில் சடலம் ஒன்றின் எச்சங்கள் மீட்கப் பட்டுள்ளன.

சடலத்தின் எச்சங்கள் காணப்பட்ட இடத்திலுள்ள மரம் ஒன்றில் கயிறு கட்டப் பட்டுள்ளதுடன் சடலம் பல நாள் சென்றுள்ள நிலை யில் மண்டையோடு மாத் திரமே மீட்கப்பட்டுள்ளது.

இறந்தவர் என சந் தேகிக் கப்படுபவரின் ஆடைகள், பாதணி மற்றும் சில ஆவ ணங்களும் பொலிஸாரி னால் மீட்கப்பட்டுள்ளன.

மீட்கப்பட்ட ஆவணத்தில் பி.முத்தையா உப்புக்குளம் வயது 60 என்ற தகவலுடன் வைத்தியசாலை மருந்து பற்றுச்சீட்டு ஒன்றும் மீட் கப்பட்டுள்ளது.

மேலதிக விசாரணைகளை வவுனியா சிதம்பரபுரம் பொலிஸார் மேற்கொண்டுள் ளனர்.

# மஹிந்த போட்டியிட முடியாது: மைத்திரியே தகுதியானவர்!

## அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவிப்பு

நாட்டின் அரசமைப்பு சட்டத்தின்படி முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ மீண்டும் ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட முடியாது என அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் அண் மையில் நடைபெற்ற கூட்டம் ஒன்றில் வைத்து அமைச்சர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்–

அடுத்த ஜனாதிபதித் தேர்தலில், ஸ்ரீலங்கா சுதந்தி ரக் கட்சியின் சார்பில் தற்போதைய ஜனாதிபதி மைத் திரி பால சிறிசேனவே வேட்பாளராக போட்டியிடுவார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவே அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிட தகுதியான வேட் பாளர்.

அவர் முழு இலங்கை மக்களின் நம்பிக்கையை வென்றெடுத்துள்ளார் எனவும் அமைச்சர் மஹிந்த அமரவீர குறிப்பிட்டுள்ளார்.

# தெல்லிப்பழை துர்க்காதேவிக்கு இன்று கொடியேற்றம்



தெல்லிப்பழை, ஓக.13

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்கா தேவி தேவஸ்தான வருடாந்த மகோற்சவம் இன்று திங்கட் கிழமை முற்பகல் 10 மணிக்கு, கொடியேற்றத்துடன் ஆரம்ப மாகின்றது.

பன்னிரு தினங்கள் நடை பெறும் உற்சவத்தில் எதிர் வரும் 18 ஆம் திகதி சனிக் கிழமை திருமஞ்சம், 21 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பிற்பகல் வேட்டைத் திருவிழா, அன்றைய தினம் மாலை கைலாச வாகன வீதி வலம், 22 ஆம் திகதி புதன்கிழமை மாலை 4 மணிக்கு சப்பறத் திருவிழா –

எதிர்வரும் 23 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 9 மணிக்கு ஸ்ரீ துர்க்காதேவி தேரில் ஆரோகணித்து அருட் காட்சி கொடுப்பார். மறுநாள் காலை 8.30 மணிக்குத் தீர்த் தத் திருவிழாவும் மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் இடம்பெறும்.

உற்சவ ஏற்பாடுகள் அனைத் தும் வெகு சிறப்பாக நடத்தேறி யுள்ளன என்று ஆலய நிர்வாக சபை அறிவித்துள்ளது. (இ)

# பொருளாதாரப் பலம் கொண்ட நாடாக மாற்றப்படும் இலங்கை

## பிரதமர் ரணில் அறிவிப்பு



கொழும்பு, ஓக.13

கடன் சுமையைக் குறைத்து இலங்கையைப் பொருளாதார பலம் படைத்த நாடாக மாற்ற வுள்ளதாகப் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பூண்டுலோயா – டன்சின் மகாத்மா காந்தி கிராமத்தை மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வில் நேற்று கலந்து கொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைக் கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

அரசு ஆரம்பித்துள்ள கிராமப் புரட்சித் திட்டத்தை மலையக தோட்டங்களிலும் அமுல்படுத்த வுள்ளோம் – என்றார்.

இந்தியாவின் உதவியின் கீழ், மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு மலையகத்தில் மேற்கொண்டு வரும் வீடமைப்புத் திட்டத்தின் கீழ் டன்சின்தோட்டத்தில் 404 வீடுகள் நிர்மாணிக்கப்பட்டுள் ளன.

இந்தியா 10 இலட்சம் ரூபாவையும், மலையக புதிய கிராமங்கள் உட்கட்டமைப்பு வசதிகள் மற்றும் சமூக அபிவிருத்தி அமைச்சு 2 இலட்சம் ரூபாவையும் ஒரு வீட்டுக்காகச் செலவிட்டுள்ளன.

550 சதுர அடியில் நிர்மாணிக்கப்பட்டுள்ள ஒரு வீட்டக்கு 7 பேர்ச்சஸ் காணியும் வழங்கப்பட்டுள்ளது. அனைத்து வீடுகளும் காணி உறுதிகளுடன் தோட்டத் தொழிலாளர்களுக்கு வழங்கப் பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் இந்திய பிரதமர் நரேந்திர மோடி இந்தியாவிலிருந்து காணொளியின் மூலம் உரையாற்றினார். (ஐ)

# நவாலியில் வீடு மீது கல்வீச்சு



யாழ்ப்பாணம், ஓக.13

அராலிப் பகுதியில் கடந்த சில வாரங்களாக வீடுகள் மீது நடத்தப்பட்டு வந்த கல்வீச்சு தாக்குதல் தற்போது நவாலிப் பகுதிக்கும் அது பரவியுள்ளது.

நவாலி வடக்கு, சங்கரத்தை பிரதான வீதியில் கேணியடிப் பகுதியிலுள்ள வீட்டின் மீது நேற்றுமுன்தினமிரவு 7.30 மணியளவில் சரமாரியாகக் கற்கள் வீசப்பட்டுள்ளன. வீட்டின் சீற் உடைந்துள்ளது. தெய்வாதீனமாக வீட்டில் உள்ளவர்களுக்கு காயம் ஏற்படவில்லை.

அந்தப் பகுதியைச் சேர்ந்த பிரதேச சபை உறுப்பினர் வன்னிய சேகரம் இது தொடர்பில் தெரிவித்ததாவது –

எனது வீட்டிலிருந்து மூன்று வீடுகளுக்கு அப்பால் உள்ள சகோதரியின் வீட்டின் மீதே கல்வீச்சு மேற்கொள்ளப்பட்டுள்ளது. சகோதரியின் மகள் வீட்டு யன்னல் ஊடாக மதிலின் மேலாக இனந்தெரியாத சிலர் சிவப்பு நிற வெளிச்சத்துடன் ஏறிக் குதிப்பதை அவதானித்துள்ளார்.

சிறிது நேரத்தில் வீட்டின் மீது கல் வீச்சுத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. வீட்டில் இருந்தவர்கள் சத்தமிடவே 25 மேற்பட்ட இளைஞர்கள் அங்கு திரண்டனர். தேடுதல் நடத்தியபோதும் எவரும் சிக்கவில்லை– என்றார்.

# வவுனியா விபத்தில் ஒருவர் படுகாயம்

வவுனியா, ஓக.13

வவுனியா சூடுவெந்தபுலவு பகுதியில் நேற்று மதியம் தனியார் பஸ் ஒன்றுடன் மோட்டார் சைக்கிள் மோதுண்டு விபத்துக்குள்ளானதில் ஒருவர் படுகாயமடைந்துள்ளார்.

வவுனியாவிலிருந்து செட்டிக் குளம் நோக்கி பயணித்த தனியார் பஸ் பயணிகளை ஏற்றுவதற்காக சூடுவெந்தபுலவுப் பகுதியில் தரித்து நின்றபோது அதே பாதையில் பயணித்த மோட்டார் சைக்கிள் ஒன்று சாரதியின் கட்டுப்பாட்டை இழந்து தனியார் பஸ்ஸின் பின் பகுதியில் மோதுண்டு விபத்துக்குள்ளானது.

இவ் விபத்தில் மோட்டார் சைக்கிள் ஓட்டி படுகாயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன் மோட்டார் சைக்கிள் பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

விபத்து தொடர்பான மேல திக விசாரணைகளை உளுக்குளம் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

### இனி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

செய்தி ஏற்கனவே வெளியானது தான்.

அந்த நிகழ்வுக்கான அழைப்பை உத்தியோகபூர்வமாக நேரில் வந்து விடுவிப்பதற்காக விரைவில் சுப்பிரமணியன் சுவாமி (அவரின் பெயர் சுப்பிரமணிய சுவாமி அல்ல) கொழும்பு வருகின்றார் எனத் தெரிய வந்தது.

சுப்பிரமணியன் சுவாமிதலைவராக இருக்கும் 'விரான் ஹிந்துஸ்தான் சங்கம்' என்ற அமைப்பே இந்த நிகழ்ச்சியை ஏற்பாடு செய்துள்ளது.

எதிர்வரும் செப்ரெம்பர் 12 ஆம் திகதி புதுடில்லி நாடாளுமன்ற சாலையில் உள்ள புதுடில்லி மாநகர சபை மாநாட்டு மண்டபத்தில் நடைபெறும் இந்த நிகழ்வில் 'இலங்கை – இந்திய உறவு : கடந்த காலச் சரிதமும், எதிர்கால வாய்ப்புகளும்' என்ற தலைப்பில் மஹிந்த ராஜபக்ஷ சிறப்புரை ஆற்றுவதற்கு இணங்கியிருக்கின்றார்.

'புலி எதிர்ப்பாளர்கள்' என்ற பொது நிலைப்பாட்டில் ஒன்றுபட்டவர்கள் சுப்பிரமணியன் சுவாமியும் மஹிந்தரும் என்பது தெரிந்ததே.

இந்த ஒருமித்த நிலைப்பாடு கருதியோ என்னவோ சுவாமி கேட்டதும் சம்மதம் தெரிவித்துவிட்டார் மஹிந்தர்.

ஆனால், இப்போது மஹிந்தரின் ஆலோசகர்கள் இந்த விடயம் குறித்து – சுப்பிரமணியன் சுவாமியின் அழைப்பின் பேரில் புதுடில்லி விஜயம் செய்வது குறித்து – அரசியல், இராஜதந்திர சாதக, பாதகங்களைத் துருவி ஆராய்ந்து வருகின்றனர் எனத் தெரிகின்றது.

சுப்பிரமணியன் சுவாமி 2013 முதல் பாரதீய ஜனதாக் கட்சி உறுப்பினர். 2016 ஏப்ரலில் ராஜ்ய சபைக்கு ஓர் உறுப்பினராக அவரை பாரதீய ஜனதாக் கட்சி நியமித்தது. கட்சியின் ஓர் எம்.பி. என்றாலும் கட்சித் தலைமையுடன் – பிரதமர் மோடி ஆட்சிப் பீடத்துடன் – அடிக்கடி கருத்து முரண்பாட்டு நிலை எடுத்து முறுகி வருபவர் அவர். அதனால் அடிக்கடி அரசியல் சர்ச்சைகளில் சிக்குபவர்.

இந்திய ஆட்சித் தலைமையைப் பொறுத்தவரை அதன் விருப்பத்துக்குரியவர்கள் பட்டியலில் சுப்பிரமணியன் சுவாமி இருக்கின்றாரா அல்லது முரண்பட்டவர்கள் பட்டியலில் இருக்கின்றாரா என்பது குறித்தும்வேறுபட்ட கருத்துகள் நிலவுகின்றன.

இந்தச் சூழ்நிலையில் சுப்பிரமணியன்சுவாமியின் அழைப்பை ஏற்று புதுடில்லிக்குப் போய் மஹிந்த ராஜபக்ஷ இந்திய – இலங்கை உறவு நிலை குறித்துப் பகிரங்க உரை ஆற்றுவது பாரதீய ஜனதாவின் புதுடில்லி ஆட்சி பீடத்தை சினக்க வைப்பதாகவோ, சீண்டச் செய்வதாகவோ அமைந்து விடுமா என்பதைத் துருகி ஆராய்கின்றனர் மஹிந்தரின் ஆலோசகர்கள்.

தமது அரசியல் வீழ்ச்சிக்குப் புதுடில்லியுடன் பகைத்துக் கொண்டமையும் ஒரு காரணம் என்று கருதும் மஹிந்த ராஜபக்ஷ, மீண்டும் தமது அரசியல் எழுச்சிக்காகக் காத்திருக்கும் இச்சமயத்தில், புதுடில்லியைத் தேவையில்லாமல் சீற்றத்துக்கு உள்ளாக்க இடமளிக்கமாட்டார் என்றே அவதானிகள் கருகின்றனர்.

அதனால், சுப்பிரமணியன் சுவாமியின் அழைப்பை ஏற்பார் என அவர் உறுதி அளித்திருந்தாலும்கூட, புதுடில்லி செல்வதா அங்கு மேற்படி குறித்துப் பேசுவதா என்பவை குறித்தெல்லாம் ஒன்றுக்கு இரண்டு தடவைகள் ஆலோ சித்து, ஆராய்ந்து பார்த்துத்தான் முடிவு செய்வார் என்கின்றன அவருடன் தொடர்புடைய வட்டாரங்கள்.

- மின்னல்.

# ஜனாதிபதி வர முன்னர் மயிலிட்டியில் முழுமையாக மக்களைக் குடியமர்த்துக

## மாவை சேனாதிராசா கோரிக்கை

யாழ்ப்பாணம், ஓக.13

மயிலிட்டி துறைமுகத்துக்கான அடிக்கல் நாட்டுவதற்கு ஜனாதிபதி வருவதற்கு முன்னர் அந்தப் பகுதியில் மக்களை முழுமையாக குடியமர்த்தவேண்டும் எனக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவைசேனாதிராசா கோரிக்கை விடுத்துள்ளார்.

நோர்வே மற்றும் இலங்கை அரசின் கூட்டு நிதிப்பங்களிப்புடன் இடம்பெறவுள்ள மயிலிட்டித் துறைமுக அபிவிருத்திப் பணிகள் எதிர்வரும் 22ஆம் திகதி ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையில் ஆரம்பித்து வைக்கப்படவுள்ளன.

இந்நிலையில் ஆயத்தப் பணிகள் தொடர்பாக ஆராயும் விசேட கலந்துரையாடல் நேற்று மாலை கடற்தொழில் நீரியல்வள அமைச்சர் காமினி விஜிதமுனி டி சொய்ஸா தலைமையில் யாழ். மாவட்ட செயலகத்தில் இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடல் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே மாவை இதனை தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

நேற்றுக் காலை முல்லைத்தீவில் நடந்த கலந்துரையாடலில் மீனவர் சமூகமானது எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணப்பட்டுள்ளன. மயிலிட்டியில் துறைமுக அபிவிருத்திக்கு ஜனாதிபதி அடிக்கல் நாட்ட வருகின்றார். அது தொடர்பாக ஆராயவே அமைச்சர் யாழ்ப்பாணம் வந்திருந்தார்.

உண்மையில் இந்த நடவடிக்கையை நாம் வரவேற்க வேண்டும். அந்த நிலத்தின் விடுதலைக்காக மக்கள் போராட்டங்களை நடத்தியுள்ளார்கள்.



அடிக்கல் நாட்டும் நிகழ்வை ஜனாதிபதி பெரும் விழாவாகச் செய்யவுள்ள நிலையில் அந்தப் பிரதேச மக்கள் முழுமையாக குடியமர்த்தப்படவில்லை. அதற்கு முன்பாக அந்த மக்கள் முழுமையாகக் குடியமர்த்த வேண்டும் எனஜனாதிபதியிடம்கூறவேண்டும் என அமைச்சரிடம் வலியுறுத்தியுள்ளோம். இதற்கு அமைச்சரும் சாதகமான பதிலை வழங்கியுள்ளார்.

மேலும் ஜனாதிபதி அடிக்கல் நாட்ட வருவதற்கு முன்பு அந்த மக்களை குடியமர்த்திவிட வேண்டும் என நாங்களும் ஜனாதிபதியுடன் பேசுவோம்–என்றார். (ஐ–7)

### மைத்திரியின்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

உத்தியோகபூர்வமான தகவல்கள் எதுவும் தமக்குக் கிடைக்கவில்லை என இலங்கை இராணுவம் தெரிவித்துள்ளது.

இதுகுறித்து கருத்து தெரிவித்த இராணுவ ஊடகப் பேச்சாளர் பிரிகேடியர் சுமித் அத்தபத்து,

இது தொடர்பான செய்திகளை ஊடகங்களினூடாகத் தானும் அறிந்து கொண்டார் எனவும், எனினும் இது தொடர்பான உத்தியோகபூர்வமான தகவல்கள் தனக்குத் தெரியாது எனவும் கூறினார்.

இந்த இரகசிய சந்திப்பு தொடர்பில் ஜனாதிபதியின் செயலாளரிடம் கேட்டறிந்து கொள்ள முடியும் எனவும், அவர்களே ஜனாதிபதியின் இவ்வாறான சந்திப்புக்கள் குறித்து அறிந்து வைத்திருப்பார்கள் எனவும் இராணுவப் பேச்சாளர் குறிப்பிட்டார்.

ஜனாதிபதியின் செயலாளர் உதய ரஞ்சித் செனவிரத்னவிடம் இது குறித்து வினவியபோது, இது தொடர்பான முழுமையான எந்தவொரு தகவல்களும் எனக்கு தெரியாது. ஊடகங்களில் அவ்வாறான செய்திகள் வெளியாகியிருப்பதை நான் இதுவரை அறிந்து கொள்ளவில்லை எனப் பதிலளித்தார். (ஐ)

### கூட்டு...

(முதலாம் பக்கத் தொடர்சி)

நேற்று இடம்பெற்ற நிகழ்வில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

மஹிந்தவுடனான எனது சந்திப்பில், மாகாண சபை தேர்தல் தொடர்பாகவே கலந்துரையாடப்பட்டது. தற்போதைய அரசு 2020 வரை மட்டுமன்றி 2025 இலும் தொடரும். அதனால் தற்போது அதுபற்றி பேசவேண்டிய தேவை இல்லை.

இதேவேளை, புதிய முறையில் தேர்தலை நடத்துவதென்றால் அதற்கான சட்ட வரைபுகளை தயாரிக்க வேண்டும். அதனால் தேர்தல் மேலும் பல மாதங்களுக்குப் பிற்போடப்படலாம். பழைய முறையில் தேர்தலை நடத்துவதே சிறந்தது – என்றார். (ஐ)

### ரயில்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதியுடன் இடம்பெற்ற பேச்சுக்களையடுத்து பணிப்புறக்கணிப்புப் போராட்டம் கைவிடப்படுவதாகத் தொழிற்சங்கம் தெரிவித்துள்ளது.

கடந்த செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற அமைச்சரவையில் ரயில்வே ஊழியர்களின் சம்பள அதிகரிப்புக்கு ஒப்புதல் வழங்கப்படாததையடுத்து ரயில் சாரதிகளும் காப்பாளர்களும் தொடர் புறக்கணிப்பைக் கடந்த புதன் கிழமை மாலை 3 மணி முதல் முன்னெடுத்தனர்.

இதனால் கொழும்பு உட்பட நாட்டின் பல பாகங்களில் பொதுப் போக்குவரத்தில் பயணிப்போர் பாதிக்கப்பட்டனர். (ஐ)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## மற்றொரு பிளவுக்கு இடமளியாதீர்!

மிகவும் முக்கியமான ஒரு கால கட்டத்தை நோக்கித் தமிழினம் நகர்ந்து கொண்டிருக்கின்றது. நமது அரசியல் தலைமைகள் விரும்பினாலும் விரும்பா விட்டாலும் தமிழினத்தின் எதிர்காலத்தை மிக மோசமாகப் பலவீனப்படுத்தக் கூடிய ஓர் இக்கட்டு நிலையை நோக்கி அரசியல் செல்நெறி நகர்ந்து கொண்டிருப்பதாகவே தோற்றுகின்றது.

மிகுந்த எதிர்பார்ப்போடு தென்னிலங்கையின் சில தரப்புகளோடு சேர்ந்து இலங்கையில் ஓர் ஆட்சி மாற்றத்தை 2015 ஜனவரியில் தமிழினமும் ஒன்றிணைந்து ஏற்படுத்தியது.

இந்த இலங்கைத் தீவை கடந்த ஏழு தசாப்தங்களுக்கு மேல் உலுக்கி வரும் இனப் பிரச்சினைக்கு ஒரு நியாயத் தீர்வை ஏற்படுத்தும் உறுதிப்பாட்டின் அடிப்படையிலேயே அந்த ஆட்சி மாற்றத்துக்குத் தமிழ்த் தலைவர்களும், அவர்களின் வழிகாட்டுதலில் தமிழ் மக்களும் முண்டு கொடுத்தனர்.

ஆட்சி மாற்றம் ஏற்பட்டு மூன்றரை ஆண்டுகள் கடந்து விட்டன. ஆனால் தீர்வு முயற்சிகள் எதிர்பார்த்த தடத்தில் – தளத்தில்– முன் நகரவில்லை. ஆரிய கஞ்சி பழங்கஞ்சி என்ற கதையாக அது கிடப்பில் போடப்பட்டு விட்டது.

வழமை போல இம் முறையும் தமிழ் மக்கள் ஏமாற்றப்பட்டு விட்டார்கள்.

தாம் ஆட்சிப்பீடம் ஏறுவதற்காகத் தமிழர்களின் ஆதரவை வேண்டி நின்ற சிங்களத் தலைமைகள், அதிகாரத்துக்கு வந்ததும் தமது பரவணிப் புத்தியை – ஏமாற்று வித்தையை – காட்டி விட்டன.

இந்த ஜனாதிபதியின் எஞ்சிய பதினைந்து மாத ஆட்சிக் காலத்திலோ, அல்லது இந்த நாடாளுமன்றத்தின் ஒன்றரை முதல் இரண்டு வருட ஆட்சிக் காலத்திலோ இனப் பிரச்சினை தீர்வுக்கான முன் நகர்வுகள் இனி கிஞ்சித்தும் இருக்கும் என்று நம்புவதற்கு இடம் ஏதுமில்லை. அரசியல் அரிச்சுவடி படித்தவர்களுக்குக் கூட அது புரிந்த – தெரிந்த – அறிந்த – விடயம்.

தேவையானால், அடுத்த ஜனாதிபதித் தேர்தலின் போதும், அதன் பின்னர் நடைபெறக் கூடிய பொதுத் தேர்தலின் போதும், இதுவரை காலமும் தற்போது முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளோடு சம்பந்தப்பட்ட தென்னிலங்கைத் தரப்புகள், சிறுபான்மையினரின் – குறிப்பாகத் தமிழர்களின் – வாக்குகளைத் தம் பக்கத்துக்கு அள்ளிச் சுருட்டுவதற்கு இதுவரை நடந்த சமாதான முயற்சிகள் பற்றிய பிரசாரம் உதவக் கூடும். அவ்வளவு தான்.

அதற்கு அப்பால் இந்த சமாதான முயற்சிகள் பலன் ஏதும் தரக் கூடிய திசையை நோக்கி நகர்வதற்கு – இப்போதைக்கு நகர்வதற்கு – வாய்ப்புக்கள் – ஏதும் அடியோடு இல்லை என்பது தெளிவு.

தமிழர்கள் ஆவலோடு எதிர்பார்த்த சமாதான முயற்சிகள் – அமைதி எத்தனங்கள் – தடைப்பட்டுள்ள அவலம் மாத்திரமன்றி அதையும் தாண்டி பேராபத்துச் சூழ்ந்து வருகின்றமை தான் கவனிக்கத்தக்கது.

இந்தச் சமாதான முயற்சிகள் மூலம் நீதி, நியாயமான தீர்வு ஒன்று கிட்டும் என்று தென்னிலங்கையில் ஒரு தரப்பை நம்பிக் களமிறங்கிய தமிழர்கள், அதனால் அதற்கு மாற்றான தென்னிலங்கையின் பௌத்த, சிங்கள மேலாதிக்கத் தரப்பைத் தோற்கடித்து, வீட்டுக்கு அனுப்பும் கைங்கரியத்துக்கும் துணை போயினர். அதனால் அந்தத் தரப்புக்களின் நிரந்தர எதிர்ப்புக்கும் ஆளாகியது தமிழினம்.

இன்றைக்குத் தமிழினம் நம்பி இறங்கிய அமைதி முயற்சிகள் செயலிழந்து சாகும் நிலைக்கு வந்து விட்டது என்றால், மறுபுறம் அந்த முயற்சிகளை முன்னெடுப்பதற்கு ஏதுவாக தமிழினமும் சேர்ந்து தோற்கடித்த பௌத்த, சிங்கள மேலாதிக்க சக்திகள் தெற்கில் மீள விஸ்பரூபம் எடுத்து வருகின்றன.

ஒரு புறம் நாம் நம்பி இறங்கிய அமைதி முயற்சிகளுக்கு வாய்ப்பே இல்லை என்பது உறுதியாகும் நிலைமை. மறுபுறம், அந்த முயற்சிகளை முன்னெடுப்பதற்காக நாமும் சேர்ந்து தோற்கடித்த பேரினவாத சக்திகள் மீளவும் வெஞ்சினத்தோடு ஆட்சி அதிகாரத்துக்கு வரும் சூழ்நிலை.

இந்த இரட்டை நெருக்கடியை, போரினால் ஏற்கனவே நலிந்து, துவண்டு, சீரழிந்து கிடக்கும் தமிழினம் எப்படி எதிர்கொள்ளப் போகின்றது என்று விசனமுற்று நிற்கும் இந்தச் சமயத்தில் தான் தமிழர்களை மேலும் பிளவுபடுத்துவதற்கு வாய்ப்பளிப்பது போல மாகாண சபைத் தேர்தல்கள் வருகின்றன.

தமிழர் தேசியம் என்ற சுவரில் உள்ளூற ஏற்பட்ட சிறிய விரிசல் ஒரு சிறு வெடிப்பாக ஏற்கனவே உள்ளூராட்சித் தேர்தலில் அம்பலமாயிற்று.

அதனைப் பெரும் வெடிப்பாக காட்டி, தமிழர்களை மேலும் பலவீனப்படுத்தும் ஒரு சந்தர்ப்பத்தை மாகாண சபைத் தேர்தல்கள் ஏற்படுத்தி விடுமோ எனத் தமிழ் ஆர்வலர்கள் அஞ்சுகின்றனர்.

முதல்வர் விக்னேஸ்வரனுடன் முரண்பட்டு நிற்கும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பிடிவாதப் போக்கு, தமிழர் தேசிய சக்திகள் மத்தியில் சிறிய விரிசலாக ஏற்பட்டிருக்கும் பிரிவை, பெரும் வெடிப்பாக மாற்றி பிளக்கச் செய்து விடும் என்பதைத் தான் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் ரெலோவும், புளொட்டும் சுட்டிக்காட்டியிருக்கின்றன.

இன்றைய நிலையில் முதல்வர் விக்னேஸ்வரனின் அரசியல் செல்வாக்கு குறைத்து மதிப்பிடத்தக்கதல்ல என்பது தான் நமது கணிப்பீடு.

தாம் நம்பிக்கை வைத்து, தமது மக்களையும் அத்திசையில் வழிப்படுத்தி, நல்லாட்சி அரசை ஆட்சிக்குக் கொண்டு வந்த கூட்டமைப்புத் தலைமை, அந்த அரசை ஆட்சிக்குக் கொண்டு வந்த நோக்கத்தில் தாம் தோற்று விட்டமையை – பின்னடைவைக் கண்டு விட்டமையை – ஒப்புக் கொள்ள வேண்டிய பெரும் இக்கட்டில் இருக்கின்றது.

இந்தப் பின்னடைவு சமயத்தில் மேலும் ஒரு பிளவுக்கு அது இடமளிப்பது, அது தன் தலையில் தானே மண்ணை அள்ளிப் போடுவதற்கு ஒப்பாகும்.

# பழைய முறையில் தேர்தலை நாங்கள் நடத்திக் காட்டுவோம்

## அமைச்சர் ஹக்கீம் சூளுரை



கொழும்பு, ஓக 13

தேர்தல் முறைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஒரு விவாதத்தை நடத்தி, வாக்கெடுப்பின் மூலம் மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெற்று, பழைய முறையில் மாகாணசபை தேர்தலை நடத்திக் காட்டுவோம் என சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சியின் தலைவரும் அமைச்சருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

மருதமுனையில் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வொன்றில் கலந்து கொண்டு கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில் –

புதிய முறையில் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்குச் சில கட்சிகளுக்குள் இழுபறி நடந்துகொண்டிருக்கிறது. இதற்கு முடிவு கட்டும் நோக்கில் நாடாளுமன்றத்திலுள்ள கட்சித் தலைவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து, புதிய தேர்தல் முறையில் பிடிவாதமாக இருக்கின்ற கட்சிகளுக்கு எங்களது நிலைப்பாட்டை மிகவும் அழுத்தம் திருத்தமாக தெரிவித்திருக்கிறோம்.

சிறிலங்கா சுதந்திரக் கட்சியும், ஜே.வி.பி.யும் புதிய முறையில் தேர்தலை நடத்துவதற்கு பிடிவாதமாக இருக்கின்றன. தேர்தல் முறைகள் தொடர்பில் நாடாளுமன்றத்தில் ஒரு விவாதத்தை நடத்தி, வாக்கெடுப்பின் மூலம் ஒரு முடிவைக் கண்டு அவசரமாக மாகாணசபைத் தேர்தலை நடத்த வேண்டுமென நாங்கள் அவர்களுக்கு அழுத்தம் கொடுத்திருக்கிறோம்.

எமது கோரிக்கையை ஏற்றுக் கொள்வதில் அவர்களுக்கு உடன்பாடு இல்லாவிடினும், அதனை ஏற்றுக்கொள்ளவேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை நாங்கள் ஏற்படுத்தியிருக்கிறோம். எல்லாத் தரப்புகளிடமும் பேசிய வகையில், பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவை எடுத்துக் காட்டுவோம் என்பதை நான் அவர்களிடம் தெளிவாக சொல்லிவிட்டுத்தான் வந்திருக்கிறேன்.

நாடாளுமன்றத்தில் ஒரு விவாதத்தை நடத்தி, நடைபெறும் வாக்கெடுப்பில் பழைய தேர்தல் முறைக்கு ஆதரவாக மூன்றில் இரண்டு பெரும்பான்மை ஆதரவைப் பெறுவோம். அதன்பின் பழைய தேர்தல் முறையில் விரைவாக மாகாணசபை தேர்தலை நடத்துவோம் என்பதில் நாங்கள் உறுதியாக இருக்கிறோம்.

பழைய முறையில் தேர்தலை நடத்துவதற்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் எங்களுக்கு ஆதரவளிப்பதாகக் கூறியுள்ளது. வடக்கிலும் கிழக்கிலும் அதிகாரங்களைப் பங்கிட்டு அவற்றைச் சிறுபான்மையினர் அனுபவிக்க வேண்டும் என்பதற்காக 13ஆம் சட்டத் திருத்தத்தை கொண்டுவந்தோமா, அந்த இடங்களில் பேரின ஆளுநர்கள் ஆளுகின்ற நிலைமைதான் இப்போது வரப்போகிறது.

இதில் நாங்கள் இழுபறிபட்டுக்கொண்டிருந்தால் ஆளுநர்களின் கைகளில் ஆட்சியை கொடுத்துவிட்டு நாங்கள் பரிதவிக்கவேண்டிய நிலைமை வந்து விடும். கிழக்கில் இந்த நிலைமை ஏற்பட்டுவிட்டது. வடக்கிலும் செப்ரெம்பர் மாதத்தின் பின்னர் இந்த நிலவரம் ஏற்பட்டுவிடக்கூடாது என்பதில் நாங்கள் மிகவும் உறுதியாக இருக்கிறோம். அதற்காக நாங்கள் எடுத்துள்ள முயற்சியில் நிச்சயம் வெற்றிகாண்போம் என்றார். (ஐ)

# போராட்டத்தினால் ரயில்வேக்கு 10 கோடி ரூபாவுக்கு மேல் நட்டம்

கொழும்பு, ஓக 13

ரயில் தொழிற்சங்கங்களின் போராட்டம் காரணமாக ரயில்வே திணைக்களத்திற்கு 10 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

சம்பள அதிகரிப்பினை வலியுறுத்தி ரயில் தொழிற்சங்கங்கள் கடந்த வியாழக்கிழமை முதல் தொடர் பணிப்புறக்கணிப்பு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளன.

இந்தநிலையிலேயே இதுவரை ரயில்வே திணைக்களத்திற்கு 10 கோடி ரூபா நட்டம் ஏற்பட்டுள்ளதாக ரயில் தொழிற்சங்கங்கள் தெரிவித்துள்ளன.

இதேவேளை, நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் கூடிய தொழிற்சங்க நிறைவேற்றுக் குழுக் கூட்டத்தின்போது ரயில் கட்டுப்பாட்டாளர்களின் கோரிக்கைக்கு அமைய, நேற்றுமுன்தினம் மாலை முதல் சில ரயில் சேவைகள் முன்னெடுக்கப்பட்டன என ரயில் சாரதிகள் சங்கத்தினர் குறிப்பிட்டுள்ளனர்.

# இராணுவத்தினருக்கு ரயில் சாரதிப் பயிற்சி

## அரசு தீர்மானம்

கொழும்பு, ஓக 13

ரயில்வே ஊழியர்களின் வேலைநிறுத்தப் போராட்டங்களைச் சமாளிப்பதற்கு 50 இராணுவத்தினருக்கு ரயில் சாரதிப் பயிற்சி வழங்க அரசு தீர்மானித்துள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இந்தியாவின் டில்லி நகரில் அமைந்துள்ள ரயில் சாரதிகள் பயிற்சி நிறுவனத்துக்கு இராணுவ யுத்த வாகனம் செலுத்தும் சாரதிகளைத் தெரிவு செய்து அனுப்பி வைப்பதற்கான நடவடிக்கைகளை அரசு முன்னெடுத்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த நிறுவனத்தில் மூன்று மாதம் பயிற்சி பெற்ற பின்னர், பயிற்சி பெற்றவர்களை நாட்டில் ஏற்படும் அவசர நிலைமைகளின் போது பயன்படுத்த முடியும் எனவும் அரசு எதிர்பார்த்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதேவேளை, புதிய ரயில்வே சாரதிகளுக்கான விண்ணப்பங்கள் கடந்த வருடம் கோரப்பட்டிருந்த நிலையில், அதற்கான ஆட்சேர்ப்புப் பரீட்சைகள் தொடர்ந்தும் பல தடவைகள் பிற்போடப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

# இரண்டு மாடிக் கட்டடத்தில் தீ விபத்து ; ஒருவர் உயிரிழப்பு

கொழும்பு, ஓக 13

பதுளை, கொகோவத்தை பகுதியில் வர்த்தக நிலையம் ஒன்றில் நேற்று அதிகாலை 1.45 மணியளவில் ஏற்பட்ட தீ விபத்தின் காரணமாக ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தச் சம்பவத்தில் பதுளையைச் சேர்ந்த 40 வயதுடைய ஒருவரே உயிரிழந்துள்ளார்.

இரு மாடிகளைக் கொண்ட வர்த்தக நிலையக் கட்டடம் ஒன்றிலேயே மேற்படி தீ விபத்து இடம்பெற்றுள்ளது. இதனையடுத்து சம்பவ இடத்திற்கு விரைந்த பொலிஸாரும் தீயணைப்பு படையிரும் நீண்ட நேரப் போராட்டத்தின் பின் தீப்பரவலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வந்தனர்.

இந்த தீவிபத்துக்கான காரணம் இன்னும் கண்டறியப்படாத நிலையில் சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

## நாளை

14.08.2018
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : உத்தரம் மு.இ 10.33 வரை
திதி : திருதியை மு.ப 10.07 வரை
சுபநேரம் : 10.35 – 12.05 வரை
இராகுகாலம் :3.05 – 4.35 வரை

# தாயகம் திரும்பியோருக்கு பிறப்பு, குடியுரிமை சான்றிதழ்கள் வழங்கும் நடமாடும் சேவை!

மன்னார், ஓக.13

புலம்பெயர்ந்துநாடுதிரும்பிய மக்களுக்கான தூதரக பிறப்புச் சான்றிதழ் மற்றும் குடியுரிமைச் சான்றிதழ் பெற்றுக் கொள்ளுவதற்கான நடமாடும் சேவை நேற்று ஞாயிற்றுக்கிழமை மன்னார் நகர கலாசார மண்டபத்தில் ஆரம்பமாகியுள்ளது.

மன்னார்மாவட்டச்செயலகத்தின் ஏற்பாட்டில் ஒபர் சிலோன் அமைப்பின் அனுசரணையுடன் இந்த நடமாடும் சேவை நடைபெறுகிறது.



மன்னாரில் நேற்றும் இன்றும்

நேற்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிமுதல் மாலை 5 மணிவரையும், இன்று திங்கட்கிழமை காலை 8 மணிமுதல் மாலை 5 மணிவரையும் இந்த சேவைகள் இடம் பெறும்.

இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு, குடிவரவு குடியகல்வுத் திணைக்களம், மீள் குடியேற்றம் புனர்வாழ்வு வடக்கு அபிவிருத்தி இந்து சமய அலுவல்கள் அமைச்சு ஆகியவை இணைந்து புலம் பெயர்ந்து நாடு திரும்பிய மக்களுக்கான தூதரக பிறப்புச் சான்றிதழ் மற்றும் குடியுரிமைச் சான்றிதழ் வழங்கும் நடமாடும் சேவையை ஆரம்பித்துள்ளன.

மன்னார் மாவட்ட அரச அதிபர் சி.ஏ.மோகன்ராஸ் தலைமையில் ஆரம்பமான குறித்த நடமாடும் சேவையின் போது ஒபர் சிவழிலோன் அமைப்பின் அமைப்பாளர் சந்திரகாசன், மன்னார், நானாட்டான், முசலி, மாந்தை மேற்கு, மடு ஆகிய 5 பிரதேசச் செயலக பிரதேச செயலாளர்கள், கிராம அலுவலகர்கள், திணைக்கள அதிகாரிகள் மற்றும் பயன் பெற்றுக்கொள்ளவுள்ள புலம் பெயர்ந்து மீண்டும் மன்னார் மாவட்டத்தில் வசித்து வரும் மக்கள் கலந்து கொண்டுள்ளனர்.

புலம் பெயர்ந்து சென்று மீண்டும் நாடு திரும்பி மன்னார் மாவட்டத்தில் வசித்து வரும் மக்கள் இந்த ஆவணங்களை பெற்றுக்கொள்ள பல்வேறு அசௌகரியங்களுக்கு முகம் கொடுத்து வந்தனர்.

இந்த நிலையில் துரித கதியில்இந்த ஆவணங்களை பெற்றுக்கொள்ளும் வகையில் இந்த நடமாடும் சேவை இடம் பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## சமாதான தீர்வை காண பிரபாகரனுடன் பேசுவதற்கு முன்வந்தேன் அவர் ஏற்றுக்கொள்ளவில்லை; அதனாலேயே விபரீதம் நடந்தது

### மஹிந்த ராஜபக்ஷ தெரிவிப்பு



கொழும்பு, ஓக.13

சமாதான தீர்வை காண்பதற்காக விடுதலைப்புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரனுடன் நான் பேச்சுவார்த்தைகளை மேற்கொள்ள முன்வந்தேன் ஆனால் அவர் அதனை ஏற்றுக்கொள்ளவில்லை. இதன் காரணமாக அவரை கொல்லவேண்டிய நிலையேற்பட்டது என முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

ஆங்கிலப் பத்திரிகை ஒன்றுக்கு வழங்கிய செவ்வியில் அவர் இதனை தெரிவித்துள்ளார்.

நாங்கள் தீர்வை காண்பதற்காக நேரடி சந்திப்பொன்றில் ஈடுபடுவோம் நான் கிளிநொச்சி வருகின்றேன் அல்லது நீங்கள் கொழும்பு வரலாம் என தெரிவித்து பிரபாகரனுக்கு கடிதம் எழுதினேன் என மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

2006 இல் விடுதலைப்புலிகளின் தாக்குதல்கள் ஆரம்பமாவதற்கு முன்னர் பிரபாகரனுக்கு நான் செய்தியொன்றை அனுப்பினேன் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

(கு)

## நெடுந்தீவு படகுச் சேவையின் நேர மாற்றம் குறித்து அறிவிப்பு

### நாளைமறுதினம் புதன் முதல் நடைமுறை

யாழ்ப்பாணம், ஓக.13

குறிகாட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கும் நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கும் இடையிலான படகுச் சேவையில் நேர மாற்றம் செய்யப்பட்டுள்ளது. நாளை மறுதினம் 15 ஆம் திகதி முதல் நேர மாற்றத்துடன் படகுச் சேவை இடம்பெறும் என்று நெடுந்தீவு பிரதேச செயலாளர் எவ்.சி.சத்தியசோதி அறிவித்துள்ளார்.

அதன்படி - நெடுந்தீவில் இருந்து குறிகாட்டுவானுக்கு -

* காலை 6.00 மணிக்கு - நெடுந்தாரகை
* காலை 7.30 மணிக்கு - தனியார் படகு
* காலை 9.30 மணிக்கு - குமுதினி
* பிற்பகல் 2.30 மணிக்கு - நெடுந்தாரகை
* மாலை 4.30 மணிக்கு - வடதாரகை

குறிகட்டுவானில் இருந்து நெடுந்தீவுக்கு

* காலை 7.30 மணிக்கு - வடதாரகை
* காலை 8.30 மணிக்கு - நெடுந்தாரகை
* பிற்பகல் 1.30 மணிக்கு - குமுதினி
* பிற்பகல் 3.00 மணிக்கு - தனியார் படகு
* மாலை 4.30 மணிக்கு - நெடுந்தாரகை

## திருகோணமலை விபத்தில் நான்கு வயதுச் சிறுமி பலி!

திருகோணமலை,ஓக.13

திருகோணமலை சேருநுவர பொலிஸ் பிரிவுக்குட்பட்ட தோப்பூர்மையவாடிக்கு முன்னால் உள்ள வீதியில் இடம் பெற்ற விபத்தில் நான்கு வயதுச் சிறுமி ஒருவர் உயிரிழந்துள்ளார் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

நேற்று முன்தினம் மாலை, இந்த வீதியில் மரக்கறிஏற்றிப்பயணித்துக் கொண்டிருந்த பட்டா ரக வாகனத்திலேயே அந்தச் சிறுமி மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்த சிறுமி நான்கு வயதுடையபைஸர் பாத்திமா நுஹா என பொலிஸார் தெரிவித்தனர். அவரது உடலம் தோப்பூர் பிரதேச வைத்தியசாலையில் வைக்கப்பட்டு பின்னர் திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.

விபத்துடன் தொடர்புடையவர் எனச் சந்தேகிக்கப்படும் வாகனச் சாரதியை சேருநுவர பொலிஸார் கைது செய்து விசாரணை களை நடத்தி வருகின்றனர்.

### தேசிய பயிலுநர் கைத்தொழில் அதிகார சபை

## பயிற்சி கற்கை நெறிகளுக்காக 2019 முதல் இணைக்கப்படுவோர் எண்ணிக்கை அதிகரிப்பு

தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபையில் பயிற்சி கற்கை நெறிகளுக்காக இணைத்துக் கொள்ளப்படுவோரின் எண்ணிக்கை அதிகரிக்கப்படவுள்ளது.

தற்பொழுது வருடாந்தம் 33 ஆயிரம் பேர் பல்வேறு பயிற்சி கற்கை நெறிகளுக்காக இணைத்துக்கொள்ளப்படுகின்றனர். அடுத்த வருடம் முதல் இந்த எண்ணிக்கை 50 ஆயிரமாக அதிகரிக்கப்படவுள்ளது.

பயிற்சி அதிகார சபையின் வழிகாட்டல் மற்றும் விற்பனை நடவடிக்கைகள் தொடர்பான உதவி பணிப்பாளர் லலித் பிரியந்த இதனைத் தெரிவித்தார்.

பயிற்சி பெறும் அனைத்து மாணவர்களுக்கும் தொழில் பாதுகாப்பு உறுதி செய்யப்படுகிறது. பயிற்சியை நிறைவு செய்த பின்னர் தொழில்வாய்ப்பைபெற்றுக்கொள்ள முடியும். தொழில்நுட்ப பயிற்சி கற்கை நெறிக்கு மேலதிகமாக வைத்தியத்துறை சார்ந்த பயிற்சி கற்கை நெறிகள் பலவும் இந்த அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

தாதி வைத்திய இரசாயன மற்றும் மருத்துவம் தொடர்பான கற்கை நெறிகளும் இங்கு மேற்கொள்ளப்படுகின்றன. பயிற்சியை வெற்றிகரமாக பூர்த்தி செய்யும் அனைவருக்கும் சான்றிதழும் வழங்கப்படும். சுயதொழில் முயற்சிகளில் ஈடுபட விரும்புவோருக்கு வங்கி கடன் வசதிகளும் செய்து கொடுக்கப்படும் என்று தேசிய பயிலுநர் கைத்தொழில் பயிற்சி அதிகார சபை யின் உதவி பணிப்பாளர் மேலும் தெரிவித்தார்.

# காலியில் பிரபல வர்த்தகரின் வீட்டில் இடம்பெற்ற மோதலில் 5 பேர் காயம்

### கொள்ளையிட வந்தவேளை

காலியில் பிரபல வர்த்தகரின் வீட்டில் இடம்பெற்ற மோதலில் 5 பேர் காயமடைந்துள்ளனர்.

இமதுவ, திக்கும்புர பிரதேசத்தில் பிரபல வர்த்தகரின் வீட்டில் கொள்ளையிடச் சென்றவர்களுக்கும், அதன் உரிமையாளர்களுக்கும் இடையில் மோதல் இடம்பெற்றுள்ளது.

இரவு 12 மணியளவில் வந்த கொள்ளையர்களுக்கும் வீட்டில் இருந்தவர்களுக்கும் இடையில் இந்த மோதல் இடம்பெற்றுள்ளது. இதில் வீட்டில் இருந்த மூவரும் கொள்ளையர்கள் இருவரும் படுகாயமடைந்துள்ளனர். காயமடைந்தவர்கள் காலி கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இரவு 12 மணியளவில் முகத்தைமூடிக்கொண்டு, கூர்மையான ஆயுதத்துடன் 4 கொள்ளையர்கள் வீட்டிற்கு வந்துள்ள நிலையில் இருவர் வீட்டிற்குள் நுழைந்துள்ளனர். ஏனைய இருவர் வீட்டிற்கு வெளியே நின்றுள்ளனர்.

கொள்ளையர்கள்வீட்டிற்குள் புகுந்தவுடன் வர்த்தகரின் மனைவி வீட்டிற்கு வெளியே ஓடி வந்து உதவி கோரியுள்ளார். வீட்டிற்குள் இருந்த வர்த்தகர், மகள் மற்றும் மருமகன் கொள்ளையர்களும் மோதலில் ஈடுபட்டுள்ளனர்.

சுமார் அரை மணித்தியாலம் வரை இடம்பெற்ற இந்த மோதலில் வீட்டில் இருந்த மூவரும் படுகாமயடைந்துள்ளனர். அத்துடன் இரண்டு கொள்ளையர்களும் காயமடைந்துள்ளனர். வீட்டிற்கு வெளியே நின்று மனைவி கூச்சலிட்டமையினால் அந்த பகுதி மக்கள் வீட்டிற்கு முன்னால் கூடினர். அதை அடுத்து கொள்ளையர்கள் அங்கிருந்து தப்பிச் சென்றுள்ளனர்.

காயமடைந்தவர்கள் காலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கொள்ளையில் ஈடுபட்டவர்கள் மாத்தறை பிரதேசத்தை சேர்ந்தவர்கள் என அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

# ஸ்ரீமத் பகவத் கீதை விளக்கவுரை இன்று மாலை சின்மயா மிஷனில்

யாழ். சின்மயா மிஷன் சுவாமி சிதாகாச னந்தா அவர்களால் வாரந்தோறும் திங்கட்கிழமைகளில், ஸ்ரீமத் பகவத்கீதை விளக்கவுரை மாலை 5 மணி முதல் 6 மணி வரை யாழ் சின்மயாமிஷன், இல 9, செட்டித்தெரு ஒழுங்கை, நல்லூர் என்னும் விலாசத்தில் நடைபெற்று வருகின்றது.

இதில் இன்று திங்கட்கிழமை ஸ்ரீமத் பகவத்கீதையின் இரண்டாம் அத்தியாயத்தில், 'சகித்துக் கொள்' என்ற தலைப்பில் விரிவுரை இடம்பெறவுள்ளது.

இவ்விரிவுரை,நேரலையாக, Chinmaya Mission, Jaffna எனும் முகநூல் பக்கத்தில், ஒளிபரப்பப்பட இருக்கின்றது.

எனவே, ஆர்வலர்கள் அனைவரும் தங்கள் இல்லங்களில் இருந்தவாறே கண்டு, கேட்டுப் பயன் பெறலாம். தொடர்புகளுக்கு: 021 222 3447 (இ

# தினசரி ராசி பலன் (13.08.2018)

2018 ஆம் ஆண்டு விளம்பி வருடம் ஆடித்திங்கள் 28 ஆம் நாள் திங்கட்கிழமை துவிதீயைத்திதி காலை 8.37 மணி வரை பின்னர் திரிதீயை பி.இ. 5.45 வரை பின்னர் சதுர்த்தி. நட்சத்திரம்: பூரம் இரவு 7.09 வரை பின்னர் உத்தரம். சித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - காலை 7.36 மணி முதல் 9.09 மணி வரை.

**சுபநேரம்** - பகல் 12.05 மணி முதல் 1.35 மணி வரை.

**திவசம் செய்ய வேண்டிய திதி** - ஆடி மாத வளர்பிறை திரிதீயை.

**பிறந்த நட்சத்திர வழிபாடு**- பூரம்.

**'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.**

**மேஷம்** நன்மையான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். குடும்ப உறவு அன்புடையதாக இருக்கும். உறவுகளுடன் நெருக்கம் உண்டாகும். பழைய தொழிலில் இருந்த மந்த நிலை மாறும்.

**ரிஷபம்** சஞ்சலமான நாள். பணவரவு குறையும். மனதில் யோசனை, குழப்பம் உருவாகும். குடும்பத்தில் கருத்து வேறுபாடுகள் தோன்றும். தொழில் மந்த நிலையில் இருக்கும்.

**மிதுனம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். தேகக் குறைவால் மருத்துவச் செலவுகள் உண்டாகும். வெளி வட்டார நண்பர்களால் நன்மை உண்டாகும். வீடு பராமரிப்புச் செலவு உண்டு.

**கடகம்** ஆக்கபூர்வமான நாள். பணப்புழக்கம் திருப்தியைத் தரும். குடும்பத்தில் நெருக்கம், பாசம் அதிகரிக்கும். உள்ளத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். வேலை தேடுவோருக்கு வேலை கிடைக்கும்.

**சிம்மம்** உயர்வான நாள். பொருளாதாரம் உயர்வடையும். குடும்ப ஒற்றுமை மேலோங்கும். தொழிலில் மேலதிகாரிகளின் ஆதரவும், நற்பெயரும் கிடைக்கும். சமூக அந்தஸ்து உயரும்.

**கன்னி** சலனம் மிகுந்த நாள். பணக் கஷ்டம், மனக் கஷ்டம் அதிகரிக்கும். எடுக்கும் முயற்சிகள் தோல்வி அடையும். தொழிலில் மேலதிகாரிகளால் சிரமம் உண்டாகும். மாணவர்களுக்கு கல்வி ஊக்கம் குறையும்.

**துலாம்** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். குடும்பத்தில் அந்நியோன்யம் அதிகரிக்கும். உள்ளத்திலும், இல்லத்திலும் மகிழ்ச்சி அதிகரிக்கும். சகோதர உறவு பலப்படும்.

**விருச்சிகம்** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருள் வரவு சுமாராக இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். துணிவு, தன்னம்பிக்கை குறையும். உடல் நலன் பாதிப்புறும். மருத்துவச் செலவுகள் உண்டாகும்.

**தனுசு** இன்பமான நாள். பொருளாதாரம் தேவைகளைப் பூர்த்தி செய்யக் கூடியதாக இருக்கும். குடும்பத்தில் குதூகலம் அதிகரிக்கும். உறவினர்கள், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**மகரம்** யோசனையான நாள். தனவரவு குறையும். குடும்பத்தில் சிறுசிறு உட்பூசல்கள் காணப்படும். தேகாரோக்கியம் பாதிப்புறும். தொழிலாளர்களுக்கு தொழில் வாய்ப்புக் குறையும்.

**கும்பம்** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவினங்கள் அதிகரிக்கும். எண்ணிய காரியங்கள் தாமதமாகும். மாணவர்கள் கல்வியில் மந்த நிலையை அடைவார்கள்.

**மீனம்** சுபீட்சமான நாள். பணப்புழக்கம் தாராளமாக இருக்கும். குடும்ப மகிழ்ச்சி அதிகரிப்பால் சுபீட்சம் உண்டாகும். குடும்பத்தில் சுப நிகழ்ச்சிகள் நடக்கும். சிலர் சொந்த வீட்டுக்கு குடி போவார்கள்.

**சந்திராஷ்டம நாள்; உத்தராடம் 2ஆம், 3ஆம்,4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1ஆம், 2ஆம் பாதங்களில் பிறந்தோர் சுப கருமங்கள் தொடங்குவதைத் தவிர்க்கவும்.**

# அநுராதபுரத்தை ஆட்சி செய்த 5 ஆம் மகிந்தனை போன்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் என்கிறார் விமல்!



கொழும்பு, ஓக.13

ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இலங்கையின் அநுராதபுரத்தை ஆட்சிசெய்த 5ஆம் மகிந்தனை போன்று, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவும் பலவீனமான ஆட்சியாளர் என நாடாளுமன்ற உறுப்பினர் விமல் வீரவங்ச தெரிவித்துள்ளார்.

பத்தரமுல்லை நகரசபை மண்டபத்தில் நேற்று முன்தினம் நடைபெற்ற கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றும் போதே அவர் இதனை கூறியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த மூன்று ஆண்டுகள் என்பது நாடு மிகவும் அதலபாதாளத்திற்கு கொண்டு செல்லப்பட்ட ஆண்டுகள். இவ்வாறான நிலையில், தான் நாட்டை ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் இருந்த நிலைமைக்கு கொண்டு செல்ல போவதாக ஜனாதிபதி கூறுகிறார்.

அவர் கூறியமை சரியானதே. ஆயிரம் ஆண்டுகள் பின் நோக்கி அவர் நாட்டை இட்டுச் சென்று கொண்டிருக்கின்றார். கிறிஸ்துவுக்கு பின் 1018ஆம் ஆண்டில் ராஜராஜன் என்ற சோழ மன்னன் நாட்டைக் கைப்பற்றினான்.

அப்போது மைத்திரிபால சிறிசேனவை போன்ற பலவீனமான மன்னன் ஆட்சி செய்தான். கிறிஸ்துவுக்கு பின் 1017ஆம் ஆண்டில் 5ஆவது மகிந்தன் அநுராதபுரத்தை ஆட்சி செய்தான். அவன் அநுராதபுரத்தை ஆட்சி செய்த அரசர்களில் மிகவும் தோல்வியான அரசன்.

அவன் நாட்டு மக்கள் மீது அதிகளவில் வரிகளை விதித்தான். இறுதியில் மக்கள் வரி செலுத்துவதை நிறுத்திக் கொண்டனர். இதனால், திறைசேரி காலியானது. நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. மக்கள், அரசன் மீது அதிருப்தி கொண்டனர்.

நாட்டின் பாதுகாப்பு கேள்விக்குரியானது. நாட்டின் இந்த நிலைமையை கண்ட ராஜராஜன் என்ற சோழ மன்னன், 5ஆம் மகிந்தனை ஆட்சியில் இருந்து விரட்டி விட்டு அநுராதபுரத்தை கைப்பற்றினான்.

இன்றும் நவீன 5ஆம் மகிந்தன் இந்தியா, நாட்டின் அனைத்தையும் கைப்பற்றிக் கொள்ளும் சூழ்நிலையை ஏற்படுத்தியுள்ளார்.

மத்தள விமான நிலையம், காங்கேன்துறை துறைமுகம், பலாலி விமான நிலையம், திருகோணமலை துறைமுகம், கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனையம் போன்ற அனைத்தையும் புரோக்கரும், ஜோக்கரும் இணைந்து இந்தியாவுக்கு வழங்க தயாராகி வருகின்றனர்.

அது மாத்திரமல்ல சீகிரிய குன்றை இந்தியாவுக்கு வழங்கி முன்னேற்ற போவதாக புரோக்கர்பிரதமர் கூறுகிறார். அவருக்கு அருகில் செல்ல வேண்டாம் உங்களையும் இந்தியாவுக்கு விற்று விடுவார்.

சகலவற்றையும் இந்தியாவுக்கு வழங்கிய பின்னர், எதிர்காலத்தில் துட்டகைமுனு மன்னன் பிறந்து வந்தாலும் நாட்டைக் காப்பாற்ற முடியாது என அவர் குறிப்பிட்டுள்ளார்.

# நயினை அம்மனை நாடி வருவோருக்கு அமுத சுரபியில் அன்னதானம்



நயினாதீவு, ஓக.13

நயினை அம்மன் ஆலயத்தில் இன்று ஆடிப்பூர விழா சிறப்பாக நடைபெற இருக்கின்றது. ஸ்ரீ நாகபூஷணியைத் தரிசிக்க நயினை ஆலயத்தை நாடி ஆயிரக் கணக்கான அடியார்கள் படையெடுத்து வருவர்.

அம்மனை வழிபட வரும் அடியார்களுக்கு அன்னம் வழங்கிட, ஸ்ரீ நாகபூஷணி அமுத சுரபி அன்னதான சபை காத்திருக்கிறது.

இன்றைய தினம் அமுதசுரபி அன்னதானசபை மண்டபங்களில் வழமைபோல் விசேட அன்னதானம் வழங்கப்படும் என்றும் அம்பிகை அடியார்களை அன்புடன் அழைக்கின்றோம் என்றும் அமுதசுரபி அன்னதான சபை அறிவிக்கின்றது.

# சண்டிலிப்பாய் ஆலய ஆடிப்பூர ருது சோபனம்

சண்டிலிப்பாய், ஓக.13

சண்டிலிப்பாய் வீணாகான குருபீடம்பதி உறையும் ஸ்ரீ மஹா சரஸ்வதி அம்பாள் உபதேச திருக்கோவிலில் ஆடிப்பூர ருது சோபனமும் 108 சுமங்கலிப் பெண்களால் உபசார ஆராத்தி எடுத்தலும் இன்று திங்கட்கிழமை மாலை 3.30 மணி முதல் இடம்பெறும்.

இவ்வுபசார நிகழ்வின் போது வீணா, வேணு, மிருதங்க, நாட்டிய கீத வாத்தியங்கள் இசைக்கப்படும்

சரஸ்வதி உபதேச திருக்கோவிலுக்கு வருகைதந்து தரிசித்து சகல ஐஸ்வரியங்களும் பெற்று நலமுடன் வாழ்வதற்கும் சிறப்பாக பெண்களுக்கெதிரான வன்முறைகள் அற்றுப்போகவும் பெண்கள் பாதுகாப்புடன் வாழ்வதற்கும் சகல நலன்களுடனும் வாழ்வதற்கும் அருள் வேண்டிப் பிரார்த்திப்போம் என்று ஆலய குரு முதல்வர் சிவ ஸ்ரீ சபா வாசுதேவக் குருக்கள் குறிப்பிடுகின்றார். (இ








மன்னார் மறைமாவட்டத்தின் தலை மன்னார் பங்கின் பாதுகாவலராம் புனித லவுறேன்சியாரின் ஆலய வருடாந்த பெருவிழா பங்கு தந்தை அருட்பணி இ.அகஸ்ரின் புஸ்பராஜு அடிகளாரின் தலைமையில் ஒன்பது நவநாள்கள் நடைபெற்று வெள்ளிக்கிழமை (10.08.2018) மன்னார் மறைமாவட்ட ஆயர் மேதகு இம்மானுவேல் பெனாண்டோ ஆண்டகையின் தலைமையில் பெருவிழா திருப்பலியை ஒப்புக்கொடுப்பதையும் இடம்பெறுவதையும் ஆயர் திருச்சுரூப ஆசீரை வழங்குவதையும் படங்களில் காணலாம். (இ–112)

# முழு சமூகமும் ஒத்துழைத்தால் மட்டுமே டெங்கு நோயை கட்டுப்படுத்தும் சாத்தியம்



மத்திய மாகாண முதலமைச்சர்

கொழும்பு, ஓக.13

டெங்கு நோயைப் பரவுவதை ஓரிருவரால் மாத்திரம் கட்டுப்படுத்த முடியாது. முழு சமூகமும் இணைந்து ஒத்துழைத்தால் மாத்திரமே டெங்கு நோயை முழுமையாகக் கட்டுப்படுத்துவது சாத்தியமாகும் என மத்திய மாகாண முலமைச்சர் சரத் ஏக்கநாயக்க தெரிவித்தார்.

கண்டி எசல பெரஹரா தொடர்பாக சுற்றாடல் வேலைத்திட்டம் தொடர்பாக கண்டி மாநகர அதிகாரிகளைதெளிவுபடுத்தும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஆங்காங்கே போடப்படும் குப்பை கூளங்கள் தொடர்பாக மக்களை தெளிவு படுத்துவது, வீதி நாடகங்களை நடத்துதல், சுவரொட்டிகளை காட்சிப் படுத்துதல், சிரமதானங்களை மேற்கொள்ளுதல் என்பவற்றினால் மாத்திரம் டெங்கு நோயைக் கட்டுப்படுத்த முடியாது. அனைத்து சமூகமும் அதற்கு ஒத்துழைக்க வேண்டும்.

எனவே கண்டியில் பெரஹரா பார்வையிட வரும் அனைவரும் டெங்கு நோயைக் கட்டுப்படுத்துவதற்கு ஒத்துழைப்பு வழங்குவது புத்த பெருமானுக்கு செய்யும் பெரும் நற்கருமங்களில் ஒன்றாக முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தூதரகத்தை முற்றுகையிடுவோம் தமிழக மீனவர்கள் எச்சரிக்கை!

இலங்கைகடற்படையினால் கைது செய்யப்பட்டுள்ள 27 தமிழக மீனவர்களையும் உடனடியாக விடுதலை செய்ய வேண்டும்எனதமிழகமீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

அவ்வாறு செய்யாவிட்டால், சென்னையில்உள்ள இலங்கை தூதரகம் முன்பாக ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளத்தீர்மானித்துள்ளோம் என தமிழ்நாடு மீன்பிடி தொழிற்சங்க கூட்டமைப்பு நிர்வாகிகள் எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

இலங்கைகடற்பரப்பில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் தமிழக மீனவர்கள் 27 பேர் கடந்த வெள்ளிக்கிழமை கைதுசெய்யப்பட்டனர்.

இதையடுத்து, ஊர்காவற்றுறை பதில் நீதிவான் முன்னிலையில் முன்னிலைப்படுத்தப்பட்ட அவர்களை எதிர்வரும் 16ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டுள்ளார் அவர்.

இந்த நிலையில், தமிழகமீனவர்கள்கைதுசெய்யப் பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்தே இந்த போராட்டத்தை மேற்கொள்ள உள்ளோம் என தமிழ்நாடு மீன்பிடிதொழிற்சங்கக்கூட்டமைப்பு நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

அல்லது கச்சதீவில் குடியேறும் போராட்டத்தை ஆரம்பிக்க உள்ளோம் என்றும் தமிழ்நாடு மீன்பிடி தொழிற்சங்க கூட்டமைப்பு நிர்வாகிகள் தெரிவித்துள்ளனர்.

# ஒலுவில் மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிப்பு!

அம்பாறை,ஓக.13

அம்பாறை, ஒலுவில் பிரதேசத்தில் உள்ள மீனவர்களின் படகுகள் மற்றும் வள்ளங்கள் என்பன கடல் அலைகளின் தாக்கத்தினால் பெரியளவில் சேதமடைந்துள்ளன. இதனால் தமது வாழ்வாதாரங்கள் மோசமாக பாதிக்கப்பட்டுள்ளன என அப் பகுதி மீனவர்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.

அத்துடன் ஒலுவில் பிரதேசத்தில் அமையப் பெற்றுள்ள துறைமுக நிர்மாணப் பணிக்காக இப்பகுதியில் உள்ள கடற்பிராந்தியங்களில் பாறாங்கற்கள் போடப்பட்டமையினால் அப் பகுதியில் கடலரிப்பு ஏற்பட்டுள்ளது. இதனால் மீனவர்களின் வாடிகள் மற்றும் தென்னந்தோப்புகள் மற்றும் படகுகள் என்பன பாதிக்கப்பட்டுள்ளன என அவர்கள் மேலும் சுட்டிக்காட்டியுள்ளனர்.

# பிரபலமான சிங்கள நடிகரின் திருமண வீட்டில் மஹிந்த!



பிரபல சிங்கள நடிகரின் மகனின் திருமண நிகழ்வில் முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பங்கேற்றுள்ளார்.

ரவிந்திர ரன்தெனிய என்ற பிரபல சினிமா நடிகரின் மகனின் திருமண நிகழ்வுகள், கொழும்பில் உள்ள பிரபல ஹோட்டலில் சிறப்பாக நடைபெற்றன.

இந்நிகழ்வில் இலங்கையின் பிரபல நடிகர்கள், சினிமா நட்சத்திரங்கள் மற்றும் பாடகர்கள் கலந்து கொண்டிருந்தனர்.

பலசினிமா நட்சத்திரங்களுக்கு மத்தியில் முன்னாள் ஜனாதிபதி ராஜபக்ஷ தனித்துவமாக காணப்பட்டார் என சிங்கள ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

மஹிந்த நடிகர்களுடன் இணைந்த அரசியல்வாதியாக திருமணவிழாவில் கலந்துகொண்டுள்ளார்.

# பொலித்தீன் பைகளுக்கு பதிலாக மாற்று பைகள்!

அங்காடி வர்த்தக நிலையங்கள் மற்றும் வர்த்தக நிலையங்களில் ஆடைத் தொழில்துறை தயாரிப்புக்களை விற்பனை செய்யும் போது பயன்படுத்தப்படும் பொலித்தீன் பைகளுக்கு பதிலாக மாற்று பைகளை பயன்படுத்துவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

இதுதொடர்பில் இந்த வர்த்தகர்களின் கவனத்தை ஈர்க்க மத்திய சுற்றாடல் அபிவிருத்தி சபை தீர்மானித்துள்ளது. விசேடமாக கடதாசியில் தயாரிக்கப்பட்ட பைகளை வர்த்தர்கள் பயன்படுத்துவதில் ஆர்வத்தை ஏற்படுத்துவதே இதன் நோக்கமாகும். தேசிய சிற்ப சபைகளுடன் ஒன்றிணைந்து இந்த வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்படும் என்று மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் ஜே.எம்.பி. இந்திரரத்ன தெரிவித்தார்.

தேசிய சிற்ப சபையின் தயாரிப்புக்களின் வலைப்பின்னலை இதில் தொடர்புபடுத்தப்படவுள்ளது. தற்பொழுது இது தொடர்பான தேசிய சிற்ப சபையுடன் பேச்சு இடம்பெறுகிறது என மத்திய சுற்றாடல் அதிகார சபையின் பணிப்பாளர் ஜே.எம்.பி. இந்திரரத்ன மேலும் தெரிவித்தார். .

# ரயில் போக்குவரத்தை அத்தியாவசிய சேவையாக மாற்றும் வர்த்தமானியை அடுத்த வாரம் வெளியிட அமைச்சு திட்டம்!

இலங்கையில் ரயில்வே போக்குவரத்து சேவையை அத்தியாவசிய சேவையாக மாற்றுவதற்கான வர்த்தமானியை அடுத்த வாரம் வெளியிடுவதற்கு போக்குவரத்து அமைச்சு திட்டமிட்டுள்ளது.

தற்போது நாடு முழுவதும் பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள ரயில்வே ஊழியர்கள் சேவைக்கு வருகை தரவில்லை. எனினும் இந்த நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய தினத்திற்கு முன்னர் அனைத்து ரயில்வே ஊழியர்களும் பணிக்கு திரும்ப வேண்டும்.

அவ்வாறு திரும்பவில்லை எனில் கடுமையான தீர்மானம் மேற்கொள்ளப்படும் என போக்குவரத்து பிரதி அமைச்சர் அஷோக் அபேசிங்க தெரிவித்துள்ளார்.

அத்துடன் ரயில்வேயின் உத்தியோகபூர்வ இல்லத்தில் வசிக்கும் ஊழியர்களையும் அதிலிருந்து நீக்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படவுள்ளது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்த நிலையில், தொழிற்சங்க நடவடிக்கைகளை தடுப்பதற்கு முன்னர் தங்கள் பிரச்சினைக்கு உடனடியாக தீர்வு வழங்குமாறு ரயில் எஞ்சின் சாரதிகள் சங்கத்தின் செயலாளர் இந்திக்க தொடங்கொட தெரிவித்துள்ளார்.

கடந்த ஐந்து நாட்களாக நாடளாவிய ரீதியாக முன்னெடுத்து வரும் ரயில்வே தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக 10 கோடி ரூபா அரசாங்கத்திற்கு நட்டம் ஏற்பட்டுள்ளது. அத்துடன் நாட்டு மக்களும் பெரும் நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இருவேறு பகுதிகளில் ஹெரோயினுடன் மூவர் கைது!



கொழும்பு,ஓக.13

கொழும்பில் இருவேறுப் பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்புக்களின் போது ஹெரோயின் போதைப் பொருளுடன் மூவரைகைதுசெய்துள்ளனர் என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கல்கிஸ்ஸை பகுதியில் விசேட அதிரடிப் படை பிரிவு பொலிஸார் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போது 5 கிராம் 620 மில்லிகிராம் ஹெரோயினுடன் 54 வயதுடைய ஒருவரை கைது செய்தனர். அவரை கல்கிஸ்ஸை நீதிமன்றில் ஆஜர்படுத்தியபோது நீதிவான் அவரை எதிர்வரும் 27 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க உத்தரவிட்டார்.

மேலும் வெலிகட பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பின் 2 கிராம் 50 மில்லிகிராம் ஹெரோயினுடன் இராஜகிரியவைச் சேர்ந்த ஒருவரையும், 2 கிராம் 60 மில்லிகிராம் ஹெரோயினுடன் கொதடுவையைச் சேர்ந்த ஒருவரையும் வெலிகட பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

# இரட்டை பிரஜாவுரிமை தொடர்பில் முரண்பட்ட கருத்துக்கள் முன்வைப்பு

இலங்கையின் வெளிநாட்டு ராஜதந்திரிகள் மற்றும் தூதரக உயர்ஸ்தானிகரக அதிகாரிகள் இரட்டை பிரஜாவுரிமைகளை கொண்டிருக்கக் கூடாது என்ற நிலைப்பாடு தொடர்பில் உயர்பதவிகளுக்கான நாடாளுமன்ற குழுவின் முன்னால் முரண்பட்ட கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

வெளிநாட்டு அமைச்சின் செயலாளர் பிரசாத் காரியவசம் இந்த முரண்பாடான கருத்துக்களை எழுத்துமூலம் சமர்ப்பித்துள்ளார் எனத் தெரியவருகிறது.

இதன்படி ராஜதந்திரி ஒருவரை பணிக்கு அமர்த்தும்போது அவர் இன்னுமொருநாட்டில்பிரஜாவுரிமையை கொண்டிருக்கக் கூடாது என வலியுறுத்தப்படுகிறது.

எனினும் பதவியில் இருக்கும் ராஜதந்திரி ஒருவர் மற்றுமொரு நாட்டின்பிரஜாவுரிமையைப்பெறமுடியாது என்ற எந்த ஏற்பாடும் இல்லை என்று அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

நோர்வேக்கான இலங்கை தூதுவர் இரட்டை பிரஜாவுரிமையை கொண்டிருப்பதாக கூறப்படும் குற்றச்சாட்டு தொடர்பிலேயே இந்த முரண்பாட்டு அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை இலங்கையின் நாடாளுமன்ற உறுப்பினர் ஒருவர் இரட்டைபிரஜாவுரிமையைகொண்டிருக்க முடியாது என்ற நிலைப்பாடு நடைமுறையில் உள்ளதாகவும் காரியவசம் சுட்டிக்காட்டியுள்ளார்.

காலைக்கதிர் Kalaikkathir





# மாகாணத்துக்குரிய அதிகாரத்தை வழங்காது

# எம் மக்களை அந்நியப்படுத்தும் நோக்குடன் செயற்படுகிறது அரசு

## மன்னார் கூட்டுறவு தின நிகழ்வில் அனந்தி

கூட்டுறவு என்பது அதிகாரம் பரவலாக்கப்பட்ட மாகாணத்துக்குரிய அதிகாரம். அப்படியிருந்தும் அரசு மத்தியிலிருந்து நேரடியாக தலையீடு செய்கின்றது என்றால் அவர்களுடைய உள் நோக்கம் எம்மை பிரித்து அந்நியப்படுத்தும் செயல்பாட்டிலே அவர்கள் செயல்படுகின்றனர். மத்தியிலுள்ள கூட்டுறவு அமைச்சு தலையிடுவதுமட்டுமல்ல நிதி அமைச்சரும் இந்த கூட்டுறவு விடயத்தில் நேரடியாக தலையிடுவதை நீங்கள் கண்டு கொள்ளலாம் என வடமாகாண சபை மகளீர் விவகாரம், புனர்வாழ்வளித் தல், சமூக சேவைகள், கூட்டுறவு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் இவ்வாறு தெரிவித்தார்.

96வது சர்வதேச கூட்டுறவு தினத்தை முன்னிட்டு வடமாகாண ரீதியில் மன்னார் மாவட்ட கூட்டுறவாளர்களின் பங்களிப்புடன் மன்னார் நகர மண்டபத்தில் இந் நிகழ்வு நடைபெற்றது.

சனிக்கிழமை (11.08.2018) பிற்பகல் நடைபெற்ற இவ் நிகழ்வில் பிரதம அதிதியாக வடக்கு மாகாண அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன் கலந்து கொண்டார்.

நிகழ்வில் மன்னார் மாவட்டத்தில் உள்ள 219 கூட்டுறவுசங்கங்களில் இருந்தும் உறுப்பினர்கள் கலந்து கொண்டதுடன் சிறப்பு விருந்தினராக வடமாகான கூட்டுறவு ஆணையாளர் பொ.வாகீசன், மன்னார் மாவட்ட கூட்டுறவு உதவி ஆணையாளர் தலைமைக்காரியாலய கூட்டுறவு செயலாளர் ஹசானா, மன்னார் மாவட்ட கூட்டுறவு திணைக்கள உத்தியோகத்தர்கள், பிரதேச செயலாளர் என்.பரமதாசன் மற்றும் மன்னார் மாவட்ட பதிவு செய்யப்பட்ட அனைத்து சங்கங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டிருந்தனர்.

இந் நிகழ்வில் சிறந்த கூட்டுறவு சங்கங்ளுக்கான நினைவுச் சின்னங்கள், மற்றும் சிறந்த கூட்டுறவு ஊழியர்களுக்கான கௌவிப்புக்கள் வழங்கப்பட்டன.

இங்கு அனந்தி சசிதரன் தொடர்ந்து உரை யாற்றுகையில் –

இங்கு நான் ஓர் உண்மையை கூற வேண்டும். எனது ஒரு வருடகால கூட்டுறவு அமைச்சின் அனுபவத்தில் மன்னார் மாவட்டத்திலிருந்துதான் எந்தவொரு முறைப்பாடும் எனது கூட்டுறவு அமைச்சுக்கு இதுவரை வந்ததில்லை.

கூட்டுறவு சம்பந்தமாக அதிகமான முறைப்பாடுகள் ஏனைய நான்கு மாவட்டங்களிலிருந்து வந்து குவிகின்றன. ஒப்பீட்டளவில் யாழ்ப்பாணம் மாவட்டத்திலிருந்துதான் அதிகமான முறைப்பாடுகளாக இருக்கின்றன. இதற்கு பதிலளிப்பதிலே எங்கள் நேரங்கள் செலவழிக்கப்படுகின்றன.

இன்னொரு விடயம் 2015ம் ஆண்டு அப்பொழுது கூட்டுறவு அமைச்சருக்கு எழுதிய கடிதங்களுக்கு நடவடிக்கைகள் எடுக்கவில்லையென 2018 ஆம் ஆண்டு



அக்கடிதத்தின் பிரதிகளை வைத்து எனக்கு அனுப்பும் வழமையும் எனக்கு வந்து கொண்டிருக்கின்றது.

பெயர்கள் குறிப்பிடாமல் அநாகரிகமாக வந்தாலும்கூட அதற்குள் விடயம் இருக்குமாகில் நடவடிக்கை எடுப்பதில் எனக்கு எவ்வித தயக்கமும் இல்லை.

கூட்டுறவை திருத்துவதற்கு அல்லது கூட்டுறவை நல்ல வழிக்கு இட்டுச் செல்வதற்கு நாங்கள் இவ்வாறான நடவடிக்கைகளை எடுப்பதற்கு பின் நிற்பதில்லை.

எனக்கு ஒரு வருத்தம் இருக்கின்றது நான் ஒரு வருடமாக இந்த கூட்டுறவு துறைக்கு அமைச்சராக இருக்கின்றேன் ஆனால் மக்களுக்கு செய்ய வேண்டிய நிறைய காரியங்கள் தடைப்பட்டு இருக்கின்றன. இன்னும் செய்திருக்கலாம் என்ற எனது அடி மனதில் இந்த ஆதங்கம் இருக்கின்றது.



உங்களுக்குத் தெரியும் நான் அமைச்சு பொறுப்பேற்ற காலத்திலிருந்து எனக்கும் முதலமைச்சருக்கும் எதிராக வரும் சவால்களை எதிர்கொள்வது என்ற சிந்தனையில் இருப்பதைத் தவிர வேறு விடயங்களில் எங்களுக்கு கவனம் செலுத்த முடியாமல் இருக்கின்றது.

உண்மையில் போரினால் பாதிக்கப்பட்ட பெண்ணாக சமூக சேவை, கூட்டுறவு, தொழில்துறை இந்தவிடயங்களுக்குள் எங்களுடைய பெண்கள், மாற்றுத் திறனாளிகள், அநாதைக்குழந்தைகள், முன்னாள்போராளிகள் போன்ற ஒட்டு மொத்த வடக்கு மாகாணம் தேவையை நாடியிருக்கின்ற நிலையில் நாங்கள் பலவிதமான கோரிக்கைகளை முன்வைத் தோம். எழுத்து மூலம் அறிவித்தோம். அதுமட்டுமல்ல நேரடியாக பேச்சுகளிலும் இறங்கினோம்.

ஆனால் எங்களுக்கு எதுவும் கிடைக்கவில்லை. மாறாக அரசாங்கம் மத்தியிலிருந்து அரசாங்க அதிபர்களுக்கூடாக தாங்கள் கடமைகளைச் செய்கின்றார்கள்.

இன்னொரு விடயம் கூட்டுறவு என்பது அதிகாரம் பரவலாக்கப்பட்ட மாகாணத்துக் குரிய அதிகாரம். அப்படியிருந்தும் அரசு மத்தியிலிருந்து நேரடி யாக தலையீடு செய்கின்றது என்றால் அவர்களுடைய உள்நோக் கத்தை நீங்கள் விளங்கிக் கொள்ள வேண்டும்.

உங்களிடமிருந்து எங்களை அந் நியப்படுத்தும் செயல்பாட்டிலே அவர்கள் செயல்படுகின்றனர். மத்தியிலுள்ள கூட்டுறவு அமைச்சு தலையிடுவதுமட்டுமல்ல நிதி அமைச்சரும் இந்த கூட்டுறவு விடயத்தில் நேரடியாக தலையிடுகின்றமையை நீங்கள் கண்டு கொள்ளலாம்.

நுண்கடன் திட்ட விடயத்தில் அவர்கள் மூக்கை நுழைப்பதன் காரணம் எங்களையும் உங்களையும் பிரிப்பதன் நோக்கமே. இவ்விடயத்தில் இன்னொன்று கூற வேண்டும் நுண் கடன் பெறுபவர்கள் எமது வடமாகாணத்தில் இயங்குகின்ற கிராமிய வங்கிகள், சிக்கன கூட்டுறவு சங்கங்களை பயன்படுத்திக் கொள்ள வேண்டும்.

மிக குறைந்த வீதத்தில் கடன்களை வழங்குவதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றார்கள்.

கிராமிய வங்கி எமது வங்கி இதைத்தான் நீங்கள் நாட வேண்டும். இது உங்களுக்கு பாதுகாப்பும் சிறந்த கடன் திட்டமாகவும் அமையும்.

வட மாகாணத்துக்கு தற்பொழுது கிடைத்திருக்கும் கூட்டுறவு ஆணையாளரும் பதிவாளருமான பொ.வாகீசன் எமக்கு கிடைக்கப்பெற்ற ஒரு கொடையாகும். அவர் தெளிவான சிந்தனை முற்போக்கு கொண்ட ஒரு சிந்தனையாளர். அதுமட்டுமல்ல கூட்டுறவு மூலம் எமது மக்களை எவ்வாறு முன்னேற்றலாம் என்ற நல்ல சிந்தனையாளரும் நேர்மையானவரும் கூட. எங்களுடைய அமைச்சின் கடைசி காலத்தில் கிடைக்கப் பெற்ற ஒரு கொடை என்றே கூறவேண்டும்.

எங்களுடைய அமைச்சின் மகளீர் விவகார செயலாளராக வந்திருக்கும் திருமதி ரூபினி வரதலிங்கம் பெண்களின் பிரச்சினைகளை நன்கு அறிந்து அவைகளை முன்னெடுத்துச் செல்பவராக இருக்கின்றார். இதனால் நாங்கள் பெண்கள் சம்பந்தமான விடயங்களையும் நன்கு கையாளக்கூடியதாக இருக்கின்றது.

2018ம் ஆண்டு பத்தாம் மாதம் எமது அமைச்சுக்கள் முடிவுற்றாலும் இந்த நிர்வாக கட்டமைப்பு தொடர்ந்து இயங்கும். எம்மால் முன்னெடுக்கப்பட்ட கொள்கைகளை நாங்கள் விட்டுச் சென்றாலும் எமது நிர்வாகிகள் அவற்றை முன் னெடுப்பார்கள்.

மன்னார் மண்ணில் அதிகமான இளைஞர் யுவதிகள் தொழில் வாய்ப்பு இன்றி தவிக்கின்றனர். இவர்கள் தொழில் பயிற்சி பெறவோ அல்லது எந்த தொழில்செய்யவிரும்புகின்றார்களோ அவர்கள்எங்களுடன் தொடர்பு கொண்டால் நாங்கள்இந்தியஅரசாங்கத்துடன் பேசி இருக்கின்றோம் அவர்களுக்கு இந்திய உதவி திட்டத்தின் கீழ் இலவசமாக தொழில் கற்கை நெறிகளையும் வழங்க கேட்டுள்ளோம்.

ஒவ்வொருபிரதேசசெயலகத்திலும் தொழில் துறை உத்தியோகத்தர்கள் இருக்கின்றார்கள். நீங்கள் செய்கின்ற சிறு கைத்தொழில் முயற்சி அதற்கான ஆலோசனைகளை தருவதற்கு அவர்கள் தயாராக இருக்கின்றார்கள். அவர்கள் மாகாணத்தால் நியமிக்கப்பட்டவர்கள் நீங்கள் அவர்களை நாடுங்கள்.

இங்கு பல இடங்களில் நான் கவனித்து இருக்கின்றேன் புற்றுநோய், காசநோய் உள்ளவர்கள் இருக்கின்றார்கள் இவர்களுக்கான உதவிகள் இருக்கின்றன இதை இவர்கள் எவ்வாறு பெற்றுக் கொள்வது என்பதுகூட தெரியாமல் இருக்கின்றார்கள். ஆனால் அப்பகுதி கிராம அலுவலர்கள் சமூக சேவை திணைக்களத்தைச் சார்ந்தவர்கள் தங்கள் பகுதியிலுள்ள இவ்வாறான மக்களை கண்டு கொள்ளாது இருக்கின்றமையின் மர்மம் என்ன என்பது தெரியாது இருக்கின்றது.

ஏதும் அறியாத பாமர மக்களாக இருக்கும் இவர்களை இந்த உத்தியோகத்தர்கள் தேடுதல் செய்கின்றனரா என்பது கேள்விக்குறியே.

ஒரு கிராமத்தின் கிராம அலுவலர் மக்களுக்கு வழிகாட்டல் உள்ளவராக இருக்க வேண்டும். நான் முன்பு பிரதேச செயலகத்தில் கடமையாற்றியபோது அன்றைய கிராம அலுவலர்கள் தங்கள் கிராம மக்களை அவர்களே அழைத்து வந்து அவர்களின் பிரச்சினைகளை தீர்வு கண்டு கூட்டிச் செல்வர்.

இப்பொழுது அவ்வாறான செயல்பாடுகள் அற்ற நிலையே காணப்படுகின்றது. ஒரு சிலர் இப்பொழுது இருந்தாலும் பலர் இவ்வாறான செயல்பாடு அற்றவர்களாகவே காணப்படுகின்றனர். எமது மக்கள் நாம்தான் இவர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற உணர்வு இருக்க வேண்டும்.

இந்த கூட்டுறவு தினம் கூட்டுறவை வலுப்படுத்தும் நிகழ்வாக இருக்கின்றது. யுத்தம் முடிந்து ஒன்பது வருடங்கள் கடந்தும் வர்க்க வேறுபாடுகள் இன்னும் தலைவிரித்தாடுகின்றது. சாதி வேற்றுமை, ஏற்றத் தாழ்வு என்பன பல கிராமங்களில் திட்டமிட்டு செயல்படுத்தப்படுகின்றன.

விடுதலை போரில்கூட கூட்டுறவே முக்கிய பங்கை செலுத்தியது. ஆகவே கூட்டுறவால் இதற்கான மாற்றங்களை கொண்டுவர முடியும். கூட்டுறவை எவ்வளவுக்கு பலப்படுத்துகின்றோமோ அவ்வளவுக்கு எமது கலை கலாசாரத்தை நாம் வளர்த்துக் கொள்ளமுடியம். – என்றார் அனந்தி. (இ – 112)

காலைக்கதிர்
Kalaikkathir





# அம்மனை போற்றும் ஆடிப்பூர விரதம்

ஆடிப்பூரம் அம்பாளுக்குரிய விசேட தினமாகும். ஆடி மாதத்தில் வரும் பூர நட்சத்திரத்தில் இந்த விழா சிறப்பாக கொண்டாடப்படுகிறது. இந்த நல்ல நாளில்தான் உமாதேவி அவதரித்ததாக புராணங்கள் கூறுகின்றன. அது மட்டுமின்றி சித்தர்களும், முனிவர் களும் இந்த நாளில்தான் தங்களுடைய தவத்தை தொடங்குவர் எனவும் புராணங்கள் எடுத்துரைக்கின்றன. உலக மக்களை காப்பதற்காக அம்பாள், சக்தியாக உருவெடுத்த தினம் ஆடிப்பூரம் என்று கூறப்படுகிறது.

ஆடி மாதம் என்பது தட்சிணாயன காலத்தின் தொடக்க காலம். நம்முடைய ஒரு வருடம் தேவர்களுக்கு ஒரு நாள். அவர்களது இரவுக் காலமே தட்சிணாயன காலம் ஆகும். இதுவரை வடக்கு நோக்கி நகர்ந்து கொண்டிருந்த சூரியன் தனது தெற்கு நோக்கிய பயணத்தை தொடங்கும் மாதம்.

உத்தராயணக் காலம் சிவபெருமானை வழிபட உகந்தது என்றால், தட்சிணாயனம் அவரது வாம பாகத்தில் வீற்றிருக்கும் அம்பிகைக்கு உரிய காலம் ஆகும். அம்மனுக்கு உகந்த ஆடி மாதம், நவராத்திரி ஆகிய பண்டிகைகள் இந்த காலங்களில்தான் வரும். இந்த ஆடி மாதத்தில் வெள்ளி, செவ்வாய், ஞாயிற்றுக்கிழமைகளில் அன்னையை வழிபட எல்லா நலன்களும் தந்து அருளுவாள் அந்த தயாபரி. இவ்வளவு சிறப்புகள் கொண்ட ஆடி மாதத்தில் வரும் பூரம் அம்பிகைக்கு மிகவும் உகந்த நாள்.

உலகத்தை படைத்து, காத்து, ரட்சித்து அருளும் அன்னைக்கு மஞ்சள் காப்பு, சந்தனக்காப்பு, குங்குமக் காப்பு நடத்துவார்கள். ஆனால் அன்னைக்கு வளைகாப்பு நடக்கும் நாள் தான் ஆடிப்பூரம்.

தாய்மை என்பது பெண்களுக்கே உரித்தான ஒருதனிச் சிறப்பாகும். எனவே உலக உயிர்கள் அனைத்தையும் தன்னுள் அடக்கிவைத்திருக்கும் அன்னைக்கு இந்த நாளில் வளைகாப்பு நடத்தப்படுகிறது. வளைகாப்பு முடிந்ததும் அன்னையை அலங்கரித்த வளையல்கள் அனைத்தும் பெண் பக்தர்களுக்கு பிரசாதமாக வழங்கப்படும்.

**வைணவக் கோவில்களில்..**

ஆடிப்பூரம் விழா சைவ ஆலயங்களில் மட்டுமல்லாது, வைணவ தலங்களிலும் வெகு சிறப்பாக நடைபெறும். ஏனெனில் ஆண்டாள் அவதரித்த தினம் ஆடி மாதத்தில் வரும் பூரம் நட்சத்திரம் ஆகும். துளசி தோட்டத்தில் அவதரித்த ஆண்டாளின் இயற்பெயர் கோதை என்பதாகும். ஆண்டாள் அவதரித்த திருத்தலமான ஸ்ரீவில்லிபுத்தூரை, வடமாநில மக்கள் கோதாதேவி அவதார ஸ்தலம் என்று சிறப்பித்து கூறுவர்.

இந்த புண்ணிய தினத்தில் ஆண்டாள் ஆலயத்துக்கு சென்றுவருவது மிகவும் நன்மை தருவதாகும். எம் பெருமானின் பல்வேறு அம்சங்களான சங்கு, சக்கரம், வில், கதை, வாள் போன்ற ஆயுதங்கள் மட்டுமே ஆழ்வார்களாக அவதரித்த தருணத்தில், பூமாதேவியும் ஆடிப்பூர நாளில் ஆண்டாளாக அவதரித்தாள்.

அரங்கனுக்குச் சூட்ட வேண்டிய மலர் மாலையை தானே சூடிக் கொண்டு அழகு பார்த்தாள் ஆண்டாள். தான் சூடிக் களைந்த மாலையைப் பெருமாளுக்கு



அளித்து வந்ததால், சூடிக் கொடுத்த சுடர்க்கொடி என்ற திருநாமம் பெற்றாள். அப்போது அந்தக் கண்ணாடியில் அரங்கனாகவே தெரிந்தாள் ஆண்டாள். தானே அவனாக பாவித்து மகிழ்ந்த ஆண்டாளின் அவதார தினம்தான் ஆடிப்பூரம். அந்த அற்புதத் திருநாளை ஒட்டி நடக்கும் திருவிழாவில் ஆண்டாளை தரிசிப்போர் ஆனந்த வாழ்வு பெறுவர் என்பது ஐதீகம்.



# ஆடிப்பூர நன்னாளில் அம்பிகையை ஆராதித்து அருள் பெற்றிடுவோம்!

உலகெலாம் நிறைந்து விளங்குகின்ற ஆதிபராசக்தியான அம்பிகைக்குரிய அற்புத தினம்தான் ஆடிப்பூரம். இந்த ஆடிப்பூரமானது அம்பிகையின் திருவருளைப் பெறுவதற்குரிய புனித புண்ணிய நல்ல நாளாகும். எல்லாம் வல்ல ஆதிசக்தியான அகிலாண்ட கோடி பிரம்மாண்ட நாயகி அம்பிகை உமையவள் ருதுவாகிய தினமாகக் கருதப்படுகின்ற ஆடிப்பூர நன்னாள் அற்புதமான அதி உன்னத சிறப்பு வாய்ந்த ஒரு திருநாளாகும்.

இப் பரந்த நிலவுலுக்கெல்லாம் அருட் தாயாக விளங்குகின்ற லோக மாதாவாகிய அன்னை அம்பிகை ஆதிபராசக்தி தன்னுடைய பேரருட் பிரவாகத்தை அகிலமெங்கும் அண்டசராசரங்களெல்லாம் பரிணமிக்கும்படி அருள் சுரக்கும் நாள் ஆடிப்பூரம்.

உலகைக் காக்கின்ற பரம்பொருளான சிவபெருமான் ஆன்மாக்கள் மீது கொண்ட அருட்பெரும் திவ்ய கருணைக் கடாட்சத்தினால் பஞ்ச கிருத்திய நடனம் புரிகின்றார். அவர் தமது சக்தியைக் கொண்டு தான் உலகை இயக்குகின்றார். சிவபெருமான் கூட சக்தி இல்லாது இயங்கமாட்டார்.

இந்த உலக இயக்கத்துக்கு மூல காரணமாக விளங்குகின்ற சகலதையும் ஆட்டிப் படைக்கும் ஆதிபராசக்தியாம் அம்பிகையின் அருட்பிரவாகம் ஊற்றெடுத்துப் பாயும் உன்னத அருட்திருநாள்தான் ஆடிப்பூரம்.

"சக்தி இருந்தால் செய். இல்லையேல் சிவனே என்று இரு" என்னும் மகா வாக்கியம் இதனையே விளக்கி நிற்கின்றது. சக்தியின் மூலமாகவே எல்லாம் நடக்கிறது. ஆகவே, சக்தியின் பெருமை சொல்லில் அடங்காது. சக்தியே இவ்வுலகின் மூச்சு என்னுமளவுக்கு இன்றியமையாததாக அது விளங்குகிறது என்பது மட்டும் உண்மை.

இது ஒரு புறமிருக்க, இவ்வுலகில் அனைத்தையும் அதாவது எல்லாவற்றையும் பெண்ணாக உருவகித்துப் பார்ப்பது நம் முன்னோர் வழக்கமாக இருந்து வந்திருக்கிறது. கல்விக்கு சரஸ்வதிதேவியையும் செல்வத்துக்கு மகாலக்சுமிதேவியையும் வீரத்திற்கு துர்க்காதேவியையும் வேண்டி வழிபாடியற்றுவதைக் காணக் கூடியதாக இருக்கின்றது.

நாம் நடமாடும் நிலத்தைக் கூட பூமாதேவி என்று பெண்ணாகவே கருதுகின்றோம். நித்திரையைக் கூட நித்திராதேவி என்றுதான் அழைக்கின்றோம். அத்துடன் அம்பாளுக்குரிய இந்த ஆடிப்பூரமும் ஆடி மாதத்திலேயே அமைந்திருக்கின்றது ஒரு தனி விசேட மாகும்.

ஆடி மாதம் வந்துவிட்டால் தொடர்ந்து விரதங்களும் விழாக்களும் வரத்துவங்கி விடும். ஆடிப்பிறப்பு, ஆடிப் பூரம், ஆடிச் செவ்வாய், ஆடி அமாவாசை, ஆடிவேல் விழா என்று எல்லாமே சைவ சமயிகளுக்கு விசேட தினங்களாகும்.

"பூத்தவளே! புவனம் பதின்னான்கையும் பூத்த வண்ணம் காத்தவளே!" என்கிறார் அபிராமிப்பட்டர். நம்மையெல்லாம் காத்து ரட்சிக்கின்றவள் தாய்க்குத் தாயாக விளங்கும் அம்பிகையாவாள். "அம்பிகையைச் சரண்புகுந்தால் அதிகவரம் பெறலாமே" என்றபடி ஆடிப்பூர நன்னாளிலே அம்பாளைச் சிந்தித்து வந்தித்துச் சேவித்து நின்றால் சகல சௌபாக்கியங்களும் கைவரப் பெறலாம்.

இந்த ஆடிப் பூர நாளிலே அம்பாளுக்குப் "பூரகர்மம்" என்று சொல்லப்படுகின்ற பூப்புப் புனித நன்னீராட்டு விழா மிகச் சிறப்பாக நடைபெறுகின்றது. அம்பிகை ஆலயங்களிலே ஆடிப்பூரம் மிக விசேடமாகும். ஆடிப்பூர நன்னாளிலே அம்பிகையைப் பணிந்து ஆராதித்தால் அனைத்து நன்மைகளும் எம்மை நாடித் தேடி ஓடி வரும். தம்மை நினைத்து சிந்தையால் பக்தி செய்து வழிபடும் அடியார்களின் அல்லல் தீர்த்து அருள்புரியும் ஆடிப்பூரம் மிகச் சிறந்த நன்மைகளைத் தரும் அதி உன்னத அற்புதத் திருநாளாகும்.

இப் பரந்த நிலவுலகின் கண்ணே தாய்தான் எமது கண்கண்ட தெய்வமாகும். "தாயிற் சிறந்தொரு கோயிலும் இல்லை" என்பது முதுமொழி. அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம் என்ற வகையிலே பத்து மாதம் சுமந்து பெற்றவள் தாய். அப்பேற்பட்ட தாயை நாம் தெய்வமாகப் போற்றி வழிபாடு செய்தல் வேண்டும். ஆகவே ஆடிப்பூரம் என்ற அற்புதமான அதி மகோன்னத நன்னாளிலே அம்பிகை வழிபாடுதான் உய்யும் வழியாகும்.

இவ்வுலகிலே ஆகும் வழி, சாகும் வழி என்று இரண்டு வழி உண்டு. அதிலே ஆன்ம ஈடேற்றம் கண்டு உலக சிற்றின்பங்களை மறந்து உய்யும் வழியே ஆகும் வழியாகும். அன்னையின் அன்னையாக விளங்குகின்ற ஆதிபராசக்தியான அம்பிகையானவள், வேண்டுவார் வேண்டுவதை ஈபவளாகத் திகழ்கின்றாள். அந்த அம்பிகையைக் காதலாகிக் கசிந்து கண்ணீர் மல்கி வழிபடும் நெறிதான் ஆகும் வழி. அதுவே ஆடிப்பூர வழிபாடியற்றும் உய்யும் வழி.

"தனம் தரும் கல்வி தரும் ஒரு நாளும் தளர் வறியா மனம் தரும். தெய்வ வடிவும் தரும். நெஞ்சில் வஞ்சமில்லா இனந்தரும். நல்லன எல்லாம் தரும். அன்பர் என்பவர்க்கே கனந்தரும் பூங்குழலாள் அபிராமி கடைக் கண்களே" என்பது பாட்டு. ஆகவே இந்த ஆடிப்பூர நாளிலே அம்பிகையின் கடைக்கண் பார்வை எமக்குக் கிடைக்குமேயாயின் அதுவே பெரும் புண்ணியப் பேறாகும். ஆடிப்பூர நன்னாளிலே அம்பிகை தரிசனம் கோடி நன்மைகளை அள்ளித் தரும் அற்புத நிகழ்வே.

"தெய்வத் தமிழ்ச் சுடர்"
- இராசையா ஸ்ரீதரன் -

காலைக்கதிர் Kalaikkathir



**உலக யானைகள் தினம் நேற்றாகும்**

# காடுகள் செழிக்க காரணம் யானைகளே!



உலகில் இதுவரை 22 வகை யானை இனங்கள் அழிந்து விட்டன என அதிர்ச்சி தகவல் வெளியாகி உள்ளது.

ஆதிகாலத்தில் 24 வகை யானைகள் வாழ்ந்துள்ளன. தற்போது, உலகில் ஆபிரிக்க, ஆசிய வகை யானைகள் மட்டுமே உள்ளன. ஆசிய யானைகள் 55,000 வரை இருக்கலாம் எனக் கூறப்படுகிறது.

இதில் இந்தியாவில் மட்டும் 32,000 யானைகளும், தமிழகத்தில் 3,750 யானைகள் உள்ளன என கடந்த ஆண்டு கணக்கெடுப்பில் தெரிய வந்துள்ளது. தற்போது யானைகள், அரியவகை விலங்குகள் பட்டியலில் உள்ளன. பிற்கால சந்ததிகள், யானைகளைப் பார்க்க, அவற்றைப் பாதுகாக்க வேண்டிய கடமை நமக்கு உள்ளது.

இதுகுறித்து கொடைக்கானல் மாவட்ட வன அலுவலர் வெங்கடேஷ் 'தி இந்து' செய்தியாளரிடம் கூறியது:

தரைவாழ் விலங்குகளில் யானை தான் மிகப்பெரியது. தும்பிக்கை வடிவில் மூக்கை பெற்றுள்ள ஒரே விலங்கும் யானைதான். யானைகள் சமூக வாழ்க்கை முறை கொண்ட விலங்கு



ஆகும். யானைக் கூட்டத்துக்கு தலைவர் கிடையாது. தலைவி மட்டும்தான் உண்டு. பெண் யானைதான் தலைவியாக இருந்து, யானைகள் கூட்டத்தை வழிநடத்திச் செல்லும். யானைகள் அதிகளவு தண்ணீர், உணவை உட்கொள்ளும். ஆகவே, தண்ணீர், உணவு அதிகமுள்ள காடுகளில் மட்டுமே யானைகள் வசிக்கும். யானைகளுக்கு காடு நல்ல வாழ்விடமாக அமைந்தால், அந்தக் காடு ஆரோக்கியமானதாக காணப்படும். அதனால், யானைகள் சுற்றுச்சூழலின் ஆரோக்கியத்தைக் காட்டும் அடையாளமாகக் கருதப்படுகிறது.

**மக்னா யானை**

தும்பிக்கையே யானையின் பலம். தும்பிக்கை மூலமே யானை சுவாசிக்கிறது. தண்ணீரையும், உணவையும் அதன் மூலம் தான் உட்கொள்கிறது. தும்பிக்கையாலேயே அதிக எடை கொண்ட பொருளை யானையால் எளிதாகத் தூக்க முடியும்.

**தந்தம் என்பது யானையின் பல்தான்**

தந்தத்தை யானையின் கொம்பு என நடைமுறையில் அழைக்கின்றனர். ஆனால், யானையின் மேல்வரிசை பற்களின் நீட்சிதான் தந்தம். ஒரு டன் எடையுள்ள பொருளையும், தந்தத்தால் தூக்க முடியும். அதனால், சண்டையின்போது யானை தந்தத்தைத் தான் முக்கிய ஆயுதமாகப் பயன்படுத்தும். தந்தம் இல்லாத ஆண் யானை, மக்னா யானை என அழைக்கப்படுகிறது. தும்பிக்கை மூலம் யானை வாசனை உணர்வுகளை அறிந்து கொள்கிறது. 1.5 கி.மீற்றருக்கு அப்பால் உள்ள மனிதனின் நடமாட்டத்தைக் கூட யானையால் அறிந்து கொள்ளமுடியும்.


யானைக்கு கேட்கும் சக்தி அதிகம். ஆனால், கண் பார்வை குறைவு. மூளையின் அளவு பெரியது என்பதால் யானைக்கு நினைவாற்றல் அதிகம் உண்டு. இந்த நினைவாற்றல் மூலமே யானைகள், பரந்த காட்டில் வழித்தடம் மாறாமல் சென்று திரும்புகின்றன. ஒரு யானை சராசரியாக 60 முதல் 70 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கிறது. யானைக்கு



தினசரி 200 முதல் 250 கிலோ உணவு தேவைப்படுகிறது. எனவே, ஒரு நாளில் மூன்றில் இரண்டு பங்கு நேரத்தை உணவைத் தேடுவதிலேயே செலவிடுகிறது. ஒரு நாளைக்கு 100, 150 முதல் 200 லீற்றர் தண்ணீர் வரை குடிக்கிறது. மனிதனைப்போல, யானை தினசரி தண்ணீரில் குளிக்கும் பழக்கத்தை கொண்டுள்ளது. இவ்வாறு அவர் தெரிவித்தார்.

**சுற்றுச்சூழலின் அடையாளம் யானை**

காட்டில், யானைகள் விதைகளை ஓரிடத்தில் இருந்து மற்றொரு இடத்துக்கு பரப்புகிறது. இதன்மூலம் மரங்கள், செடி, கொடிகள் அதிக அளவு வளர்ந்து, சோலைக் காடுகள் உருவாகக் காரணமாகிறது. காட்டில் பல்லுயிரினப் பெருக்கத்துக்கும் யானை வழிவகுக்கிறது. யானைகள் பல கி.மீ. தூரம் காட்டில் நடந்து



செல்வதால், புதிய வழிப்பாதைகள் காட்டில் உருவாகின்றன. நம் நாட்டில், காடுகளில் யானைகளே சாலைகள் உருவாகக் காரணம். யானை தும்பிக்கை மூலம் பூமிக்கடியில் இருக்கும் ஊற்றுத் தண்ணீரை எளிதில் கண்டு பிடிக்கும்.

யானை மண்ணை கிளறி கண்டு


**தும்பிக்கையே அதன் பலம்**

பிடிக்கும் ஊற்று தண்ணீரால் மற்ற விலங்குகளும் பயன்பெறுகின்றன.

யானைகளின் வாழ்விடங்களில் ஏற்படும் நாகரிக வளர்ச்சிப் பணிகள், காடுகளில் வெட்டப்படும் மரங்கள், அதிகரிக்கும் குவாரிகள், வழிப்பாதைகள் ஆக்கிரமிப்பு, தந்தத்துக்காக யானைகள் வேட்டையாடப்படுதல், காட்டில் கால்நடைகளை மேய்ச்சலுக்கு விடுதல், விறகு பொறுக்குதல் ஆகியவை யானைகள் அழிவுக்கு முக்கிய காரணங்களாகக் கருதப் படுகின்றன.

- வை. அன்ரனி செல்வராஜ்

**புள்ளிகளை இணைத்து உருவத்தை கண்டுபிடியுங்கள்**



## குப்பை பொறுக்குவதற்காக பணியமர்த்தப்பட்டுள்ள பறவைகள்



பிரான்ஸில் உள்ள தீம் பார்க் ஒன்று குப்பை பொறுக்குவதற்காக ஆறு புத்திசாலி பறவைகளை பணியமர்த்தி உள்ளது. அறு காகங்களுக்கு சிகரெட்டை பொறுக்கவும், குப்பைகளை அப்புறப்படுத்தவும் பயிற்சி அளிக்கப்பட்டு மேற்கு பிரான்ஸில் உள்ள புய் டு ஃபொ தீம் பார்க் கில் பணி அமர்த்தப்பட்டுள்ளது.

இவை அங்குள்ள குப்பைகளை அகற்றி குப்பை தொட்டியில் போடும். இதற்கு பரிசாக அதற்கு சிறப்பு உணவளிக்கப்படும். இந்த பூங்காவின் தலைவர் நிகோலஸ், பறவைகளை கொண்டு குப்பைகளை அகற்ற வேண்டும் என்பது மட்டும் நம் நோக்கமல்ல. இயற்கையே சூழலை நமக்கு சூழலியல் குறித்து பாடம் எடுக்கிறது என்பதை உணர்த்துவது தான் நம் நோக்கம் என்கிறார்.

## குழந்தைகளுக்கு தேன் கொடுக்கக்கூடாது ஏன் தெரியுமா?



தேன் எல்லோருக்கும் ஏற்ற ஓர் உணவு என சொல்வார்கள். ஆனால் அப்படிப்பட்ட தேனை சிறு குழந்தைகளுக்கு கொடுக்கக் கூடாது.

பூக்களிலிருந்து தேனை வண்டுகள் சேகரிக்கும் போது, அதன் மகரந்தத்தில் அதில் இருக்கும் கொல்ஸ்ட்ரீடியம் பொடுலினம் எனப்படும் சில பாக்டீரியாக்கள் இருக்கும்.

ஒரு வயதுக்கும் குறைவான குழந்தைகளுக்கு தேனை கொடுக்கும் போது இந்த பாக்டீரியாக்கள் குழந்தையின் உடல் சோர்வை உண்டாக்குவதோடு, மலச்சிக்கல், உடல் சோர்வாகி அழுதல், பால் குடிக்காமல் இருத்தல், ஆஸ்துமா, அலர்ஜி உள்ளிட்ட பிரச்சினைகளை கொண்டுவரும்.

இதனால் ஒரு வயதைக் கடந்த குழந்தைகளுக்கு மட்டும் தேனை கொடுப்பது சிறந்தது.

# முல்லை. நீரியல் வள திணைக்களம் முன்பாக திரளான மீனவர்கள் போராட்டம்





முல்லைத்தீவு, ஓக. 13

சட்டவிரோத தொழில்களை தடுத்து நிறுத்தி தமது மீன்பிடி தொழிலை சுதந்திரமாக மேற்கொள நடவடிக்கை எடுக்க கோரி கடந்த 2 ஆம் திகதி முதல் முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் முன்பாக மீனவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்

இந்நிலையில் நேற்று மத்திய அரசின் மீன்பிடி அமைச்சர் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்த நிலையில் மீனவர்கள் சுமார் ஆயிரம் பேர் முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் முன்பாக நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர். உரிய தீர்வு கிடைக்காவிட்டால் போராட்டம் தொடரும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர். (க – 81)

## தீவிர பொலிஸ் பாதுகாப்பில் நேற்று முல்லைத்தீவு மாவட்டச் செயலகம்

முல்லைத்தீவு, ஓக. 13

சட்டவிரோதமீன்பிடித்தொழில்களை தடுத்து நிறுத்துமாறு கோரி கடந்த 2 ஆம் திகதி முதல் முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் முன்பாக மீனவர்கள் தொடர் போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இந்நிலையில் நேற்றைய தினம் ஸ்ரீ லங்கா அரசின் மீன்பிடி அமைச்சர் தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் கலந்துரையாடல் ஒன்று இடம்பெற் ற நிலையில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோரைக்கொண்ட மீனவக் குடும்பங்கள் முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வள திணைக்களம் முன்பாக போராட்டத்தில் ஈடுபட்டனர்.

தமக்கு உரிய தீர்வு கிடைக்காவிட்டால் போராட்டம் தொடருமென அவர்கள் தெரிவிக்கின்றனர்.

இதேவேளை இந்த கலந்துரையாடலில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம் ஏ சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, டக்ளஸ் தேவானந்தா, மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வடமாகாண மீன்பிடி அமைச்சர் க.சிவநேசன், வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன் மற்றும் மீன்பிடி திணைக்கள பணிப்பாளர், திணைக்கள தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், மீனவ அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

மாவட்ட செயலகத்தில் இந்தக் கலந்துரையாடல் இடம் பெற்ற நிலையில், மாவட்ட செயலகத்துக்கு பொலிஸாரால் நேற்று விசேட பாதுகாப்பு வழங்கப்பட்டது.

## சபாநாயகர் பதவியை வகிப்பதற்கு கருஜயசூரியவுக்கு தகுதியில்லை!

### சாடுகிறார் திஸ்ஸ விதாரண

நாளாளுமன்றத்தில் பக்கசார்பாகவும் கூட்டு எதிர்க்கட்சியினால் முன்வைக்கப்படும் நன்மையான விடயங்களை கூட புறக்கணித்து அரசின் மீதான தனது விசுவாசத்தை வெளிப்படுத்தி வருவதனால் சபாநாயகர் பதவியை வகிப்பதற்கு கருஜயசூரியவுக்கு தகுதியில்லையென பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

தேர்தலை பழைய முறையிலேயே நடத்தப்போவதாக தற்போது அறிவித்துள்ளனர். இதுவும் மாகாணசபைத் தேர்தலை பிற்போடுவதற்காக அரசாங்கத்தால் கையாளப்பட்ட தந்திரோபாயமே ஆகும். மீண்டும் பழைய முறைக்குச் செல்லவதென்றால் எல்லை நிர்ணயம் தொடர்பான சிக்கல்களும் ஏற்படும். அவற்றை சரி செய்ய இன்னும் காலம் எடுக்கும். எவ்வாறிருப்பினும் எந்த முறையில் தேர்தல் நடத்தப்பட்டாலும் அதற்கு முகங்கொடுப்பதற்கு பொது எதிரணி தயாராகவே உள்ளது.

கூட்டு எதிர்கட்சியால் கொழும்பில் முன்னெடுக்கப்பட்ட அரசுக்கு எதிரான போராட்டத்திற்கு சீன நிதி வழங்கியதாக சில அரச தரப்பினர் கருத்துக்களை முன்வைத்து வருகின்றனர். சீனா ஒரு கம்யூனிஸ்ட் நாடாகும். எனவே அந்நாடு வேறு எந்த நாட்டினதும் உள்ளக விடயங்களில் தலையிடுவதில்லை. ஆனால் தற்போது பிரித்தானியா மற்றும் அமெரிக்கா ஆகிய நாடுகள் இலங்கையின் அனைத்து உள்ளக விடயங்களிலும் தலையிடுகின்றன. இதற்கு அரசு என்ன பதிலளிக்கும்? என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## களுதாவளையில் காணி உறுதி வழங்கும் நிகழ்வு





காணி சீர்திருத்த ஆணைக் குழுவினால் ஏற்பாடு செய்யப்பட்ட காணி உறுதி வழங்கும் நிகழ்வு களுதாவளையில் நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வு காணி சீர்திருத்த அதிகாரசபையின் மட்டக்களப்பு, திருகோணமலை மாவட்டங்களின் பணிப்பாளர் நே.விமலராஜ் தலைமையில் களுதாவளை பிள்ளையார் ஆலய கலாசார மண்டபத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இடம் பெற்றுள்ளது. இதில் காணி சீர்திருத்த ஆணைக்குழுவின் தலைமை அலுவலக செயற்திட்ட பணிப்பாளர் நிஹால் விஜேதுங்க, நில அளவை பணிப்பாளர் துசார வன்னிநாயக்க, களுதாவளை கிராம சேவையாளர், கிராம தலைவர்கள் உட்பட பலரும் கலந்துகொண்டிருந்தனர்.

இதன்போது பலருக்கு காணி உறுதிகள் வழங்கி வைக்கப்பட்டதுடன், எதிர்வரும் 3 மாத காலத்திற்குள் சுமார் 1000 காணி உறுதிகளை வழங்கும் நிகழ்வு இதே மண்டபத்தில் மிக விரைவில் நடைபெறும் என மாவட்ட பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

## நீரேரியை முற்றுமுழுதாக ஆக்கிரமித்துள்ள தாவரம்!

காரைதீவின் மத்தியில் ஊடறுத்துச் செல்லும் நீரேரியில் ஐக்கோனியா நீர்த்தாவ ரம் நிறைந்து அழுகத் தொடங் கியிருப்பதனால் தாம் அசௌ கரியத்தை எதிர் நோக்கியுள் ளோம் என பொதுமக்கள் தெரி விக்கின்றனர்.

காரைதீவுக்கான நிலக்கீழ் நீரை தங்குதடையின்றி வழங் குகின்ற குறித்த நீரேரியில் நிறைந்துள்ள ஐக்கோனியா நீர்த்தாவரம் நீரேரி முழுவதையும் ஆக்கிரமித்துள்ளது.

எனினும் கடந்த மாதங்க ளில் பச்சைப்பசேல் என காணப்பட்ட அந்த தாவரங்கள் தற் போது வாடிக் கருகி அழுகத் தொடங்கியுளன.

இதனால் நீரேரியின் இரு மருங்கிலும் உள்ள குடியிருப்புகளில் வசிப்போர் பெரும் சுகாதாரப் பிரச்சினையை எதிர் கொண்டுள்ளனர்.

இது தொடர்பாக கடந்த வாரம் நாடாளுமன்ற உறுப்பி னர் கோடீஸ்வரன் தலைமை யில் இடம்பெற்ற காரைதீவுப் பிரதேச ஒருங்கிணைப்பு குழுக் கூட்டத்திலும் தெரிவிக்கப்பட்டது என மக்கள் சுட்டிக்காட்டியுள்ளனர்.

## புத்தளம் கடற்கரைப் பகுதியில் கரையொதுங்கிய ஆயிரக்கணக்கான மருத்துவ கழிவுப் பொருள்கள்





இலங்கையின் புத்தளம் கடற்கரைப் பகுதியில் ஆயிரக்கணக்கான மருத்துவ கழிவுப் பொருள்கள் கரையொதுங் கியுள்ளன என இந்திய ஊடகமொன்று நேற்று செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த இரண்டு நாள்களாக காலாவதியான மருந்துகள், மருந்து போத்தல்கள், பொலித்தீன் பைகள் மற்றும் ஊசிகள் போன்ற கழிவுப் பொருள்கள் பெருமளவில் கரையொதுங்கி வருகின்றன எனச் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை இந்தப் பொருள்கள் அனைத்தும் காலாவதியானவை எனவும், அவை இந்திய உற்பத்தி பொருட்கள் எனவும் தெரியவருகிறது.

மேலும், இவை காலாவதியாகியதால் கடலில் கொட்டப்பட்டிருக்கலாம் என புத்தளம் மீன்வளத்துறை அதிகாரிகள் சந்தேகம் வெளியிட்டுள்ளனர்.

இதேவேளை இந்த மருத்துவ கழிவுப் பொருள்கள் கடலில் கொட்டப்பட்டமை அபாயகரமானதாகும் எனவும் அவர்கள் தெரிவித்துள்ளனர்.

# சீனாவில் மசூதி இடிக்கப்படுவதை தடுக்க முஸ்லிம் மக்கள் உள்ளிருப்பு போராட்டம்!



பீஜிங், ஒக.13

சீனாவில் தன்னாட்சி உரிமை பெற்ற நிங்சியா பகுதியில் கட்டப்பட்டுள்ள மசூதியை இடிப்பதில் இருந்து காப்பாற்ற பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் ஆண், பெண்கள் உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

சீனாவில் சுமார் 2 கோடி முஸ்லிம்கள் வாழ்ந்து வருகின்றனர். இவர்களில் சீன வம்சாவளியினரான ஹுய் எனப்படும் முஸ்லிம் பிரிவை சேர்ந்தவர்கள் 1 கோடி பேரும், துருக்கி வம்சாவளியைச் சேர்ந்தவர்களாக கருதப்படும் உய்குர் பிரிவைச் சேர்ந்த முஸ்லிம்கள் 1 கோடி பேரும் அடங்குவர்.

இவர்கள் வழிபாட்டுக்காக நாடுமுழுவதும் பிரம்மாண்டமான பல மசூதிகள் உள்ளன. அவற்றில் தன்னாட்சி உரிமை பெற்ற நிங்சியா பகுதியில் உள்ள உசோங் நகரில் இருக்கும் பழம்பெருமை வாய்ந்த வெய்சூங் பெரிய மசூதியும் ஒன்றாகும்.

இந்த மசூதியை புணரமைக்கும் பணிகள் கடந்த 2015 ஆம் ஆண்டு தொடங்கின. தற்போது பணிகள் நிறைவடைந்து புதுப்பொலிவுடன் கம்பீரமாக காட்சியளிக்கும் இந்த மசூதியின் உச்சியில் உள்ள கோபுரங்கள் (மினாராக்கள்) தொடர்பாக உள்ளாட்சித்துறை அதிகாரிகளுக்கும் மசூதி நிர்வாகிகளுக்கும் இடையே மோதல் எழுந்துள்ளது.

இந்த மினாராக்கள் சீன கட்டட வடிவமைப்பின்படி இல்லாமல், மத்திய கிழக்கு நாடுகளில் உள்ள மசூதிகளின் கட்டட வடிவமைப்புபோல் காணப்படுவதால் இவற்றை இடித்துவிட்டு, சீன பாரம்பரிய கட்டடக் கலையின்படி மாற்ற அதிகாரிகள் முடிவெடுத்தனர். இந்த முடிவுக்கு எதிராக நிங்சியா பகுதியில் வாழும் முஸ்லிம்கள் கொதித்து எழுந்தனர்.

கடந்த வியாழனன்று இந்த மசூதியை இடிப்பதற்கு அதிகாரிகள் தயாரான நிலையில், தங்களது வீடுகளில் இருந்து வெளியேறிய பல்லாயிரக்கணக்கான முஸ்லிம் ஆண், பெண்கள் மசூதி வளாகத்தை முகாமிட்டனர். அவர்களில் பலர் மசூதிக்குள் அமர்ந்தபடி, உள்ளிருப்பு போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தொடர்ந்து 3 ஆவது நாளாக நடைபெற்று வரும் இந்த முற்றுகை போராட்டம் இன்னும் பல நாட்களுக்கு நீடிக்கலாம் என சீன ஊடகங்கள் செய்தி வெளியிட்டு வருகின்றன. மிகப்பெரிய அடுப்புகள், சமையல் பாத்திரங்கள் மற்றும் சமையலுக்கு தேவையான உணவுப்பொருள்கள் பெரிய அளவில் அங்கு கொண்டு செல்லப்படுகின்றமையை மேற்கோள்காட்டி இந்தச் செய்திகள் குறிப்பிடுகின்றன.

தற்போது மசூதியில் அமைக்கப்பட்டுள்ள மினராக்களை அகற்றிவிட்டு வேறு மாதிரியான கட்டுமானம் மேற்கொள்வதற்கு போராட்டக்காரர்கள் சம்மதிக்கவில்லை. இந்த மினராக்களை இடித்துவிட்டால் இஸ்லாமியர்களின் வழிபாட்டுத்தலம் என்பதற்கான அடையாளமே இல்லாமல் போகும் என அவர்கள் குறிப்பிடுகின்றனர் என அந்தச் செய்திகள் தெரிவிக்கின்றன.

## ஜோர்டானில் பொலிஸார் தாக்குதல்; அப்பாவி பொதுமக்கள் 3 பேர் பலி!



அம்மான், ஒக.13

ஜோர்டான் தலைநகர் அம்மானில் பொலிஸார் நடத்திய தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 3 பேர் பரிதாபமாக பலியாகினர்.

மத்திய கிழக்கு நாடுகளில் ஒன்று ஜோர்டான். இதன் தலைநகர் அம்மான். இங்கு கடந்த வெள்ளிக்கிழமை பாதுகாப்பு பணியில் ஈடுபட்டிருந்த பொலிஸார் மீது பயங்கரவாதிகள் நாட்டு வெடிகுண்டுகளை வீசி திடீர் தாக்குதல் நடத்தினர். இந்தத் தாக்குதலில் ஒரு பொலிஸார் பலியானார்.

இதையடுத்து, பொலிஸார் அம்மானில் உள்ள சால்ட் நகரில் பயங்கரவாதிகளை தேடும் பணியில் ஈடுபட்டனர். அப்போது ஒரு வீட்டில் பயங்கரவாதிகள் பதுங்கி இருப்பதாக கருதி, அங்கு தாக்குதல் நடத்தினர்.

இந்த தாக்குதலில் அப்பாவி பொதுமக்கள் 3 பேர் பரிதாபமாக பலியாகினர்.

## இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற இந்தோ - கரீபியன் எழுத்தாளர் காலமானார்!

லண்டன், ஒக.13

இலக்கியத்துக்கான நோபல் பரிசு பெற்ற இந்தோ – கரீபியன் எழுத்தாளர் வி.எஸ் நைபால் லண்டனில் வயோதிகம் காரணமாக காலமானார்.



கரீபியன்தீவில் ஒன்றான டிரினாட் நகரில் 1932 ஆம் ஆண்டு பிறந்த வி.எஸ் நைபாலின் முழுப்பெயர் சர் விதியாதர் சுராஜ்பிரசாத் நைபால் என்பதாகும். இவரது தந்தை சீபிரசாத் நைபாலின் பெற்றோர் இந்தியாவில் இருந்து அங்கு குடியேறியவர்கள் ஆவர்.

பிரிட்டனில் உள்ள ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகத்தில் ஆங்கில இலக்கியம் படித்துள்ள நைபால், 30இற்கும் மேற்பட்ட புத்தகங்களை எழுதியுள்ளார். 1971 ஆம் ஆண்டு 'இன் ஏ ப்ரீஸ்டேட்' என்ற புத்தகத்துக்காக அவருக்கு புக்கர் விருது வழங்கப்பட்டது.

2001 ஆம் ஆண்டு 'ஏ ஹவுஸ் பார் மிஸ்டர். பிஸ்வாஸ்' என்ற புத்தகத்துக்காக அந்தாண்டு நோபல் பரிசு நைபாலுக்கு வழங்கப்பட்டது.

இந்தியாவில் இருந்து கரீபியன் நாட்டில் குடியேறிவர்களை பற்றி இந்த புத்தகம் பேசியது. இந்நிலையில், 85 வயதான அவர் லண்டனில் உள்ள தனது வீட்டில் நேற்று முன்தினம் காலமானார் என அவரது குடும்பத்தினர் கூறியுள்ளனர். நைபாலின் மறைவுக்கு சர்வதேச அளவிலான பல எழுத்தாளர்கள் இரங்கல் தெரிவித்துள்ளனர்.

## ஆப்கானிஸ்தானில் கஜினி நகரத்தை உரிமை கொண்டாடும் தலிபான்கள்!

காபூல், ஒக.13

ஆப்கானிஸ்தானில் உள்ள கஜினி நகரத்துக்கு தலிபான்கள், ஆப்கானிஸ்தான் அரசு என இரு தரப்பினரும் உரிமை கொண்டாடுகின்றனர்.

ஆப்கானிஸ்தான் நாட்டில் அரசு படைகளுக்கும், தலிபான் பயங்கரவாத அமைப்பினருக்கும் தொடர்ந்து 18 ஆவது ஆண்டாக உள்நாட்டுப்போர் நடந்துவருகிறது.

இந்தநிலையில் அங்கு கஜினி மாகாணத்தின் தலைநகரமான கஜினி நகரத்தை பிடிப்பதற்கு கடந்த 9 ஆம் திகதி இரவில் தலிபான்கள் களத்தில் இறங்கினர். அவர்களை எதிர்த்து ஆப்கானிஸ்தான் படையினரும் மோதினர். இரு தரப்பினருக்கும் இடையே கடுமையான துப்பாக்கிச்சண்டை நடந்தது. தலிபான்களை குறிவைத்து வான் தாக்குதலும் நடத்தப்பட்டது. இதில் இரு தரப்புக்கும் பலத்த உயிர்ச்சேதங்கள் ஏற்பட்டன.

இப்போது கஜினி நகரத்துக்கு தலிபான்கள், ஆப்கானிஸ்தான் அரசு என இரு தரப்பினரும் உரிமை கொண்டாடுகின்றனர்.



இதுபற்றி ஆப்கானிஸ்தான் நாட்டின் எம்.பியான சாகுல் ரெஜாயி கூறும்போது– காபூலில் உள்ள மத்திய அரசு அதிகாரிகள் கஜினி நகரம் அரசின் வசம் உள்ளதாக கூறுகின்றனர். ஆனால் கஜினி நகரத்தில் உள்ள அதிகாரிகளை நாங்கள் தொடர்பு கொண்டால் அவர்கள் இன்னும் சண்டை நடந்து கொண்டு இருக்கிறது என்று கூறுகிறார்கள். அங்கு படைகள் குவிக்கப்பட்டு உள்ளன. அமெரிக்கா தாக்குதல் ஹெலிகொப்டர்களை களத்தில் இறக்கி உள்ளது. ஆளில்லா விமானத் தாக்குதலும் நடத்தப்பட்டுள்ளது என்று குறிப்பிட்டார்.

ஆனால் தலிபான்கள் கஜினி நகரம் தங்கள் வசம் வந்து விட்டதாக கூறுகின்றனர். இதுபற்றி தலிபான்களின் செய்தி தொடர்பாளர் ஜபிகுல்லா முஜாகித் கூறுகையில்–

கஜினி நகரத்தை எங்கள் வீரர்கள் முழுமையாக வெற்றி கொண்டு விட்டார்கள். ஆயுதங்கள், வெடிபொருள்கள், வாகனங்களை கைப்பற்றி உள்ளனர். கஜினி நகரத்தை எங்கள் வீரர்கள்தான் பாதுகாத்து வருகின்றனர் என்று குறிப்பிட்டார்.

# பாகிஸ்தான் ராணுவ வீரர்களுக்கு போர் பயிற்சி திடீரென திட்டத்தை நிறுத்தியது அமெரிக்கா!

வொஷிங்டன், ஒக.13

அமெரிக்காவில் பாகிஸ்தான் ராணுவ வீரர்களுக்கு போர் பயிற்சி அளித்துவரும் திட்டத்துக்கு ட்ரம்ப் அரசு முற்றுப்புள்ளி வைத்துள்ளது என தகவல்கள் வெளியாகியுள்ளன.

அமெரிக்காவின் மிகப்பெரிய ராணுவ கூட்டாளியாக இந்தியாவை அமெரிக்க அரசு கடந்த 2016 ஆம் ஆண்டில் அறிவித்தது.

இந்நிலையில், அந்நாட்டின் தேசிய பாதுகாப்புத் துறை அங்கீகார பிரேரணைக்கு (2019) ஒப்புதல் அளிக்க அமெரிக்க நாடாளுமன்ற மேல்சபையில் கடந்த 18-6-2018 அன்று வாக்கெடுப்பு நடந்தது. 71 ஆயிரத்து 600 கோடி டொலர்கள் மதிப்பிலான இந்த பிரேரணையை ஆதரித்து 85 உறுப்பினர்களும், எதிராக 10 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

நாடாளுமன்ற காங்கிரஸ் சபையிலும் இரு சபைகளின் கூட்டுக் குழுவிலும் ஒப்புதல் பெற்று ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் கையொப்பமிட்டதும் சட்டவடிவம் பெறும் பிரேரணையில் அமெரிக்காவின் மிகப்பெரிய ராணுவ கூட்டாளியான இந்தியாவுடனான ராணுவ உறவுகளை பலப்படுத்தும் பல சிறப்பம்சங்கள் இடம்பெற்றுள்ளன.

இதற்கிடையில், ஆப்கானிஸ்தான் விவகாரத்தில் ஏற்பட்ட கருத்து வேறுபாடு காரணமாக பாகிஸ்தான் அரசுக்கு அளித்து வந்த உள்நாட்டு பாதுகாப்பு நிதியை ரத்து செய்து அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் உத்தரவு பிறப்பித்தார்.



எனினும், அமெரிக்க அரசின் சார்பில் நடத்தப்படும் சர்வதேச ராணுவ பயிற்சி பள்ளியில் பாகிஸ்தானை சேர்ந்த ராணுவ வீரர்களுக்கு போர் பயிற்சி அளிக்கும் திட்டம் கைவிடப்பட மாட்டாது என அறிவிக்கப்பட்டிருந்தது.

அமெரிக்காவில் கடந்த 1960 ஆம் ஆண்டில் இருந்து இயங்கி வரும் இந்த சர்வதேச ராணுவ பயிற்சி பள்ளியில் வழக்கமாக ஆள்சேர்ப்பின்போது பாகிஸ்தானை சேர்ந்த 66 வீரர்களுக்கு இடம் அளிக்கப்பட்டு வந்தது. இந்நிலையில், அடுத்த ஆண்டில் நடைபெறும் ஆள்சேர்ப்பில் பாகிஸ்தான் வீரர்கள் பயிற்சி பெறுவதற்கு நிதி அளிக்க ட்ரம்ப் அரசு மறுத்து விட்டது என தெரியவந்துள்ளது.

பாகிஸ்தானுக்கு முன்னர் ஒதுக்கப்பட்ட 66 இடங்களை வேறு நாட்டினருக்கு வழங்க அமெரிக்க ராணுவ தலைமையக அதிகாரிகள் முடிவெடுத்துள்ளனர் என தகவல் வெளியாகியுள்ளது. இந்த தகவலை பாகிஸ்தான் நாட்டின் பிரபல நாளிதழும் உறுதிப்படுத்தியுள்ளது.

பாகிஸ்தான் முன்னாள் ராணுவ தளபதியும், ஜனாதிபதியுமான பர்வேஸ் முஷாரப், பாகிஸ்தான் உளவுத்துறையான ஐ.எஸ்.ஐ. தலைவர் நவீத் முக்தார் உள்ளிட்ட பலர் அமெரிக்க அரசின் சார்பில் நடத்தப்படும் இந்த சர்வதேச ராணுவ பயிற்சி பள்ளியின் முன்னாள் மாணவர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

# தி.மு.கவில் முக்கிய பதவியை கேட்கின்றார் மு.க. அழகிரி!

சென்னை, ஒக.13

தி.மு.க.வில் மாநில அளவிலான பதவி வேண்டும் என்று மு.க. அழகிரி கேட்கிறார் என்றும் இது குறித்து பொதுக்குழுவில் இறுதி முடிவு எடுக்க வாய்ப்பு இருக்கிறது என்றும் தகவல்கள் வெளியாகியுள்ளன.

தி.மு.க. தலைவர் கருணாநிதி மரணம் அடைந்தமையால் புதிய தலைவர் மற்றும் நிர்வாகிகளை நியமிப்பது பற்றி ஆலோசனை நடத்த தி.மு.க.வின் அவசர செயற்குழு கூட்டம் சென்னையில் நாளைமறுதினம் நடைபெறுகிறது.

தி.மு.க.வின் தென் மண்டல அமைப்புச்செயலாளராக இருந்த முன்னாள் மத்திய அமைச்சர்



மு.க.அழகிரிக்கு மீண்டும் பதவி அளிக்கப்படுமா? என்ற எதிர்பார்ப்பு எழுந்துள்ளது. அவர் ஏற்கனவே கட்சி பொறுப்பில் இருந்தும் உறுப்பினர் பொறுப்பில் இருந்தும் நீக்கப்பட்டுள்ளார்.

அவருக்கு மீண்டும் கட்சி பொறுப்பு வழங்க வேண்டும் என்று தி.மு.க.வின் ஒரு பிரிவினர் விரும்புகிறார்கள்.

ஜெயலலிதா மறைவுக்கு பிறகு அ.தி.மு.க.வில் ஏற்பட்ட பிளவு போல தி.மு.க.வில் எந்த பாதிப்பும் ஏற்பட்டுவிடக்கூடாது என்று தி.மு.க. மேலிடத் தலைவர்களும், கருணாநிதியின் குடும்பத்தினரும் விரும்புகிறார்கள்.

அதனால் மு.க.அழகிரியை மீண்டும் கட்சி பணிக்கு கொண்டு வரவும், அவருக்கு ஏற்கனவே வழங்கிய தென் மண்டல அமைப்பு செயலாளர் பதவியை மீண்டும் கொடுக்க வேண்டும் என்றும் வற்புறுத்துகிறார்கள்.

ஆனால் மு.க.அழகிரி அந்த பொறுப்பை பெற விரும்பவில்லை என்றும், மாநில அளவிலான பதவி வேண்டும் என்று கேட்பதாகவும் தெரிகிறது.

தி.மு.க. மாவட்டச்செயலாளர்கள் மற்றும் அனைத்து பொறுப்புகளிலும் உள்ள நிர்வாகிகள், தொண்டர்களின் பிரச்சினைகளை நேரடியாக ஆய்வு நடத்தும் அதிகாரம் இருந்தால் தான் தனக்கு கௌரவமாக இருக்கும் என்று அவர் விரும்புகிறார் எனத் தெரிகிறது.

இந்தப் பொறுப்பை வழங்கினால் விரைவில் வர உள்ள திருவாரூர், திருப்பரங்குன்றம் சட்டமன்ற இடைத்தேர்தல்களில் தி.மு.க. வெற்றி பெறுவதற்கான அனைத்து வியூகங்களையும் முன்னின்று எடுக்க தயாராக இருக்கிறோம் என மு.க.அழகிரி தரப்பில் கூறப்படுகிறது.

மு.க.அழகிரியின் விருப்பம் குறித்து பேச்சு நடந்து வருவதாக கூறப்படுகிறது.

மு.க.அழகிரி ஒதுங்கி இருக்காமல் கட்சி வளர்ச்சிக்கு பாடுபட வேண்டும். அதற்குரிய பதவி அவருக்கு வழங்கப்பட வேண்டும் என்று கருணாநிதியின் குடும்பத்தினரும் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இதனால் மு.க.அழகிரிக்கு விரைவில் பதவி வழங்கப்படலாம் என்று அவரது ஆதரவாளர்கள் நம்பிக்கையில் உள்ளனர்.

இது குறித்து செயற்குழுவில் ஆலோசனை நடத்தப்பட்டாலும் பொதுக்குழுவில் தான் இறுதி முடிவு எடுக்க வாய்ப்பு இருக்கிறது என்றும் தெரிவிக்கப்படுகிறது.

## நடிகர் விக்ரமின் மகன் கார் விபத்து; 3 ஒட்டோ சேதம்

சென்னை தேனாம்பேட்டையில் பொலிஸ் ஆணையாளர் இல்லம் அருகே நடிகர் விக்ரம் மகனின் கார் மோதியதில் 3 ஓட்டோக்கள் சேதமடைந்துள்ளன என தகவல்கள் வெளியாகியுள்ளன.

நடிகர் விக்ரமின் மகன் துருவ், தற்போது பாலா இயக்கத்தில் ஒரு படத்தில் நடித்து வருகிறார். இந்நிலையில், சென்னை தேனாம்பேட்டையில் பொலிஸ் ஆணையாளர் இல்லம் அருகே அவர் சென்ற கார் விபத்துக்குள்ளாகியுள்ளது. இந்த விபத்தில், அங்கிருந்த 3 ஓட்டோக்கள் சேதமடைந்தன எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

விபத்துக்குள்ளான காரில் துருவ் உட்பட 3 பேர் இருந்துள்ளனர். இந்த விபத்து குறித்து பொலிஸார் விசாரித்து வருகின்றனர்.

## நாடாளுமன்ற தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெறுவோம்: பிரதமர் மோடி உறுதி!

கடந்த 2014 தேர்தலை விட வரும் நாடாளுமன்ற தேர்தலில் அதிக இடங்களில் வெற்றி பெறுவோம் என்று பிரதமர் மோடி கூறியுள்ளார்.

பிரதமர் நரேந்திர மோடி ஆங்கில பத்திரிகை ஒன்றுக்கு அளித்துள்ள பேட்டியில் தெரிவித்துள்ளவை வருமாறு –

ஒருவருக்கொருவர் அவநம்பிக்கை கொண்ட எதிர்க்கட்சிகள் எல்லாம் சேர்ந்து மெகா கூட்டணி அமைக்க முயற்சித்து வருகின்றன.

ஏற்கனவே அரசியல் நிர்ப்பந்தத்தின் அடிப்படையில் இது போன்ற கூட்டணிகள் அமைந்து அவை தோல்வியில் முடிந்துள்ளன.



இந்த கசப்பான அனுபவங்களை ஏற்கனவே மக்கள் பெற்று இருக்கிறார்கள். எனவே, மோடியை வெளியேற்ற வேண்டும் என்ற திட்டத்தில் அவர்கள் ஒன்றுசேர்வதை மக்கள் புறக்கணிப்பார்கள்.

எதிர்க்கட்சிகள் அமைக்கும் மெகா கூட்டணி மக்களிடம் எடுபடாது. அந்த கூட்டணி என்பது தோல்வி திட்டம். இதன் மூலம் அவர்கள் மக்களோடு கூட்டணியை ஏற்படுத்த முடியாது.

வருகிற நாடாளுமன்ற தேர்தலில் எங்களின் கொள்கை வளர்ச்சி, விரைவான வளர்ச்சி, அனைவருக்கும் வளர்ச்சி என்பதாக இருக்கும்.

நாங்கள் கடந்த 2014 நாடாளுமன்ற தேர்தலை விட வரும் தேர்தலில் இன்னும் கூடுதல் இடங்களை கைப்பற்றுவோம். பா.ஜனதா கூட்டணியில் இதுவரை பெற்ற இடங்களை விட அதிக இடங்களை பெற்று பழைய எங்கள் சாதனைகளை முறியடிப்போம் என்று அவர் தெரிவித்துள்ளார்.

## கருணாநிதி நினைவிடத்தில் அஞ்சலி செலுத்திய முத்து!



தி.மு.க. தலைவர் கருணாநிதியின் நினைவிடத்தில் அவரது மூத்த மகன் மு.க. முத்து நேற்று அஞ்சலி செலுத்தினார்.

தி.மு.க. தலைவர் கருணாநிதி உடல் நலக்குறைவு காரணமாக காவிரி மருத்துவமனையில் சிகிச்சை பெற்றுவந்த நிலையில், கடந்த 7.8.2018 அன்று உயிரிழந்தார். அவரது மறைவை ஏற்க முடியாத தமிழக மக்களும் தொண்டர்களும் மிகுந்த சோகத்தில் ஆழ்ந்தனர்.

இதையடுத்து, மெரினாவில் இருக்கும் பேரறிஞர் அண்ணாவின் நினைவிடத்தின் அருகே தி.மு.க. தலைவர் கருணாநிதி நல்லடக்கம் செய்யப்பட்டார். அவரது மறைவு அன்று நேரில் அவரை சந்தித்து அஞ்சலி செலுத்த முடியாத பிரபலங்களும், பொதுமக்களும் அவரது நினைவிடத்தில் தொடர்ந்து அஞ்சலி செலுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், தி.மு.க. தலைவர் கருணாநிதியின் மூத்த மகன் மு.க முத்து நேற்று கருணாநிதியின் உடல் நல்லடக்கம் செய்யப்பட்ட இடத்தில் நேரில் அஞ்சலி செலுத்தினார். கருணாநிதியின் முதல் மனைவியின் மகன் மு.க முத்து என்பது குறிப்பிடத்தக்கது.

## இம்ரான் ஆட்சியில் பயங்கரவாதம், வன்முறை இல்லாத நாடாக பாகிஸ்தான் திகழ வேண்டும்!



பாகிஸ்தான் பிரதமராக தேர்வு செய்யப்பட்டுள்ள இம்ரான்கான் ஆட்சியின் கீழ் பயங்கரவாதம் மற்றும் வன்முறை இல்லாத நாடாக திகழ வேண்டும் என பிரதமர் மோடி தெரிவித்துள்ளார்.

தலைநகர் டில்லியில் பிரதமர் நரேந்திர மோடி செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது பாகிஸ்தான் தொடர்பாக கேட்ட கேள்விக்கு அவர் பதிலளித்தார்.

இதுதொடர்பாக, அவர் கூறுகையில்– இந்தியாவும், பாகிஸ்தானும் நல்லநட்புறவை பேணும் நாடுகளாக இருக்க வேண்டும் என வலியுறுத்தி வருகிறேன். அதற்கான முன்முயற்சிகளை பல தடவை நாம் எடுத்து வந்துள்ளோம்.

சமீபத்தில் பாகிஸ்தானில் நடைபெற்ற தேர்தலில் இம்ரான்கான் கட்சி வெற்றி பெற்றதற்கு அவருக்கு வாழ்த்துக்களை தெரிவித்தேன். அவரது தலைமையின் கீழ் பாகிஸ்தான் பாதுகாப்புடனும், பயங்கரவாதம் மற்றும் வன்முறை இல்லாத நாடாக திகழ வேண்டும்.

பாகிஸ்தானுடன் பேச்சு நடத்த இந்தியா எப்போதும் தயாராக உள்ளது என தெரிவித்துள்ளார்.

## தமிழகத்தில் இசட் பிளஸ் பாதுகாப்பு முடிவுக்கு வந்தது!

முன்னாள் முதல்வர்களான ஜெயலலிதா, மு.கருணாநிதிக்கு இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. அவர்கள் கா மானதைத் தொடர்ந்து அவை திரும்பப்பெறப்பட்டுள்ளன. தற்போது தமிழகத்தில் யாருக்கும் இசட் பிளஸ் பாதுகாப்பு வழங்கப்படவில்லை என பொலிஸ் அதிகாரிகள் தரப்பில் தெரிவிக்கப் பட்டுள்ளது.

பாதுகாப்பு முக்கியத்துவம் கருதி முக்கிய தலைவர்களுக்கு இசட் பிளஸ், இசட், எக்ஸ், வை ஆகிய பிரிவுகளின் கீழ் பாதுகாப்பு வழங்கப்படுகிறது. குடியரசுத் தலைவர், துணை குடியரசுத் தலைவர், பிரதமர், நீதிபதிகள், மத்திய அமைச்சர்களுக்கு இசட் பிரிவு பாதுகாப்பு வழங்கப்பட்டுகிறது.

தவிர பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ள தனி நபர்களுக்கும் அவர்கள் தகுதிக்கு ஏற்ப பாதுகாப்பு அளிக்கப்படுகிறது. தேசிய பாதுகாப்பு படை கமாண்டோக்கள், டெல்லி பொலிஸார் அல்லது இந்தோ-திபெத் எல்லை பாதுகாப்புப் படையினர், மத்திய ரிசர்வ் பொலிஸ் படை வீரர்கள் பாதுகாப்புப் பணிக்காக நியமிக்கப்படுவர்.

விடுதலைப் புலிகளின் அச்சுறுத்தல் காரணமாக தமிழக முன்னாள் முதல்வர்கள் ஜெயலலிதா, மு.கருணாநிதிக்கு மத்திய அரசின் 'இசட் பிளஸ்' பாதுகாப்பு வழங்கப்பட்டிருந்தது. 2016 இல் ஜெயலலிதா காலமானதைத் தொடர்ந்து அவருக்கு வழங்கப்பட்டிருந்த 'இசட் பிளஸ்' பாதுகாப்பு விலக்கிக் கொள்ளப்பட்டது.

இந்நிலையில், தி.மு.க. தலைவராக இருந்த மு.கருணாநிதி கடந்த 7 ஆம் திகதி மறைந்தார். அதைத் தொடர்ந்து அவருக்கு வழங்கப்பட்டிருந்த இசட் பிளஸ் பாதுகாப்பும் திரும்பப்பெறப்பட்டது.

## கேரளாவுக்கு வெள்ள நிவாரணமாக ரூ.25 லட்சம் வழங்கினார் கமல்

கேரள அரசுக்கு வெள்ள நிவாரண நிதியாக ரூ.25 லட்சத்தை நடிகர் கமல்ஹாசன் வழங்கினார்.

கேரளாவில் வரலாறு காணாத வெள்ளம் ஏற்பட்டுள்ளது. பல மாவட்டங்கள் நீரில் மிதக்கின்றன. வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கேரள அரசு நிவாரணம் மற்றும் மீட்பு பணிகளை முடுக்கி விட்டுள்ளது.

இதற்கிடையில் கேரள அரசுக்கு வெள்ள நிவாரண நிதியாக நடிகர் கமல்ஹாசன் ரூ.25 லட்சம் வழங்கியுள்ளார். அதேபோன்று விஜய் டி.வி. நிர்வாகமும் ரூ.25 லட்சம் நிவாரண நிதியாக வழங்கியுள்ளது இப்பேரிடர் காலத்தில் அனைவரும், நமது சகோதரர்களுக்கு உதவ வேண்டும் என்று கமல் கேட்டுக் கொண்டுள்ளார்.

## அந்நியரிடம்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

முல்லைத்தீவு உடையார் கட்டுப் பகுதியில் பால் பதனிடும் தொழிற்சாலையை நேற்றுத் திறந்து வைத்து உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தனது உரையில் மேலும் தெரிவித்தவை வருமாறு–

இலங்கையின் வடபகுதியில் இடம்பெற்ற நீண்டகால யுத்தத்தின் இறுதி நாட்களில் மிகப் பெரிய அழிவுகளைச் சந்தித்த பிரதேசமாக இந்த முல்லைத் தீவுப் பிரதேசம் அடையாளம் காணப்பட்டுள்ளது. பல பகுதிகளில் இருந்தும் இப்பகுதிக்கு வந்து சேர்ந்த மக்களை ஒரு குறுகிய வட்டத்திற்குள் வலிந்து உள்ளே தள்ளி கொத்துக் கொத்தாக குண்டுகளை வீசியும்,இடி முழக்கம் போன்ற சத்தத்துடன் விமானக் குண்டுகளை வீசியும் மற்றும் எறிகணைத் தாக்குதல், துப்பாக்கிச் சன்னப் பிரயோகங்கள் எனப் பல முனைத்தாக்குதல்களினூடாகச் சுமார் ஒன்றரை லட்சத்திற்கும் மேலான மக்கள் ஒரே நாளில் கொன்றொழிக்கப்பட்டு இரத்தம் தோய்ந்த பூமியாக இந்த முல்லைத்தீவுப் பகுதி மாற்றப்பட்டது. அந்த அதிர்ச்சியில் இருந்து மீள முடியாத மக்கள் பலர் இன்றும் நடை பிணங்களாக எமது கண் முன்னே உலா வருவது எமக்கு இழைக்கப்பட்ட அநீதிகளின் உச்சவரம்புச் செயல்களுள் ஒன்றாகக் கொள்ளப்படலாம். போரின் வடுக்களை இன்றும் சுமந்து சென்று கொண்டிருப்பவர்கள் பலர்.

இந்தளவு துன்பங்களையும் தாங்கி எஞ்சியிருக்கும் எம் மக்களுக்கு ஏதாவது வகையில் உதவ வேண்டுமென மாகாண சபையும், புலம்பெயர்ந்த அமைப்புக்களும், பரோபகாரிகளும், பணம் படைத்தவர்களும் தனியாகவும் கூட்டு முயற்சியாகவும் பல அபிவிருத்தித் திட்டப் பணிகளை இந்தப் பகுதிகளில் மேற்கொண்டுவருவது மனதிற்கு சற்று இதமளிப்பதாக இருக்கின்றது. அந்த வகையில் திரு. தவசீலன் அவர்களும் சுமார் 10 கோடி ரூபா முதலீட்டில் இந்த பால் பதனிடும் தொழிற்சாலையை ஆரம்பித்து வைத்துள்ளார். இந்தத் தொழிற்சாலையில் நியமனங்களைப் பெறுவதன் மூலம் நேரடிப் பயனாளிகளாக சுமார் 20 பேர் வரை பயன் பெறவுள்ளார்கள் என அறிகின்றேன். அத்துடன் மறைமுகப் பயனாளிகளாக 200 இற்கும் மேற்பட்ட பயனாளிகள் தமது பால் உற்பத்திகளை இந்த நிறுவனத்திற்கு வழங்குவதன் மூலம் பயன் பெறவுள்ளார்கள்.

வடபகுதியைப் பொறுத்தவரையில் எமது பெரும்பான்மை உற்பத்திகள் மூலப் பொருட்களாகவோ அல்லது ஆரம்ப நிலையிலோ எமது பிரதேசங்களுக்கு வெளியே தென் பகுதிக்கோ அல்லது வெளிநாடுகளுக்கோ எடுத்துச் செல்லப்பட்டு அவற்றின் பயன்பாட்டுப் பெறுமதிகள் விருத்தி செய்யப்பட்டுமிகக் கூடிய விலையில் மீளவும் எமக்கு விற்பனை செய்யப்படுவது பல சந்தர்ப்பங்களில் உணரப்பட்டுள்ளது. சில சமயங்களில் இங்கு கொள்வனவு செய்யும் உற்பத்திப் பொருட்கள் பல நூறு மடங்கு இலாபத்தில் அரசாங்கத்தாலோ தெற்கத்தியவர்களாலோ, சர்வதேசக் கம்பனிகளாலோ விற்பனை செய்யப்படுகின்றன. உதாரணத்திற்கு இங்கு முல்லைத்தீவில் அரசு கொக்கிளாய் பிரதேசத்தில் எமது நிலத்தில் சேர்ந்துள்ள இல்மனைட் என்ற கனிய வளத்தைப் பிரித்தெடுக்க ஆலையொன்றைக்கட்டமுனைந்துள்ளது. வண்ணப்பூச்சுப் பொருளாக எமக்கு அடையாளம் காட்டப்பட்டு பெயின்ட் உருவாக்கத் திற்குப் பாவிக்கப்படப்போவதாக அது காட்டப்பட்டாலும் இல்மனைட் என்ற கனியவளம் அணு உற்பத்திப் பொருட்களுக்கு அத்தியாவசியமாக அமைகின்றது. பெயின்ட்டுக்குப் பாவிக்கப்படப் போவதாகக் கூறப்படும் இல்மனைட் அணு உற்பத்திக்கு ஆதாரக் கனியவளமாக கொள்வனவு செய்யப்பட்டால் எந்தளவு இலாபத்தை ஈட்டலாம் என்று எண்ணிப் பாருங்கள்!

எமது கனியவளங்கள், உற்பத்திப் பொருட்கள் மற்றவர்களுக்கு எத்துணை இலாபத்தைப் பெற்றுக் கொடுக்கும் என்பதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். அவற்றின் பெறுமதியை நாம் ஈட்ட முனைய வேண்டும். அந்த வகையில் தவசீலன் தன் சொந்த மண்ணில் இந்த முதலீட்டைச் செய்துள்ளார். சொந்த மண்ணில் செய்யும் போது நிலத்துடனும் மக்களுடனும் பிரதேசத்தினுடனும் உணர்வு பூர்வமாக இணைந்தே செய்வார்கள். இவ்வாறான முதலீடுகள் தான் எமக்கு வேண்டும்.

இந்தப் பால் பதனிடும் தொழிற்சாலையில் கிடைக்கப் பெறுகின்ற அனைத்து பால் உற்பத்திகளும் இங்கேயே பதனிடப்பட்டு பைக்கற்றுகளில் அடைக்கப்பட்டு பதனிடப்பட்ட பால் பைக்கற்றுகளாகவும், பருகுந் தயிராகவும், சுவையூட்டிய கட்டித் தயிராகவும், இனிப்புகளாகவும், கறி சமைக்க உதவும் பன்னீர்க் கட்டிகளாகவும், சுத்தமான நெய், சுவையூட்டப்பட்ட பால் எனப் பல்வேறு வடிவங்களில் எமது மக்களுக்கே மீள விநியோகிக்க இருப்பது இன்றைய தொழில் முயற்சியின் தனிச் சிறப்பம்சமாகக் கொள்ளப்படலாம்.

இங்கு கிடைக்கப் பெறும் ஊட்டச்சத்து மிக்க உணவுப்பொருட்கள் எமது குழந்தைகளின் உணவாகாரங்களாக உதவும் வகையில் மீண்டும் எமக்குக் கிடைக்க விருப்பது மகிழ்விற்குரியது.

இன்று பல கம்பனிகளும் கூட்டு நிறுவனங்களும் எமது பகுதியில் இருக்கும் இயற்கை வளங்களைச் சுரண்டிச் செல்வதற்காகப் பல்வேறு வடிவங்களில் கவர்ச்சிகரமான விளம்பரங்களுடன் எமது பகுதிகளை நோக்கிப் படையெடுத்து வருகின்றன. புதிய புதிய கடன் திட்டங்களை அறிமுகப்படுத்தல், வர்த்தகமேம்பாட்டிற்கு என்ற பெயரில் அதிகரித்த அல்லது தாழ்த்திய வட்டி வீதங்களின் கீழ் நுண்நிதி கடன்களை வழங்குதல் போன்ற நடவடிக்கைகளால் எம்மவர்களை சிறைப்படுத்தி விடுகின்றார்கள். அதே நேரம் எமது பகுதிகளில் உள்ள சிறு சிறு வர்த்தக நிலையங்கள், பல்பொருள் அங்காடிகள் ஆகியவற்றின் வியாபார முயற்சிகளைப் பாதிக்கக் கூடிய வகையில் மாபெரும் கடைகளை ஸ்தாபித்து அனைத்து வர்த்தக நடவடிக்கைகளையுந் தமதாக்கிக் கொண்டு கோடிக் கணக்கான பணங்களை இலாபமாகப் பெற்றுக் கொள்கின்றார்கள். அண்மையில் 'கோல் ரக்ஸி' என்ற பெயரில் ஒரு மிகப் பெரிய கம்பனி தமது சேவைகளை வடபகுதியில் ஆரம்பிப்பதற்காக வழங்கப்பட்ட விளம்பரங்களைக் கண்ணுற்றேன். இவ்வாறான கம்பனிகளின் உள்நுழைவுகளின் ஊடாக எமது பகுதிகளில் சிறு சிறு முதலீட்டுகளுடன் தமது வாழ்வாதார பொருளீட்டலுக்காக உழைக்கும் வாடகை ஓட்டோ ஓட்டுனர்களினதும் வாடகைக்கார் உரிமையாளர்களினதும் நிலைமைகளையும் நாம் ஒப்பிட்டு நோக்கவேண்டியுள்ளது. எம்முட் பலர் முதலீடு, முதலீடு என்று வெளியார்களை இங்கு கொண்டுவர கங்கணங் கட்டி நிற்கின்றார்கள். அவர்கள் எப்பேர்ப்பட்டவர்கள், அவர்களின் முதலீட்டு முனைப்புக்கள் எப்பேர்ப்பட்டவை என்பவற்றைத் தூர கால நோக்குடன் நாங்கள் பரிசீலிக்கத் தவறிவிடுகின்றோம். வெளியில் இருந்து வருபவர்களுக்கு எமது மண்மேல் மதிப்பும் மாண்பும் உணர்வும் இருக்காது. எனவேதான் எமது உள்நாட்டு மக்களும் புலம் பெயர் மக்களுந்தான் வடக்கு மாகாணத்தில் முதலீடுகளை ஏற்படுத்த வேண்டும் என்று விரும்புகின்றேன்.

இன்று வடபகுதியில் மட்டுமன்றி இலங்கையின் முழுப் பகுதிகளிலும் வெளிநாட்டு உள்நுழைவுகளும் அவற்றின் மேலாதிக்கங்களும் உணரப்பட்டு வருகின்றன. எமது பகுதிகளில் காணப்படுகின்ற கூடிய வருமானங்களை ஈட்டக்கூடிய இயற்கை வளம் மிக்க பகுதிகள், சுற்றுலாத்தளங்கள், இயற்கைத் துறைமுகங்கள், கடல்வளம், நீர்வளம், நிலவளம் என அனைத்தையுந் தமதாக்கிக் கொள்ள கழுகுகள் போன்று பல சக்திகள் உள்நாட்டிலிருந்தும் வெளிநாடுகளிலிருந்தும் எம்மைச் சுற்றிப் பறந்த வண்ணம் உள்ளன.

எம்மை அடக்கி ஆள வேண்டும் என்று இன்று எண்ணுகின்ற பெரும்பான்மைச் சமூகத்தினர் மிக விரைவில் எம்மையும் தமது சகோதரர்களாக அணைத்துக் கொண்டு வெளிநாட்டுச் சக்திகளிடமிருந்து இலங்கையையும் அதன் உள்ளக வளங்களையும் பாதுகாப்பதற்குச் சேர்ந்து போராட வேண்டிய ஒரு சூழ்நிலை ஏற்படப்போகின்றது என்பதை உணர்கின்றேன். தெற்கில் 15,000 ஏக்கர் காணி பிறிதொரு நாட்டுக்குத் தாரைவார்த்துக் கொடுத்துள்ளமை உங்கள் அனைவருக்குந் தெரியும். அதனால்தான் நான் இப்போதிருந்தே எமது நிலங்கள் பாதுகாக்கப்படல் வேண்டும், எமது விவசாய முயற்சிகள் தடைகளின்றி மேற்கொள்ளப்படல் வேண்டும், கடல் வளங்கள் ஏனையவர்களின் சுரண்டுகைகளுக்கு உட்படாது பாதுகாக்கப்படல் வேண்டும், எமது சுற்றுலா மையங்கள் வட மாகாண சபையின் நேரடிக் கண்காணிப்பில் விருத்திசெய்யப்படல் வேண்டும், இவைகளின் மூலம் கிடைக்கப் பெறுகின்ற நிதிகள் எமது மக்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்கு பயன்பட வேண்டுமென மீண்டும் மீண்டும் அழுத்தம் கொடுத்து வருகின்றேன்.

ஆனால் அன்றன்றைக்குத் தமக்கு அனுசரணைகள் கிடைத்தால்போதும் என்று எண்ணும் எம்மவர்கள் தூரநோக்கற்று எம்மைத் தூஷித்து வருகின்றார்கள். எமது பௌதீகப் பலம் எமது இயற்கைச் சூழலே. அது பறிபோய்விட்டால் நாம் வீழ்ந்து விடுவோம். இதை நாம் மனதில் ஆழமாய்ப் பதித்து வைத்திருக்க வேண்டும். எமது சிந்தனைகளைச் சில்லறைகளில் சிக்க வைத்து சீரிய ஒரு எதிர்காலத்தை வேற்றார் மழுங்கடிக்க விடாமல் நாம் பார்த்துக் கொள்வோமாக!

என் அன்பார்ந்த மக்களே! இப் பகுதிகள் அனைத்தும் எமது பூர்வீக நிலப்பரப்புக்கள். தமிழர்கள் இந்த நாட்டின் பூர்வீகக் குடிகள். இப்பகுதிகளில் 2500 ஆண்டுகளுக்கு முன்னரே திராவிடர்கள் வாழ்ந்ததற்கான தொல்லியல் ஆதாரங்களும், அடையாளங்களும் ஆராய்ச்சிகளின் மூலம் இன்று வெளிக்கொணரப்பட்டுள்ளன. இது காறும் பெரும்பான்மை மக்கள் கூறிவந்த வரலாற்று உண்மைகள் இன்று மீள் பரிசீலனைக்கு ஆளாக்கப்பட வேண்டியுள்ளது.

இன்றைய இளைய சமுதாயத்தைக் குறுக்கு வழிகளில் சென்று தீய பழக்கங்களைப் பழக்கிக் கொள்ளவும்கொலை, களவு, பாலியல் சேஷ்டைகள், மது பாவனை, கூரிய ஆயுதங்களுடனான அடாவடித்தனங்கள் போன்றவற்றைப் புரியவுந் தூண்டுகின்ற தீய சக்திகளிடமிருந்து எமது இளைய சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும். கல்வியறிவில் சிறந்தவர்களாக, இந்த நாட்டின் எதிர்காலத் தலைவர்களாக, புத்திஜீவிகளாக அவர்களை மாற்ற நாம் அனைவரும் இணைந்து செயற்பட வேண்டிய தருணம் வந்துவிட்டது. இதற்கு பெற்றோர்களின் பங்கு மிகமிக அத்தியாவசியம்.நாங்கள் சேர்ந்தே எமது வருங்காலச் சந்ததியினரைப் பார் போற்றும் சமூகத்தவர்களாக மாற்ற எத்தனிப்போமாக–என்றார்.(ஐ)

## பொலிஸ்....

(முதலாம் பக்கத் தொடர்சி)

உடுப்பிட்டியின் சந்நிதி கோவிணல் வீதி, வாசிகசாலைக்கு அருகில் உள்ள வீட்டுக்குள் நேற்று அதிகாலை ஒரு மணியளவில்புகுந்தகொள்ளையர்கள், வயோதிபத்தம்பதிகளை வாளால் வெட்டி படுகாயப்படுத்தியதுடன் கொள்ளையில் ஈடுபட்டுள்ளனர்.

கொள்ளையர்கள் பெருமளவு பணம், மற்றும் நகைகளை கொள்ளையடித்துச் சென்றுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

அதிகாலை ஒரு மணியிலிருந்து நான்கு மணி வரை கொள்ளையர்கள் அந்த வீட்டில் தங்கியிருந்து கொள்ளையடித்துள்ளனர்.

இந்தத் தம்பதிகளின் உறவினர் ஒருவருக்கு அப்பகுதியில் வீடு ஒன்று கட்டப்பட்டு வருவதாகவும், அதற்காக வங்கியிலிருந்து நேற்று முன் தினம் பணம் எடுத்து வந்த பின்னரே இந்தக் கொள்ளைச் சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும்கூறப்படுகின்றது.

கொள்ளையர்களின் தாக்குதலுக்கு இலக்காகிப் படுகாயமடைந்த தம்பதிகள் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். (ஐ–7)

## ஓய்பெற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சந்திப்பு இடம்பெற்றுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நடைபெற்று முடிந்த போர் தொடர்பில், இலங்கையில் பல புத்தகங்கள் வெளியாகியுள்ள போதிலும், அந்தப் புத்தகங்களில் முறையாக போர் தொடர்பில் ஆவணப்படுத்தப்படவில்லை என்பதால், அதனை அரசு ஆவணப்படுத்தும் முயற்சிகளில் களமிறங்கியுள்ளது.

எனினும் இந்த இரகசியச் சந்திப்பில், போரில் முக்கிய பங்காற்றிய பாதுகாப்பு அமைச்சின் முன்னாள்செயலாளர்கோட்டபாய ராஜபக்ஷ, அமைச்சர் பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா ஆகியோருக்கு அழைப்பு விடுக்கப்படவில்லை எனவும்ஆங்கிலஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

முறையான வரலாறுகளை உள்ளடக்கிய போர் ஆவணமொன்று வெளிவரும் வரையில், இறுதிப் போரை ஆவணப்படுத்தும்திட்டம் தொடர்பில், இரகசியம் பேணப்படவேண்டுமென ஓய்வு பெற்ற படைத் தளபதிகளிடம் ஜனாதிபதிமைத்திரிபாலசிறிசேன கேட்டுக்கொண்டார்எனவும் அந்த செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## முல்லையில்..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி முதல் முல்லைத்தீவு கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களம் முன்பாக மீனவர்கள் தொடர் போராட்டம் நடத்தினர்.

இது தொடர்பில் மீன்பிடி அமைச்சர் காமினி விஜித விஜயமுனி சொய்சா தலைமையில் முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நேற்று விசேட கலந்துரையாடல் ஒன்று இடம்பெற்றது.

இந்தக் கலந்துரையாடலில் மீள்குடியேற்ற பிரதி அமைச்சர் காதர் மஸ்தான், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ. சுமந்திரன், சாள்ஸ் நிர்மலநாதன், திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா, சி.சிவமோகன், மாவை சேனாதிராசா, டக்ளஸ் தேவானந்தா மற்றும் மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், வட மாகாண மீன்பிடி அமைச்சர் க.சிவநேசன், வடமாகாண சபை பிரதி அவைத் தலைவர் வ.கமலேஸ்வரன், வட மாகாணசபை உறுப்பினர்களான து.ரவிகரன் ஆ.புவனேஸ்வரன், மீன்பிடித் திணைக்களப் பணிப்பாளர் மற்றும் திணைக்களத் தலைவர்கள், பிரதேச செயலாளர்கள், மீனவர் அமைப்பின் பிரதிநிதிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்

இதன்போது சட்டவிரோத மீன்பிடித் தொழில்களை உடனடியாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் விஜித விஜயமுனி சொய்சா உத்தரவாதமளித்தார். அதனைவிட இப்போது வழங்கப்பட்டுள்ள மீன்பிடி அனுமதிகள் தற்காலிகமாகத் தடை செய்யப்படுவதாகவும், இது தொடர்பில் குழு ஒன்று ஆராய்ந்து இறுதி தீர்மானம் எடுக்கும் என்றும் உறுதிமொழி வழங்கப்பட்டது

தமது கோரிக்கைக்கு உரிய தீர்வு கிடைத்த நிலையில் மீனவர்கள் போராட்டத்தைக் கைவிட்டுள்ளனர். (ஐ)

## அவசர...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இதன்படிமூத்தஅமைச்சர்கள் இரண்டு பேர் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிடம், அவசர காலச் சட்டத்தை நடைமுறைப் படுத்துமாறு கோரியுள்ளனர்.

ரயில் பணியாளர்களின் வேலைநிறுத்தத்தால் முழுநாட்டு மக்களும் மிகப்பெரிய போக்குவரத்துச் சிக்கலைச் சந்தித்துள்ள நிலையில் அரசு கடும் சிக்கலுக்கு உள்ளாகியுள்ளது.

இதன் தொடர்ச்சியாகத் தற்போது ரயில் சேவையும் நாட்டின் அத்தியாவசியத் தேவைகளில் ஒன்றாக அரசால் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில் இதனை அத்தியாவசிய சேவையாக அறிவிப்பதன்மூலம் தற்போது நாட்டில் நிலவி வரும் வேலை நிறுத்தப் போராட்டங்களை நிறுத்திவிட முடியாது எனப்பரும் சுட்டிக்காட்டி வரும் நிலையில் அந்த அமைச்சர்களும் இதனை மைத்திரியிடம் சுட்டிக்காட்டியுள்ளனர். (ஐ)

## இலங்கைக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதிகரிக்கும் நோக்கிலேயே, இந்தப் பாரிய நிதி ஒதுக்கப்படவுள்ளது.

பாரிய– பலமான இராணுவத்தைக் கட்டியெழுப்பும் அமெரிக்க அதிபரின் திட்டத்துக்கு அமைய, 716 பில்லியன் டொலர் பெறுமதியான தேசிய பாதுகாப்பு அங்கீகாரச் சட்டத்துக்கு, அமெரிக்க பிரதிநிதிகள் சபையும், செனட் சபையும் அங்கீகாரம் அளித்திருந்தன.

இந்தியா, இலங்கை போன்ற ஏனைய நாடுகளுடன் நெருக்கமான பாதுகாப்பு உறவுகளை ஏற்படுத்திக் கொள்வதற்கு மேலதிக நிதியை வழங்குவதை இந்தச் சட்டம்நோக்காகக்கொண்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir





# இந்திய அணி மீது கடும் விமர்சனம்

இங்கிலாந்தில் நடைபெற்று வரும் இரண்டாவது டெஸ்ட் போட்டியில், இந்திய அணி சொதப்பலான ஆட்டத்தை வெளிப்படுத்தி வருகிறது. முதல் இன்னிங்ஸில் 107 ஓட்டங்களுக்குள் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்தது.

இதனால் ரசிகர்கள் இந்திய அணி வீரர்களை கடுமையாக விமர்சித்து வருகின்றனர்.

இதைக் கண்ட இந்திய அணியின் துவக்க ஆட்டக்காரர் ரோகித் சர்மா, இதே வீரர்கள் தான் இந்திய அணியை நம்பர் ஒன் இடத்திற்கு கொண்டு வந்தார்கள், கடினமான காலத்தில் நாம் ஆதரவு அளிக்க வேண்டாமா? என்ன இருந்தாலும் இது நம் அணி என்று டுவிட்டர் பக்கத்தில் இந்திய அணி வீரர்களுக்கு ஆதரவாகக் கருத்தை பதிவேற்றம் செய்துள்ளார்.

இதைக் கண்ட ரசிகர்கள், நீங்கள் உட்பட இதே வீரர்கள்தான் தொடர்ந்து அயல்நாடுகளில் சொதப்பி வருகிறீர்கள். நம்பர் 1 நிலைக்கு வந்ததற்கு நம் உள்நாட்டு பிட்ச்களே காரணம் என கூறியுள்ளனர்.

மேலும் உள்நாட்டில் ஓராண்டு ஆடிவிட்டு நம்பர் 1 இடத்தைப் பிடித்தோம். வெளியில் வென்றால் தான் நம்பர் 1 இடத்துக்கு தகுதி. வசதியான இடத்திலிருந்து விலகி வெற்றி பெற்றால்தான் நம்பர் 1 என்று குறிப்பிட்டுள்ளார்.

# 18 ஆவது ஆசிய விளையாட்டு விழா 18 இல் இந்தோனேசியாவில் ஆரம்பம்

18th ASIAN GAMES
Jakarta Palembang 2018

18 ஆவது ஆசிய விளையாட்டு விழா எதிர்வரும் 18 ஆம் திகதி இந்தோனேஷியாவில் ஆரம்பமாக வுள்ளது.

இந்த விளையாட்டுத் தொடரை இந்தியாவே முதன்முதலாக 1951ஆம் ஆண்டு நடத்தியது. 4 ஆண்டுகளுக்கு ஒருமுறை நடத்தப்படும் இந்த விளையாட்டுப் போட்டித் தொடர் ஆசியாவிலுள்ள பல்வேறு நகரங்களில் நடத்தப்பட்டு வருகின்றது.

தற்போது 18 ஆவது ஆசிய விளையாட்டுப் போட்டி இந்தோனேஷியாவின் தலைநகர் ஜகார்த்தாவிலும் தெற்கு சுமாத்ரா தலைநகர் பாலேம்பங்கிலும் நடைபெறவுள்ளது.

ஆசிய விளையாட்டுப் போட்டி இரு நகரங்களில் நடைபெறுவது இதுவே முதன்முறையாகும். தொடக்க விழா மற்றும் நிறைவு விழா ஆகியவை ஜகார்த்தா விலுள்ள கலேரா புங் கர்னோ மைதானத்தில் நடைபெறவுள்ளது.

கடந்த 2012ஆம் ஆண்டு போட்டியை நடத்தும் நகரத்தைத் தேர்வு செய்வதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில் வியட்நாம் நகரான ஹனோய் தேர்வு செய்யப்பட்டது. ஆனால் நிதி நெருக்கடி காரணமாக அந்நகரம் போட்டியை நடத்துவதிலிருந்து பின்வாங்கிக் கொண்டது.

இதனைத் தொடர்ந்து போட்டியை நடத்தும் உரிமையை இந்தோனேஷியாவுக்கு வழங்கியது ஆசிய ஒலிம்பிக் கூட்டமைப்பு. முறைப்படி இந்த போட்டியை 2019 ஆம் ஆண்டு தொடக்கத்தில்தான் இந்தோனேஷியா நடத்தத் திட்டமிட்டிருந்தது.

எனினும் பொதுத்தேர்தல் காரணமாக இந்த ஆண்டே நடத்தப்படுகின்றது. போட்டிக்கான அதிகாரபூர்வ சின்னங்களாக பிகின் பிகின் பறவை, அட்டுங் மான், காண்டாமிருகம் ஆகியவை ஏற்கெனவே அறிவிக்கப் பட்டிருந்தன.

இந்தப் போட்டிக்கான ஜோதி ஓட்டம் கடந்த மாதம் 16ஆம் திகதி டெல்லியில் தொடங்கியது. இந்த ஜோதி ஓட்டமானது ஆசியக் கண்டத்தின் 54 நகரங்கள், இந்தோனேஷியாவின் 18 மாகாணங்கள் வழியாக எதிர்வரும் 17ஆம் திகதி ஜகார்த்தாவை சென்றடைகின்றது.

ஆசிய ஒலிம்பிக் கூட்டமைப்பில் உறுப்பினர்களாக உள்ள 45 நாடுகளைச் சேர்ந்த 10 ஆயிரத்துக்கும் மேற்பட்ட வீர, வீராங்கனைகள் மற்றும் நிர்வாகிகள் இந்த ஆசிய விளையாட்டுப் போட்டியில் கலந்துகொள்கின்றனர்.

# தனுஸ்கவும் வன்டர்சேயும் மீண்டும் இலங்கைக்காக விளையாடுவார்கள்

## பயிற்சியாளர் ஹத்துருசிங்க தெரிவிப்பு



கொழும்பு, ஓக 13

அணியின் விதிமுறைகளை மீறியதற்காக தடைகளை அனுபவித்துவரும் தனுஸ்க குணதிலகவும் ஜெவ்ரி வன்டர்சேயும் மீண்டும் அணியில் இடம்பெறுவார்கள் என இலங்கை அணியின் பயிற்றுவிப்பாளர் சண்டிக ஹத்துருசிங்க மீண்டும் தெரிவித்துள்ளார்

இவ்வாறான விடயங்கள் இடம்பெற்றமை குறித்து நான் ஏமாற்றமடைந்துள்ளேன், என தனுஸ்க குணதில ஜெவ்ரி வன்டர்சேயின் விவகாரம் குறித்து ஹத்துருசிங்க தெரிவித்துள்ளார்.

இது கடந்த காலங்களிலும் இடம்பெற்றது,எங்கள் கலாசாரம் வித்தியாசமானது, எங்களால் இதனை சகித்துக்கொள்ள முடியாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதன் மூலம் அவர் ஒரு இரு நபர்களிற்குப் பாதிப்பை ஏற்படுத்தவில்லை முழு அணிக்கும் குடும்பத்திற்கும் பாதிப்பை ஏற்படுத்துகின்றார் எனவும் அவர் குறிப்பிட்டார்.

இதேவேளை மனிதர்கள் தவறிழைப்பது வழமை அவர்களுக்கு மற்றுமொரு வாய்ப்பை வழங்க வேண்டும்,அவர்கள் குற்றச்செயல்களில் ஈடுபடவில்லை அவர்கள் அணியின் விதிமுறைகளையே மீறியுள்ளனர் அவர்கள் மீண்டும் வருவார்கள் என அவர் தெரிவித்துள்ளார்.

# இந்தியக் கிரிக்கெட் சபையின் தலைவராக சௌரவ் கங்குலி?



இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவராக இந்திய அணியின் முன்னாள் தலைவர் சௌரவ் கங்குலி நியமிக்கப்படலாம் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.


இந்திய கிரிக்கெட் கட்டுப்பாடுச் சபைத் தலைவராக இருந்த அனுராக் தாகூரை, உச்ச நீதிமன்றம் பதவியில் இருந்து விலக்கியது. பின்னர், புதிய தலைவரை தெரிவு செய்ய தனி குழு ஒன்று நியமிக்கப்பட்டது.

தற்போது இந்தக் குழுவின் கீழ் இயங்கிக் கொண்டிருக்கும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு வாரியத்தின் தலைவர் பதவிக்கு, இந்திய கிரிக்கெட் அணியின் முன்னாள்தலைவர் கங்குலியின் பெயர் பரிந்துரைக்கப்பட்டுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

தலைவராக இருப்பவர்களுக்கு என நீதிபதி லோதா குழு பரிந்துரைத்த சில தகுதிகள் கங்குலிக்கு இருப்பதாகக் கூறப்படுகிறது. கங்குலி தற்போது மேற்கு வங்கக் கிரிக்கெட் சங்கத் தலைவராக இருக்கிறார்.

மேலும் இந்திய கிரிக்கெட் தொழில்நுட்ப பிரிவு, ஐ.பி.எல் ஒழுங்கமர்வு குழு உறுப்பினர், கிரிக்கெட் ஆலோசகர் குழு என பலவற்றிலும் இடம்பிடித்துள்ள கங்குலிக்கு மூத்த வீரர்கள் பலர் ஆதரவு தெரிவித்துள்ளனர். எனவே, கங்குலி தலைவராக வருவதில் சிக்கல் இருக்காது என்று கூறப்படுகிறது. (ஐ)

# பார்சிலோனா அணி தலைவராக மெஸ்ஸி




அன்ட்ரெஸ் இனியஸ்டாவுக்கு அடுத்து பார்சிலோனா அணியின் தலைவராக லயனல் மெஸ்ஸி நியமிக்கப்பட்டுள்ளார்.

ஏற்கனவே ஆர்ஜென்ரீன அணித் தலைவராகச் செயற்படும் மெஸ்ஸி, 2017 -18 பருவத்துடன் பார்சிலோன கழகத்தில் தனது 22 ஆண்டு வாழ்வை முடித்துக் கொண்ட இனியஸ்டாவின் இடத்தை பிடித்துள்ளார்.

எனினும் 2015 ஆம் ஆண்டு தொடக்கம் ஸ்பெயினின் பலம் மிக்க கழகத்தின் உத்தியோகபூர்வ உப தலைவராக இருக்கும் மெஸ்ஸி ஒருசில சந்தர்ப்பங்களில் தலைவராகச் செயற்பட்டுள்ளார். இந்நிலையில் அவர் தற்போது லா லிகா சம்பியனான பார்சிலோனாவுக்கு நிரந்தர தலைவராகச் செயற்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

சேர்ஜியோ புஸ்கட்ஸ் உப தலைவராக செயற்படவிருப்பதோடு கெராட் பிகு மற்றும் சேர்ஜி றொபார்டோ முறையே மூன்றாவது மற்றும் நான்காவது தலைவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

இந்த நான்கு தலைவர்களும் பார்சிலோனாவின் இளையோர் அக்கடமியான லா மெசியா ஊடாக பிரதான அணிக்கு தகுதி பெற்றவர்களாவர்.

31 வயதான மெஸ்ஸி 2001 ஆம் ஆண்டு பார்சிலோனா கழகத்தில் இணைந்து அந்த கழகத்திற்கு அதிக கோல்-கள் பெற்றவர் என்ற சாதனையை படைத்தவராவார்.

# இந்தியா - இலங்கை இடையிலான நல்லுறவு பாலமே மலையக மக்கள்

## பிரதமர் நரேந்திர மோடி புகழாரம்

கொழும்பு,ஓக.13

இந்தியாவில் பிறந்து இலங்கையில் வாழ்ந்து வரும் மலையக மக்கள் இரு நாடுகளுக்கிடையில் நட்பை வலுப்படுத்துவதுடன், நேசத்திற்கும் காரணமாக இருக்கின்றார்கள் என இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தெரிவித்துள்ளார்.

பூண்டுலோயா, டன்சினன்தோட்டத்தில் இந்திய அரசின் நிதி உதவியுடன் அமைக்கப்பட்ட 'மகாத்மா காந்திபுரம்' புதிய கிராமத்தின் வீடுகள் மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வு நேற்று இடம் பெற்றது.

இந்த நிகழ்வில் இந்தியாவிலிருந்து காணொளி மூலம் உரையாற்றியபோதே பிரதமர் மோடி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

கடந்த வருடம் ஹற்றனுக்கு விஜயத்தை மேற்கொண்டபோது நீங்கள் எனக்கு அளித்த வரவேற்பின் உற்சாகம் என் மனதில் பசுமையான நிகழ்வாக உள்ளது.

நண்பர்களே இன்று உங்களில் பல நூற்றுக்கணக்கானோர் இந்திய வீடமைப்புத் திட்டத்தின் கீழ் மலையகத்தில் அமைக்கப்பட்டுள்ள புதிதாக நிர்மாணிக்கப்பட்ட வீடுகளைப் பெற்றுக்கொள்கின்றீர்கள்.

இன்றைய தினம் நாம் ஒரு புதிய எதிர்காலத்தை உருவாக்கியுள்ளோம். இந்திய – இலங்கை நட்புறவில் ஒரு புதிய பரிமாணம் இன்றாகும்.

காணி உரிமையை பெறுவதற்காக நீங்கள் பயணிக்கும் பயணத்தில் இந்தியா துணை நிற்கும். இந்த வீடுகளை நிர்மாணிப்பதில் நீங்கள் நேரடியாகப் பயனாற்றியுள்ளீர்கள்.

பயனாளிகளின் வியர்வை, உழைப்பு,சிரமம்ஆகியவை இணைத்து அமைக்கும் இந்திய வீட்டுத் திட்டத்திற்கு இது ஒரு சிறப்பாகும். இந்த வீடுகள் வெறும் கட்டடங்கள் அல்ல. இது உங்களின் கனவுகள் மட்டுமல்ல. எங்களின் கனவும் அது தான்.

இலங்கை நாடானது சமாதானத்துடனும், பாதுகாப்புடனும், வளமுடனும் முன்னேற்றம் அடைவதையே இந்தியா விரும்புகின்றது.

இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன மற்றும் ரணில் விக்கிரமசிங்க ஆகியாரின் தலைமையின் கீழ் இந்த 10,000 வீடுகளை அமைப்பதற்கான காணிகள் எற்கனவே இணங்காணப்பட்டுள்ளதாக நான் அறிந்துள்ளேன்.

இந்த மேலதிக 10,000 வீடுகளும் மிக குறுகிய காலத்தில் நிர்மாணிக்கப்படும் என உறுதி கூறுகின்றேன். இந்திய அரசின் ஊடாக இலங்கையில் நிர்மாணிக்கத் திட்டமிட்ட 60,000 வீடுகளில் கிட்டதட்ட 47,000 வீடுகள் கட்டியமைக்கப்பட்டுள்ளது.

இந்திய அரசும், இந்திய மக்களும் உங்களின் முன்னேற்றப் பாதையில் என்றும் உறுதுணையாக இருப்போம் என நன்றியும் தெரிவிக்கின்றேன் – என்றார். (ஐ)

# மக்களுக்காக சர்வாதிகாரத்தை கையில் எடுப்பதில் தவறில்லை

## கூறுகிறார் பந்துல குணவர்தன

கொழும்பு, ஓக 13

மக்கள் நலனுக்காக ஆர்ப்பாட்டங்களைக் கட்டுப்படுத்த சர்வாதிகாரத்தைக் கையில் எடுப்பதில் தவறில்லை என மஹிந்த ஆதரவு நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

எரிபொருள் விலையேற்றம் மற்றும் தொடர்ச்சியான போராட்டங்கள் குறித்து செய்தியாளர்களுக்குக் கருத்து தெரிவித்தபோதே அவர் இவ்வாறு கூறினர்.

அவர் மேலும் குறிப்பிடுகையில் –

ரயில்வே ஊழியர்களின் போராட்டம் தற்காலிகமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட்டுள்ள நிலையில், பஸ் உரிமையாளர்கள் போராட்டம் நடத்தவுள்ளனர். இவ்வாறு ஒரு பிரச்சினை முடிவுக்கு கொண்டு வரப்படும்போது பிறிதொரு பிரச்சினை தோன்றுமாயின் அது நடுத்தர மக்களைப் பாதிக்கும்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன இந்த அரசின் குறைப்பாடுகளை சரி செய்வதை விடுத்து, மஹிந்த அரசின் மீது தொடர்ந்து குற்றம் சுமத்துகிறார்.

கடந்த அரசு போராட்டங்களைத் துப்பாக்கி முனையில் தீர்த்ததாகவும், தாங்கள் அவ்வாறு செயற்படவில்லை என்றும் கூறுகிறார்.

ஆம் கடந்த அரசில் ஒரு போராட்டம் ஒரு நாளுக்கு மேல் தொடரவில்லை. நாம் தொடரவும் விடவில்லை. ஒரு சிலருக்காக நாட்டு மக்கள் அனைவரையும் நாம் சிரமப்படுத்தவில்லை.

அரசு மக்களுக்காகச் சில சந்தர்ப்பங்களில் சர்வாதிகார செயற்பாடுகளைப் பின்பற்றுவதில் தவறில்லை. மக்களும் அதையே எதிர்பார்ப்பார்கள்.

இன்று ரயில்வே போராட்டத்தில் அரசாங்கம் ஜனநாயக கொள்கையினைப் பின்பற்றி 10 கோடி ரூபா நட்டத்தை எதிர்கொண்டுள்ளது. மறுபுறம் எரிபொருள் அதிகரிப்பினால் நடத்தப்படவுள்ள போராட்டத்தினாலும் பாரிய விளைவுகளைச் சந்திக்கவுள்ளது.

பிரதமர் ரணில் விக்ரமசிங்கவின் முறையற்ற பொருளாதார கொள்கையின் காரணமாகவே இன்று நாடு பாரிய பொருளாதார வீழ்ச்சியை எதிர்கொண்டுள்ளது. 2015 ஆம் ஆண்டு மக்கள் செய்த தவறின் பிரதிபலன்களையே இன்று அனுபவித்து வருகின்றனர் – என்றார். (ஐ)

# சீனா ஆதரவுடன் ஆட்சியை கைப்பற்றும் தேவையில்லை

## கூறுகிறார் வாசுதேவ நாணயக்கார

கொழும்பு, ஓக.13

மக்களின் ஆதரவு தற்போது முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பக்கம் உள்ளமையினால் சீனாவின் ஆதரவை கொண்டு மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றுவற்கான அவசியம் எமக்கு இல்லை என நாடாளுமன்ற உறுப்பினர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்–

ஆட்சி மாற்றத்தை ஏற்படுத்த 2015 ஆம் ஆண்டு தேசிய அரசு அமெரிக்காவை நாடியதை போன்று நாங்கள் கடந்த வாரம் பொது எதிரணியினர் ஆரம்பித்த அரசைகவிழ்க்கும் போராட்டத்துக்கு சீனாவை நாடவில்லை. சீனா எமது நாட்டு உள்ளக அரசியல் விவகாரங்களில் தலையிடவில்லை. சீனாவின் ஆதரவைக் கொண்டுதான் மீண்டும் ஆட்சியைக் கைப்பற்றவேண்டிய அவசியம் எமக்கு இல்லை ஏனெனில் மக்கள் ஆதரவு தற்போது மஹிந்த பக்கமே.

பிரதியமைச்சர் ரஞ்சன் ராமநாயக்க, ரயில்வே தொழிற்சங்கங்கள் மேற்கொண்டு வந்த போராட்டத்தின் பின்னணியில் மஹிந்த, நாமல், பஸில் ஆகியோரே காணப்படுகின்றனர் என்று குறிப்பிட்டுள்ளமை அரசின் இயலாமையினை வெளிப்படுத்தியுள்ளது.

இந்த விடயத்திற்கும் மஹிந்தவின் குடும்பத்திற்கும் தொடர்பு உண்டு என்ற விடயத்தை இவரால் ஆதாரபூர்வமாக நிரூபிக்க முடியுமா? பொய்யான கருத்துக்கனை குறிப்பட்டு மக்களைச் சொற்ப நேரத்திற்கு அரசியல் ரீதியில் திசைத்திருப்பி விட இதுவொன்றும் மூன்று மணித்தியாலத் திரைப்படமல்ல என்ற விடயத்தை இவர் புரிந்து கொள்ளவேண்டும் – என்றார்.

# திஸ்ஸவின் புதிய கட்சி அடுத்த மாதம் உதயம்

கொழும்பு, ஓக.13

ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்களை ஒன்று சேர்பதற்கான புதிய கட்சியொன்றை உருவாக்கத் தீர்மானித்துள்ளதாகத் தெரிவிக்கும் அந்தக் கட்சியின் முன்னாள் செயலாளர் திஸ்ஸ அத்தநாயக்க, செப்ரெம்பர் மாத இறுதியில் புதிய கட்சியை அறிவிக்கவுள்ளதாவும் கூறியுள்ளார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்குத் தெரிவிக்கையில் –

தற்போதைய அரசியல் களத்தில் பெரும் இடைவெளியொன்று தோன்றியுள்ளது. ஐக்கிய தேசியக் கட்சியிலிருந்து விலகிச் சென்றவர்கள், விலக்கப்பட்டவர்களுக்கான புதிய அரசியல் களமொன்று அவசியப்படுகின்றது.

கட்சியொன்றின் தேவையை உணர்ந்துள்ள ஐ.தே.க வின் உறுப்பினர்கள் பலர் கிராம மட்டத்தில் உள்ளனர். மறுமுனையில் ஐ.தே.க மற்றும் சுதந்திரக் கட்சி ஆகியவற்றை விரும்பாத இளைஞர்கள் குழுவொன்றும் உள்ளனர்.

மேற்குறிப்பிட்டவர்களை ஒன்றிணைத்து புதிய அரசியல் பயணம் ஒறைத் தொடர்வதாகத் தீர்மானித்தே புதிய கட்சியை ஆரம்பிக்கவுள்ளேன் – என்றார். (ஐ)



வடக்கு மாகாண அவைத்தலைவர் சீ.வீ.கே.சிவஞானத்தின் 2018ஆம் ஆண்டுக்கான பிரமாண அடிப்படையிலான மூலதன நன்கொடை நிதியிலிருந்து வண்ணார் பண்ணை கோட்டையம்பதி முருகன் ஆலயம், அரியாலை ஸ்ரீ நாகபூசணி அம்மன் ஆலயம் ஆகியவற்றுக்கான ஒதுக்கீடுகள் கடந்த வெள்ளிக்கிழமை வழங்கப்பட்டன. நல்லூர் பிரதேச செயலகத்தில் வைத்து 5 லட்சத்து 30 ஆயிரம் ரூபாவுக்கான காசோலைகள் வழங்கப்பட்டன. இந்த நிகழ்வில் நல்லூர் பிரதேச செயலர் திருமதி எழிலரசி அன்ரன் யோகநாயமும் கலந்துகொண்டார்.




ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம் தெல்லிப்பழை

வருடாந்த மகோற்சவம் - 2018

13.08.2018முதல் 24.08.2018 வரை

பிரதான உற்சவங்கள்

கொடியேற்றம்
13.08.2018 திங்கட்கிழமை முற்பகல் 10.00 மணி

திருமுறைத் திருவிழா
15.08.2018 புதன்கிழமை மாலை 6.00 மணி

திருமஞ்சம் - வீதிவலம்
18.08.2018 சனிக்கிழமை மாலை 6.00

வேட்டைத் திருவிழா
21.08.2018 செவ்வாய்க்கிழமை பிற்பகல் 2.00 மணி

கைலாச வாகன வீதிவலம்
21.08.2018 செவ்வாய்க்கிழமை மாலை 6.00 மணி

சப்பறத் திருவிழா
22.08.2018 புதன்கிழமை மாலை 4.00 மணி

தேர்த் திருவிழா
23.08.2018 வியாழக்கிழமை காலை 9.00 மணி

தீர்த்தத் திருவிழா
24.08.2018 வெள்ளிக்கிழமை காலை 08.30 மணி

கொடியிறக்கம்
24.08.2018 வெள்ளிக்கிழமை மாலை 6.00 மணி

பிராயச் சித்த அபிஷேகம்
25.08.2018 சனிக்கிழமை காலை 6.00 மணி

வைரவர் பொங்கல்
25.08.2018 சனிக்கிழமை மாலை 3.00 மணி

நிர்வாக சபை,
துர்க்காதேவி தேவஸ்தானம், தெல்லிப்பழை.


இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 13.08.2018 இல் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.